Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

# தினமுரசு

தினப்பதிப்பு

THINAMURASU

விஷானி நகை மாளிகை

மங்கையர் மனம் கவரும் தங்க நகைகளுக்கு



இல. 187, கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்.
0212219510 (C/1675)

முரசு – 02 திருவள்ளுவர் ஆண்டு 2043 புரட்டாதி 14 ஞாயிற்றுக்கிழமை (30.09.2012) பக்கங்கள் 20 ஓசை – 364





கூட்டமைப்பின் தந்திரோபாயம்! (05)



முதியோரைப் பராமரிக்கப் பயிற்சி (06)



ஜனநாயக அரசாங்கத்தை வற்புறுத்த முடியாது (10)



'ஹாட் டிஸ்க்' வாங்கப் போகிறீர்களா? (12)



நித்தியானந்தாவால் ஆபத்து (17)



# எதிர்ப்பு அரசியல் அல்ல முஸ்லிம் காங்கிரஸின் வழி

## ஹரீஸ் எம்.பி. தெரிவிப்பு



(கல்முனை)

கிழக்கு மாகாணசபையில் அரசுக்கு ஆதரவு வழங்குவதென மு.கா. எடுத்த முடிவினை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கேள்விக்குட்படுத்தி வருவது கவலையளிக்கிறது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அரசியலைப் போல், மு.காங்கிரஸ் செய்ய முடியாது என மு.காங்கிரஸின் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸ் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணசபைத் தேர்தலுக்குப் பின்னரான விவகாரங்களைத் தெளிவுபடுத்தும் வகையில் நேற்றுக்காலை கல்முனை பர்ஜீஸ் மண்டபத்தில் ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீஸ் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

கிழக்கு மாகாணத்தில் த.தே. கூட்டமைப்புடன் இணைந்து மு.காங்கிரஸ் ஆட்சியமைத்திருந்தால், முஸ்லிம்கள் நாட்டைக் காட்டிக் கொடுத்து விட்டதாக

(19) ஆம் பக்கம் பார்க்க

## தமிழ்சேவை முன்னாள் பணிப்பாளர் உருத்திராபதி காலமானார்

(யாழ்ப்பாணம்)

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனன தமிழ் சேவையின் முன்னாள் பணிப்பாளர் தம்பையா உருத்திராபதி நேற்று மாலை யாழ்.போதனா வைத்தியசாலையில் உயிரிழந்தார்.

யாழ்.சேவையில் பகுதி நேர அறிவிப்பாளராகத் தற்போது கடமையாற்றிவரும் அவர் நேற்று முன்தினம் இடம்பெற்ற வல்லிபுர ஆழ்வார் தேர் உற்சவத்தின் நிகழ்வுகளை வானொலி ஊடாக அஞ்சல் செய்வதற்காகச் சென்றிருந்தார். எனினும், நேற்றைய தினம் உடல் நிலை இயலாத்

(19) ஆம் பக்கம் பார்க்க

# இராணுவத்திற்கு காணி சுவீகரிக்க முன் மக்களுக்கு மாற்றிடம் வழங்க வேண்டும்

## உச்சநீதிமன்றம் உத்தரவு

அம்பாறை மாவட்டத்தில், ஒலுவில் பிரதேசத்திலுள்ள கேசன்கேணி கிராம மக்களுக்கு மாற்றுக் காணிகளை வழங்காமல் அவர்களின் காணிகளை இராணுவ முகாம் அமைப்பதற்காக சுவீகரிக்கும் அரசாங்கத்தின் நடவடிக்கையை தடுக்கும் விதத்தில் உச்சநீதி மன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

கேசன்கேணி கிராம மக்களுக்கு .மாற்றிடங்களை வழங்கும்வரை அவர்களின் காணிகளை இராணுவமுகாம் அமைக்கும் தேவைக்காக, சுவீகரிப்பதை நிறுத்துமாறு உச்சநீதி மன்றம் அரசாங்கத்துக்கு உத்தரவிட்டுள்ளது.

(19) ஆம் பக்கம் பார்க்க

## மீள்குடியமர்ந்த கேப்பாபிலவு மக்களின்

# அடிப்படை வசதிகளைச் சீர்செய்ய முல்லை செயலகம் நடவடிக்கை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள கேப்பாபிலவுக் கிராமத்தில் மீள்குடியமர்ந்துள்ள குடும்பங்களுக்கான அடிப்படை வசதிகள் படிப்படியாகச் சீர் செய்யப்பட்டு வருவதாக முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் என்.வேதநாயகன் தெரிவித்தார்.

இக்கிராமத்தில் சுமார் 165 குடும்பங்கள் தற்போது மீள் குடியமர்த்தப்பட்டுள்ளனர். நடுக் காட்டில் அநாதரவாக இக்குடும்பங்களைக் கொண்டு சென்று இறக்கிவிடப்பட்டிருப்பதாக ஊடகங்களில் தகவல்கள் வெளியாகிக்கொண்டிருக்கின்றன. இது குறித்து முல்லை அரச அதிபரிடம் கேட்டபோது அவர் இவ்விடயம் குறித்த களநிலைவரத்தை விளக்கினார்.

இந்த மக்களின் குடியமர்வுக்காக 100 ஏக்கர் காணியை நாம் கையகப்படுத்தினோம். இக்காணி எல்லோரும் கூறுவது போல காடு அல்ல. ஏற்கனவே நடுத்தரக் குடும்பங்களின் குடியேற்றத்துக்காக வழங்கப்பட்ட குடியிருப்புக் காணியாகும். பின்னர் இக்காணி கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்டது. அங்கே தென்னை மற்றும் மா மரம் போன்ற பயன் தரும் மரங்கள் உள்ளன. பற்றைகளும் மண்டிக் காணப்படுகின்றது. அவை அனைத்தும் தற்போது துப்புரவு

(19) ஆம் பக்கம் பார்க்க

# இந்திய இறையாண்மைக்கு புலிகளால் அச்சுறுத்தல்

(புதுடில்லி)

இந்திய இறையாண்மைக்கு அச்சுறுத்தலாக விடுதலைப் புலிகளின் செயற்பாடுகள் தொடர்ந்தும் உள்ளதன் காரணமாகவே அந்த அமைப்பின் மீதான தடை நீடிக்கப்பட்டு வருவதாக இந்திய மத்திய அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இந்தியாவில் விடுதலைப் புலிகள் அமைப்பு சட்டவிரோத தடுப்புச்சட்டத்தின் கீழ் தடை செய்யப்பட்டுள்ளதுடன், அந்தத் தடையை நீடிக்க வேண்டுமா என்பது குறித்து நீதிபதி ஆர். கே. ஜெயின் தலைமையிலான நீதிமன்றம் நேற்றுச் சென்னையில் விசாரணை நடத்திய போதே இந்திய உள்துறை அமைச்சகம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக உள்துறை அமைச்சகம் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இந்தியாவின் இறையாண்மைக்கும், சுயாதீனத்தன்மைக்கும் புலிகள் தொடர்ந்தும் அச்சுறுத்தலாக அமைந்துள்ளனர்.

இலங்கையில் புலிகள் யுத்த ரீதியாக தோற்கடிக்கப்பட்ட போதிலும், எஞ்சிய விடுதலைப் புலி உறுப்பினர்கள் தமிழகத்தில் மீள ஒருங்கிணைய முயற்சித்து வருகின்றனர்.

மாவோயிச தீவிரவாதிகளுடன் இணைந்து மீளவும் நட

(19) ஆம் பக்கம் பார்க்க

# கோட்டக் கல்விப் பணிப்பாளரின் வீட்டிலிருந்த நகைகள் கொள்ளை

(அச்சுவேலி)

அச்சுவேலி வடக்கு பாடசாலை வீதிப் பகுதியில் அமைந்துள்ள வீட்டிலிருந்து பல இலட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகள் திருட்டுப் போயுள்ளதாக அச்சுவேலிப் பொலிஸ் நிலையத்தில் சம் பந்தப்பட்வர்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி பகுதில் வசித்து வரும், கோப்பாய் கல்விக் கோட்டக் கல்விப் பணிப்பளாராக கடமையாற்றி வரும் வி. பாலசுப்பிரமணியம் என்பவரது வீட்டிலேயே இத்திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. கடந்த வியாழக்கிழமை வீட்டார் தங்க நகைகளை எடுப்பதற்காக நகைகள் வைக்கப்பட்டிருந்த அலுமாரியினை திறந்த போது நகைகள் வைக்கப்பட்டிருந்த பை வெறுமையாக இருந்ததைக் கண்டு அவர்கள் திகைப்படைந்ததுடன், நகைகள் திருட்டுப் போயிருந்ததையும் அப்போதே அவதானித்துள்ளனர். இவ்வாறு திருட்டுப் போன நகைகள் சுமார் முப்பது பவுண் வரை எனவும் இவற்றின் பெறுமதி பல இலட்சம் ரூபாய்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக அவர்கள் உடனடியாக அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததைத் தொடர்ந்து அச்சுவேலிப் பொலிஸார் சம்பவம் இடம் பெற்ற அப்பகுதிக்கு வந்து விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (03)

# பயங்கரவாத அழிப்பின் மூலம் முன்னுதாரணமாக இலங்கை

## அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

பயங்கரவாதத்தை இல்லாதொழித்த இலங்கை உலக நாடுகளுக்கு முன்னுதாரணமாக திகழ்கின்றது என வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 67ஆவது கூட்டத்தில் கலந்து கொண்டுள்ள அமைச்சர் இந்தக் கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

மிகவும் சவால் மிக்க உலக பொருளாதாரத்தில் இலங்கை 8 வீத பொருளாதார வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது.

(19) ஆம் பக்கம் பார்க்க

# ஆசிரியருக்கு அவசரகாலக்கடன் வழங்கவில்லையென விசனம்

அவசரகால கடன் கிடைக்காமல் தேசிய பாடசாலைகள் பலவற்றின் ஆசிரியர்கள் சிரமங்களை எதிர்நோக்கி யுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

2001ஆம் ஆண்டு முதல் இதுவரையில் ஆசிரியர்களுக்கான அவசரகால கடன் வழங்கப்படவில்லை என சங்கத்தின் பிரதம செயலாளர் ஜோசப்

(19) ஆம் பக்கம் பார்க்க

# யாழ். மற்றும் தீவுப்பகுதியில் கடும் காற்றுடன் மழை



யாழ்ப்பாண நகரப்பகுதியில் நேற்றிரவு வீசிய கடும் காற்றி னால் பல கூரைகள் தூக்கி வீசப் பட்டன.

நேற்றிரவு கடும் மழையுடன் கூடிய காற்று வீசியதையடுத்து யாழ். நகரப்பகுதியில் உள்ள பல கடைகளில் பெயர்ப்பல கைகள் தூக்கி வீசப்பட்டுள்ளன. கோவில் வீதியில் பெரிய மரங் கள் முறிந்து மின் கம்பிகள் அறுந் தும் தொலைபேசி கம்பிகள் அறுந்தும் காணப் பட்டன.

யாழ். பண்ணை பஸ் தரிப்பு நிலை யக் கூரைத்தகடு கள் தூக்கி வீசப் பட்டதுடன், மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட பெயர்ப்பலகைகள் பலவும் நொரு ங்கி வீழ்ந்துள்ளன. நகரப்பகுதியில் உள்ள சில கடைகளில் கூரைத் தகடுகளும் சேதமடைந்தன.

இதேவேளை அல்லைப்பிட்டி வெண்பிறவி நகர் புதிய குடி யேற்றத் திட்டத்தில் அமைந்திருக் கும் தேவாலயம் சேதமடைந் திருப்பதுடன் மின்சாரக் கம்பங் கள் உடைந்திருப்பதாகவும் ஊர் காவற்றுறை பிரதேசத்திற்குட் பட்ட பகுதியில் மீள்குடியேறிய தற்காலிக குடிசைகளும் சேதம டைந்துள்ளதாகவும் தெரியவரு கின்றது.

புங்குடுதீவு, வேலணைப் பகு திகளிலும் சிறு சிறு சேதங்கள் ஏற்பட்டதுடன் பனை மரங்களும் பயன்தரும் மரங்களும் வீழ்ந்துள் ளன. (பா,இ,85,05)

# சண்டிலிப்பாய் பிரதேச சிறுவர் தின விழா

சண்டிலிப்பாய் பிரதேச செய லகத்தின் சிறுவர் தினம் நாளை காலை 9.00 மணியளவில் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரதேச செயலர் தலைமை யில் நடைபெறும் இவ்விழாவில் யாழ். மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் பிர தம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக சுகா தார மருத்துவ அதிகாரி டாக்டர் சிவபாதம், கோட்டக் கல்வி அதி காரி சி.சிவானந்தராசா மற்றும், மானிப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (104)





யாழ். நாவலர் வீதியில் உள்ள சீரடி சாயி சமிதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற இரதோற்சவத்தில் சீரடி சாயி தேருக்கு எழுந்தருள்வதையும், தேர் வீதிவலம் வருவதையும் காணலாம். சீரடி சாயி பாபா தேரில் வலம்வருவது இலங்கையில் இது முதல் தடவை என சீரடி சாயி இல்ல நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர். (137)

# கண்டிக்கு 'சுருட்டு' கொண்டு சென்றவர் கைது

(யாழ்ப்பாணம்)

அனுமதியின்றி 30 ஆயிரம் சுருட்டுக்களை (கறுப்பு) தென் பகுதிக்கு எடுத்துச் செல்ல முற் பட்ட நபர் ஒருவர் யாழ். பொலி ஸாரினால் கைதுசெய்யப்பட்டு யாழ். நீதிமன்றத்தில் பாரப்படுத் தப்பட்டுள்ளார்.

யாழ். தனியார் பேருந்து நிலையத்தில் வைத்தே குறித்த நபர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்ட போது அவற்றை எடுத்துச் செல் வதற்கான அனுமதிப் பத்திரம் இல்லாததன் காரணமாக அவரை பொலிஸார் கைதுசெய்ததாகத் தெரியவருகின்றது.

இந்தநபர் குறித்த சுருட்டுக் களை கண்டிக்கு எடுத்துச்செல்ல விருந்ததாகத் தெரியவருகின்றது.

இந்தச் சம்பவத்தையடுத்து இந்த சுருட்டுக்களை குறித்த நபருக்கு விற்பனை செய்த இரு வரும் யாழ். பொலிஸாரினால் விசாரணைக்குட்படுத்தப் பட்டி ருப்பதாகவும் தெரியவருகின்றது.

இவ்வாறு பெருமளவு சுருட் டுக்களை எடுத்துச் சென்றதனால் அது குறித்து மதுவரித் திணைக் களத்தின் அனுமதி பெற்றிருக்க வேண்டும் என்று யாழ். பொலி ஸார் தெரிவித்தனர். (பா)

# இணுவில் பொதுநூலகத்தில் வாசிப்புக்கூடம்

(யாழ்ப்பாணம்)

வலி. தெற்கு பிரதேச சபை யின் ஏற்பாட்டில் இணுவில் பொது நூலகத்தில் வாசிப்புக்கூடம் அமைத்தலும் புதிய நூல்களை காட்சிப்படுத்தும் நிகழ்வும் நாளை 1 ஆம் திகதி தொடக்கம் 31 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.

வாசிப்பு மாதத்தை முன்னிட்டு 'அறிவால் நிரம்பிய சமுதாயம் ஒன்றை உருவாக்குவோம்' என்ற தொனிப்பொருளில் இடம்பெறும் மேற்படி நிகழ்வானது பொது நூலக மண்டபத்தில் நாளை காலை 10.00 மணிக்கு ஆரம்ப மாகும்.

# விநாயகர் ஆலயத்தில் நாளை குளிர்த்தி

(வடமராட்சி)

தொண்டைமானாறு, தச்ச கொல்லை சித்தி விநாயகர் ஆலய குளிர்த்தி நாளை பக்திபூர்வமாக நிகழவுள்ளது.

கடந்த 19 ஆம் திகதி ஆரம்பமான அலங்கார உற்சவம் 10 தினங்கள் நடைபெற்றது. 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இளைஞர் திருவிழாவும், 29 ஆம் திகதி சனிக்கிழமை தீர்த்த வைபவமும் நடந்தேறின.

நாளை இடம்பெறும் குளிர்த்தி நிகழ்வில் விநாயகப் பெருமா னுக்கு விசேட அபிஷேக ஆராத னைகள் மற்றும் வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து விநாய கப் பெருமான் வீதியுலா எழுந்த ருள்வார். மதியம் மகேஸ்வர பூசையும் நடைபெறும். (68)

# நல்லூர் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் வர்த்தக நிலையங்கள் மீது திடீர் சோதனை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்ற சுகாதார வைத்திய அதி காரி பிரிவின் நல்லூர் பகுதியில் நல்லூர் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தலைமையில் சுகா தாரப் பாதுகாவலர்களின் உதவி யுடன் பல்பொருள் வாணிப நிலை யங்கள் மீது திடீர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

இதில் காலாவதியான உண வுப் பொருட்களான மென்பான வகை, ஜாம் வகை, பிஸ்கட் வகை, பால்மா வகை, இனிப்பு சொக் கலேட் வகை, கறியுப்பு மற்றும் சவர்க்கார வகை போன்ற பலவும் கண்டு பிடிக்கப்பட்டு அவை யாவும் கைப்பற்றப்பட்டு விற்பனை நிலைய உரி மையாளர்கள் எச்சரிக் கப்பட்டு குறித்த குற்றத் தினை ஏற்றுக் கொண் டதன் பிரகாரம் முதல் மன்னிப்பு வழங்கப்பட்டு அவர்கள் முன்னி லையில் அவர்களின் பூரண சம்மதத்துடன் உணவுப் பொருட் கள் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திற்கு எடுத்துவரப் பட்டு அழிக்கப்பட்டது.



மேலும் இவ்வாறான குற்றம் மீண்டும் இழைக்கும் பட்சத்தில் அவர்களுக்கு எதிராக சட்ட நட வடிக்கை எடுக்கப்படும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறான சோதனை செயற்பாடுகள் தொடர்ந்தும் யாழ். மாநகர சபையின் ஏனைய பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுகளிலும் விரிவுபடுத்தப்படும் எனவும், வர்த்தக சங்கங்கள் இதற்கான பூரண ஒத்துழைப் பினை வழங்குமாறும் யாழ். மாந கர சபையின் பிரதம பொதுச் சுகாதாரப் பரிசோதகரும் பதில் உணவு மருந்துப் பரிசோதகரு மான க.ஆ.ஜீவநாதன் கேட்டுக் கொண்டுள்ளார்.

## தினமுரசின் பிறந்தநாள் வாழ்த்துக்கள்



6 ஆவது அகவையில்

HAPPY BIRTHDAY

பெயர்: ஸ்ரீ.ஷாதனா
முகவரி: 4 ஆம் வட்டாரம், வேலணை கிழக்கு, துறையூர்.

## பாராட்டி வாழ்த்துகிறோம்



பெற்றவர்க்கும் கற்ற குருவுக்கும்
ஊரோடு உற்றவர்க்கும் பற்றுடன்
பயிலும் பள்ளிக்கும் முயற்சித்
தூரிகையால் உயர்ச்சிப் படியமைத்து
பெறுபேறெனும் அற்புத ஓவியத்தை
வரைந்த மு/குமுளமுனை மகா
வித்தியாலய மாணவி

**செல்வி சித்திரவேல் சௌமியா**

புலமைப் பரிசில் பரீட்சையில் 177 புள்ளிகள் பெற்று சித்தியடைந்துள்ளார். இவரது சாதனைப் பயணம் மேலும் சிறப்பாக அமைய வாழ்த்துகின்றோம்.

அப்பா, அம்மா, சகோதரர்கள் மற்றும் உறவினர்கள்.

(C/1869)

## வாழ்க வளமுடன்

தினமுரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்

பெயர் : உ. கானுஜன்
முகவரி: வேலணை மேற்கு, கண்ணபுரம்.



பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

அகவை 3 இல்

# கிரவல் வீதிகளுக்கு தார் ஊற்றுமாறு கோரிக்கை

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பிரதேசசபை எல்லைக்குட்பட்ட வடமராட்சி கிழக்கு, உடுத்துறை, ஆழியவளை, கொடுக்குளாய் போன்ற கிராமங்களில் உள்ள கிரவல் வீதியாக மாற்றியமைக்கப்பட்ட வீதிகளை தார் ஊற்றி செப்பனிட்டு தருமாறு அப்பகுதி மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்கள்.

சுவிஸ் அபிவிருத்தி திட்ட நிறுவனத்தினால் புதிதாக கட்டிக் கொடுக்கப்படும் வீட்டுத் திட்ட வீதிகளே மணல் பாங்காக இருப்பதால் வீடுகட்டுவதற்கான பொருட்களை எடுத்துச் செல்வதிலுள்ள சிரமத்தை கருத்தில் கொண்டே இவ்வீதிகள் கிரவல் வீதியாக மாற்றியமைக்கப்படுகின்றது.

மேற்படி வீதியை மாற்றியமைக்கும் பணியில் பருத்தித்துறை பிரதேசசபையுடன் இணைந்து உடுத்துறை மீள் எழுச்சித்திட்டத்தினரும் ஈடுபடுவதுடன் கிராம அபிவிருத்தி சங்கமக்களும் பங்களிப்பு செய்யவுள்ளனர்.

இதேவேளை பருத்தித்துறை பிரதேசசபைக்குரிய உடுத்துறை வேம்படி நரசிம்ம வீதி, கொடுக்குளாய் அம்மன் வீதி, பழம் றோட் வீதி, பாரதி வாசிகசாலை வீதி, அஞ்சாம்பனை ஞானவைரவர் வீதி ஆகிய வீதிகள் சென்றவாரம் மீள்எழுச்சித்திட்டத்தின் கீழ் கிரவல் வீதியாக மாற்றப்பட்டது.

எனினும் தற்போது அவை போக்குவரத்துக்கு ஏற்ற வீதிகளாகக் காணப்படவில்லை. அத்துடன் மழை காலத்தில் சேறும் சகதியுமாகக் காணப்படும் இவ்வீதிகளை பயன்படுத்த முடியாத நிலை காணப்படுகிறது.

இந்நிலையில் தற்போது வீட்டுத்திட்டம் வழங்கப்பட்டு வரும் நிலையில் இந்த வீதிகளை தார் ஊற்றி செப்பனிட்டு போக்குவரத்துக்கு உகந்த வீதியாக மாற்றியமைத்துத் தரும்படி அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (116)

# வவுனியாவில் சிறுவர் தின நிகழ்வு

(வவுனியா)

வவுனியா மாவட்ட தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையானது உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு வவுனியா மாவட்ட அரச சார்பற்ற நிறுவன ஒன்றியத்துடன் இணைந்து ஒக்ரோபர் மாதம் முழுவதும் வவுனியா மாவட்டத்தின் பல வேறு இடங்களில் உலக சிறுவர் தினத்தினை நடாத்தத் தீர்மானித்துள்ளது.

நாளை வவுனியா பொது வைத்தியசாலையில் இடம் பெறவுள்ள ஆரம்ப நிகழ்வில் சிறுவர் உரிமை மற்றும் பாதுகாப்புத் தொடர்பான காணொளி காட்சிப்படுத்தலும், அறிவூட்டலும், வாக்கெடுப்பு, சேவை வழங்குநர் விபரம் என்பன நடைபெறவுள்ளதாக மாவட்ட சிறுவர் பாதுகாப்பு அதிகாரி த. செல்வகுமார் தெரிவித்தார்.

இதனைத்தொடர்ந்து மக்கள் கூடும் இடங்களில் கிராமங்கள் போன்றவற்றில் ஒக்ரோபர் மாதம் முழுவதும் இந்நிகழ்வானது நடைபெறவுள்ளதாகவும் 31ஆம் திகதியன்று மகஜர் கையளிக்கும் நிகழ்வு மாவட்ட செயலகத்தில் இடம்பெறும் எனவும் தெரிவித்தார். (160)

# இடியன் துப்பாக்கி வைத்திருந்தவர் கைது

(வவுனியா)

வவுனியா- மறிச்சுக்கட்டிப்பகுதியில் விசேட அதிரடிப்படையினரினால் இடியன் துப்பாக்கியுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் தகவல்கள் தெரிவித்துள்ளன.

கடந்த வாரம் நடைபெற்ற இந்தச்சம்பவத்தில் கைது செய்யப்பட்டவரிடம் இருந்து இடியன் துவக்கு மீட்கப்பட்டதுடன் அவர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். சட்டவிரோதமாக இத்தகைய துப்பாக்கியைப் பயன்படுத்தி காட்டுமிருகங்கள் வேட்டையாடப்பட்டு வருவது இங்கு குறிப்பிடத்தக்கது. (பா)

# சாதனை மாணவர்களுக்கு மக்கள் வங்கி கௌரவம்

(யாழ்ப்பாணம்)

நாளை இடம்பெறும் சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு, மக்கள் வங்கியினால் தரம்5 புலமைப்பரிசில் பரீட்சையில் 2012இல் யாழ். மாவட்டத்தில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற பின்வரும் மணவர்களுக்கான பணப்பரிசில்கள் குறிப்பிட்ட பாடசாலைகளில் வைத்து வழங்கப்படும்.

பி.அபிராம் 193புள்ளி யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை ரூபா 25.000, கே.கீர்த்திகன் 191புள்ளி யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை ரூபா 20.000, எல்.ஸ்ரீகீரன் 191 புள்ளி வட்டு.யாழ்ப்பாணக் கல்லூரி ரூபா 20.000, லோ. வைஸ்ணவி 191புள்ளி யாழ். சென் திரேசா மகளிர் கல்லூரி ரூபா 20.000 ஆகியோர் பணப் பரிசில்களைப்பெற்றுக்கொள் கின்றனர்.

# கனகராயன் குளத்தில் வெடிபொருட்கள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

கனகராயன் குளம் மற்றும் வவுனியா காட்டுப் பகுதியில் இருந்து கடந்த வாரம் ஒரு தொகுதி வெடிபொருட்கள் மற்றும் ஆயுதம் ஒன்றும் பொலிஸார் நடத்திய தேடுதலில் கைப்பற்றப்பட்டுள்ளன.

கடந்த 24ஆம் திகதி கனகராயன்குளம் - கடவாயன்குளம் பகுதியில் உள்ள வாய்க்கால் ஒன்றில் இருந்து ரி-56 துப்பாக்கி ஒன்றும் அதற்கான மகசின் ஒன்றும் 7.62 ரவைகள் 29 என்பனவும் மீட்கப்பட்டுள்ளன.

கடந்த 25ஆம் திகதி வவுனியாக் காட்டுப்பகுதியில் பொலிஸார் நடாத்திய தேடுதலில் கோல்சர் -01, டெக்னி பற்றரி -05, ஒயில் போத்தல் -01, 7.62 ரவைகள் -25, எம்.பி.எம்.ஜி.ரவைகள் -09 என்பனவே மீட்கப்பட்டுள்ளன. (பா)

# 'லிப்ற்' பாகங்கள் வைத்தியசாலைக்கு வந்தன

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனாவைத்தியசாலையின் ஐந்து மாடிகளைக் கொண்ட மருத்துவ விடுதிக் கட்டடத்திற்கான லிப்றிற்குரிய பாகங்கள் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு எடுத்து வரப்பட்டிருப்பதாக வைத்தியசாலையின் பதில் பணிப்பாளர் ஸ்ரீபவானந்தராசா தெரிவித்துள்ளார்.

இந்த மாடிக்கட்டடத்திற்கு லிப்ற் பொருத்துவதற்கான பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். இந்தப் பணிகளுக்கென தொழில நுட்பவியலாளர்களும் வந்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த மருத்துவ விடுதிகளைக் கொண்ட மாடிக் கட்டடத்திற்கான லிப்ற் பொருத்தும் பணியை யாழ். போதனா வைத்தியசாலை நிர்வாகம் இலங்கை மின்சாரசபையிடம் ஒப்படைத்திருந்ததும் அதற்குரிய பாகங்கள் வந்து சேர்வதில் காலதாமதமடைந்திருந்தமையினால் வைத்தியசாலை நிர்வாகத்திற்கும் இலங்கை மின்சாரசபைக்குமிடையே இழுபறி நிலவியதும் தெரிந்ததே. இந் நிலையிலேயே குறித்த லிப்ற்றுக்குரிய பாகங்கள் வைத்தியசாலைக்கு வந்திருப்பதனை பணிப்பாளர் உறுதிப்படுத்தியுள்ளதுடன் பொருத்தும் பணிகளும் நடைபெறவுள்ளதாகவும் தெரிவித்தார். (பா)

# கரைதுறைப்பற்றில் நடமாடும் சேவை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டக் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் நடமாடும் சேவை அடுத்த மாதம் 3ஆம், 4ஆம் திகதியில் இடம்பெறவுள்ளது.

முல்லைதீவு நகரில் புதிதாக அமைக்கப்பட்ட கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பணிமனையில் இந்த நடமாடும் சேவை இடம்பெறும்.

தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு, ஐக்கிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் ஆகிய இணைந்து இதனை நடத்தவுள்ளன.

காலை 9.00 மணிமுதல் மாலை 4.00 மணிவரை இடம்பெறும் பிறப்பு, இறப்பு, திருமண சான்றிதழ் பெறும் சேவை, காலம் கடந்த பிறப்பு, இறப்பு, திருமணப் பதிவுகள், தேசிய அடையாள அட்டை, முதியோர் அடையாள அட்டை, தொலைந்த அடையாள அட்டை பெறும் சேவைகள் இடம்பெறும்.

அடையாள அட்டை புகைப்படம், முத்திரை கட்டாசங்க போட்டோ பிரதி சேவை இலவசமாக வழங்கப்படும்.

அடுத்த மாதம் 27, 28ஆம் திகதிகளில் கரைதுறைப்பற்று பிரதேச செயலக பிரிவில் மக்களுக்கான இலவச சட்ட உதவிச்சேவை முல்லை மாவட்ட செயலகத்தில் இடம் பெறும். (04)

# 15 வயது சிறுமியை கடத்திய 22 வயது இளைஞன் கைது

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி பொலிஸ்பிரிவில் புத்தூர்ப்பகுதியில் 15வயது சிறுமி ஒருவரைக்கடத்திச் சென்ற 22வயது இளைஞர் ஒருவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு நீதிமன்ற நடவடிக்கைக்குட்படுத்தப்பட்டுள்ளார்.

கடந்த 24ஆம் திகதி நடைபெற்ற இந்தச் சந்திப்பில் பெற்றோரிடம் இருந்து குறித்த சிறுமியை குறித்த வாலிபர் கடத்திச்சென்றதாக அச்சுவேலி பொலிஸாரிடம் குறித்த பெற்றோர் முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்ததன் அடிப்படையிலேயே குறித்த சிறுமி மீட்கப்பட்டதுடன் வாலிபர் கைது செய்யப்பட்டு கொழும்புத்துறையில் அமைந்துள்ள சிறுவர் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டார்.

இந்தக்குற்றத்திற்காக குறித்த வாலிபரை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 03ஆம் திகதி வரை சிறையில் இருக்குமாறு சிறுவர் நீதிமன்றம் தீர்ப்புவழங்கியுள்ளதன் அடிப்படையில் அவர் சிறையில் இருந்து வருவதாகவும் பொலிஸ் தகவல்கள் தெரிவித்தன.

நேற்று யாழ்.சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் நடைபெற்ற வருடாந்த செய்தியாளர் சந்திப்பிலேயே இவ்விபரம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (பா)

# மானிய உரம் விநியோகம்

பெரும்போக நெற்செய்கைக்கான மானிய உரம் வழங்கலின் முதலாம் கட்ட உரம் வழங்கல் எதிர்வரும் 3ஆம் திகதி வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. மழை ஆரம்பித்தன் காரணமாக கல்வயல் விவசாய சம்மேளனத்தின் மானிய உரம் எதிர்வரும் 3ஆம் திகதி காலை 9மணிமுதல் மீசாலை கமநல சேவை நிலையத்தில் வழங்கப்படவுள்ளது. முதல்கட்டத்தில் அடிப்பளை வழங்கப்படவிருக்கின்றது. கல்வயல் விவசாய சம்மேளனத்தில் பதிவினை மேற்கொண்ட பயனாளிகளை தவறாது மானிய உரத்தினை பெற்றுக்கொள்ளுமாறு கல்வயல் விவசாய சம்மேளன செயலாளர் கா.வேதநாயகம் தெரிவித்துள்ளார்.

தவறும் பட்சத்தில் இப்பசளை வழங்கலின் இறுதிக் கட்டத்திலேயே அவற்றைப் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ)



சுவாமி விவேகானந்தரின் 150 ஆவது ஜனனதின விழாவை யாழ். மாவட்டத்தில் கொண்டாடும் பொருட்டு, இந்து சுயம் சேவக சங்கத்தின் சுவாமிஜி ஆர்.ராதாக் கிருஷ்ணன், யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பாளர் S.R.தேவன், இக்கூட்டத்தின் செயலாளர் ஆகியோர் யாழ்ப்பாணம் கந்தர் மடத்தில் அமைந்துள்ள இந்து சமயப் பேரவையில் கலந்துரையாடல் கூட்டத்தினை நடத்திக்கொண்டிருப்பதையும், அதில் பங்குபற்றிய ஆசிரிய ஆலோசகர்கள், ஆசிரியர்களையும் காணலாம். (06)

ஒரு பொழுதும் வாழ்க்கையில் நம்பிக்கை, வாக்கு, சுற்றம், இதயம் இந்த நான்கையும் முறித்துக் கொள்ள முயலாதீர்கள். ஏனெனில் அவைகளனைத்தும் உடையும் பொழுது ஒலி எழுப்பாது போனாலும் பெரும் வலியை ஏற்படுத்தும்.

- கார்லஸ்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, விளம்பரப் பணிமனை: 0212220188
thinamurasu@live.com

## சர்வதேசப் பூச்சாண்டியும் சம்பந்தரும்!

"தமிழ் தேசியக் கூட்டமைப்பு முதன்முறையாக மாகாண சபைக்கு வந்திருக்கிறது. இந்த நேரத்தில் ஒரு நிலையான அரசியல் தீர்வை எட்டுவதற்காக சர்வதேசத்தின் ஆதரவும் பங்களிப்பும் எமக்குக் கிடைத்திருக்கிறது. ஆகவே தீர்வு ஒன்றை முன்வைக்க வேண்டிய தேவை இப்போது அரசுக்கு ஏற்பட்டிருக்கிறது. அதில் சர்வதேசமும் உறுதியாக உள்ளது. நீதியை நியாயத்தை உருவாக்காமல் அரசு இனியும் தட்டிக் கழிக்க முடியாது."

இவ்வாறு நேற்றுமுன்தினம் நடைபெற்ற கிழக்கு மாகாண சபை தமிழ் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களின் பதவியேற்பு வைபவத்தில் பேசும்போது கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்திருக்கிறார். என்ன தீர்வுக்காக இவர்களுக்கான ஆதரவையும் பங்களிப்பையும் வழங்கிக்கொண்டு சர்வதேசம் உறுதியாக உள்ளது என்பதைச் சொல்லாமலே தனது அப்புக்காத்து வாய்சாலகத்தால் தொடர்ந்து 'சுத்து'கிறார் தலைவர்.

நிலையான, நீதியான, நியாயமான என்று அடைமொழிகளை அடுக்குகிறாரே தவிர, தமிழ்மக்களுக்கான எந்தத் தீர்வைத் தர சர்வதேசம் உறுதியாக நிற்கிறது என்பதைச் சொல்கிறாரே இல்லை. தனிநாடா, சமஸ்டியா, மாகாண சபையா அல்லது இவர்கள் 78-ல் எடுத்த மாவட்ட சபையா... எதை எடுத்துத் தருவதற்கு சர்வதேசம் ஒற்றைக்காலில் உறுதியாக நிற்கிறது என்று ஒரு சிறு குறிப்பைத் தன்னும் சொல்லாமலே யாரோ வந்து தீர்வை எடுத்துத் தந்துவிட்டுத்தான் போவோம் என்று இவர்களது வாசற்படியில் காத்துக்கிடப்பதைப் போல இப்போதும் 'பிலிம்' காட்டுகிறார் தலைவர்.

'எல்லாம் இந்தியா செய்யும்' என்றதை நைஸாக விட்டுவிட்டு சர்வதேசம் என்று இவர்கள் மாறியிருப்பது அமெரிக்காதான் என்பது அரசியல் தெரிந்த எல்லோருக்கும் தெரியும். அமெரிக்காவன்றி ஐநாவும் அசையாது என்பதும் பரவலாகத் தெரிந்தது தான். கிழக்குத் தேர்தலுக்கு முந்திய நாட்களில், "பிளேக் வருகிறார்" "தலைவரைச் சந்திக்கிறார்" "தேர்தலுக்குப் பின் சர்வதேசம் முக்கிய முடிவை எடுக்கப்போகிறது" என்றெல்லாம் இவர்கள் ஈர்க்கில் வாணமும் கம்பி வாணமுமாகப் பறக்கவிட்ட கதைகளுக்கெல்லாம் பதிலாக, தேர்தல் முடிவுக்குப்பின் றொபேட் ஓ பிளேக் சொல்லியிருக்கும் கருத்துக்கள் பற்றி இவர்களது கட்சிப் பத்திரிகைகள் 'கம்'மென்றிருக்கின்றன.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுலாக்கும் விடயத்திலும் இனங்களுக்கிடையில் இன ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவதிலும் இலங்கை அரசு சில முன்னேற்றகரமான நடவடிக்கைகளை எடுத்துள்ளதாகவும் அதனால் இதற்காக இலங்கைமீது அமெரிக்கா அழுத்தம் கொடுக்க வேண்டிய தேவை எதுவும் இல்லை என நியூயோர்க்கில் பிரத்தியேகமாக ஏற்பாடு செய்த செய்தியாளர் சந்திப்பில் றொபேட் ஓ பிளேக் தெரிவித்திருக்கிறார்.

அத்துடன் கிழக்கைப் போல வடக்கு மாகாணத்திற்கும் தேர்தலை நடத்தி ஆட்சி அமைய ஏற்பாடு செய்யவேண்டும் என்றும்தான் பிளேக் அங்கு கூறியிருக்கிறார். அதாவது கூட்டமைப்பினர் கூறிவருகின்ற சர்வதேசம், மாகாண சபையைத்தான் இலங்கையிலுள்ள இனப்பிரச்சினைக்கான தீர்வாகக் கூறுகிறது. நிலையான, நீதியான, நியாயமான தீர்வில் சர்வதேசம் உறுதியாக உள்ளது என்று த.தே.கூ. தலைவர் சம்பந்தன் சொல்வதும் இதைத்தானா?

அடங் கொக்கமக்கா, இதற்கு ஏன் சர்வதேசப் பூச்சாண்டியை மக்கள்மீது விட்டுக்கொண்டிருக்க வேண்டும்? பேசாமல் தெரிவுக்குழுவில் போய் விஷயத்தை முடிக்க வேண்டியது தானே!

- ஆசிரியர்

# ஆரம்ப பாடசாலை அபிவிருத்தி வலி.கிழக்கில் செயற்திட்டம் பூர்த்தி

## நாளை பாடசாலைகள் கையளிப்பு

(அச்சுவேலி)

மகிந்த சிந்தனை திட்டத்தின் கீழ் ஆயிரம் ஆரம்ப பாடசாலை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்தின் கீழ் வலி.கிழக்கில் ஐந்து ஆரம்ப பாடசாலைகள் அபிவிருத்தி செய்யப்பட்டிருக்கிறது.

இப்பாடசாலைகளை பாடசாலைச் சமூகத்திடம் கையளிக்கும் நிகழ்வு நாளை திங்கட்கிழமை இடம்பெறவிருக்கிறது. இந்த நிகழ்வுகளுக்கான ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தியடைந்துள்ளன. நவக்கிரி அ.மி.த.க.பாடசாலை, தோப்பூர் அருள்நந்தி வித்தியாசாலை, அச்சுவேலி ஆரம்ப பாடசாலை, கதிரிப்பாய் சுப்பிரமணிய வித்தியாலயம், புத்தூர் மெதடிஸ்த மிசன் பாடசாலை ஆகிய ஆரம்ப பாடசாலைகளே இந்த அபிவிருத்தித்திட்டத்தில் இணைக்கப்பட்டிருக்கிறது.

நாளைய இந்தநிகழ்வுகளில் ஈழமக்கள் ஜனநாயகக்கட்சியின் யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின், கோப்பாய் பிரதேச செயலர் ம.பிரதீபன், வலி. கிழக்குப் பிரதேச சபையின் எதிர்க் கட்சித் தலைவரும் வலி.கிழக்கு பிரதேச ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி யின் அமைப்பாளருமான ஐங்ரன் உட்பட பல பிரமுகர்கள் பங்குபற்றவுள்ளனர். நிகழ்வுகள் மதியம் 1.00 மணியளவில் ஆரம்பமாகி தொடர்ந்து இடம் பெறும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (135)

# தவிசாளர் வீட்டுவாசலில் தேசியக்கொடி அலங்காரம்

(வடமராட்சி)

கரவெட்டி பிரதேச சபைத் தவிசாளரின் வீட்டு வாசல் தேசியக் கொடிகளால் அலங்காரம் செய்யப்பட்டுள்ளது.

எதிர்வரும் சுதந்திர தினத்தையொட்டி தேசியக் கொடிகளை விற்பனை செய்யவிருப்பதாக தவிசாளர் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பான பின்னணி குறித்து விசாரித்தபோது மேலும் சில தகவல்கள் தெரிய வந்தன.

உடுப்பிட்டியில் அமைந்திருக்கும் மேற்படி பிரதேசசபையின் தவிசாளரான வியாகேசு என்பவரின் வீட்டு வாயிலின் முன்பாக நேற்று அதிகாலை இனம் தெரியாத நபர்கள் சிலர் சுமார் 42 தேசியக்கொடிகளைக் கட்டித் தொங்கவிட்டு அலங்கரித்து விட்டு தலைமறைவாகி விட்டனர்.

விடிகாலைப் பொழுதில் பார்த்தபோது எங்கும் தேசியக்கொடிகள் பறந்த வண்ணமிருந்தன. அயலவர்கள் கூடிநின்று புதினம் பார்த்தனர். அப்போது தவிசாளர், தான் தேசியக்கொடிகளை விற்பனை செய்யப்போவதாக வீம்புக்காக தெரிவித்தார். (116)

# ஐ.நா.சபை மாநாட்டில் இலங்கைக்கு எதிராக அறிக்கை

## தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் குமுறல்

(கொழும்பு)

கொழும்புக்கு அண்மையில் விஜயத்தை மேற்கொண்ட ஐ.நா.மனித உரிமை ஆணையாளரின் ஹெனி மெகாலி தலைமையிலான குழு வரும் 2013 மார்ச் மாதம் நடைபெறவுள்ள மனித உரிமை மாநாட்டில் நிச்சயம் இலங்கைக்கு எதிராக கடும் தொனியிலான அறிக்கையை சமர்ப்பிக்கும் என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தேசிய அமைப்பாளர் டாக்டர் வசந்த பண்டார தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக்குழுவில் இலங்கைக்கு எதிராக பிரேரணை கொண்டு வரப்படுமானால் அதற்கான முழுப் பொறுப்பையும் வெளிவிவகார அமைச்சர் ஜி. எல். பீரிஸே ஏற்றுக்கொள்ள வேண்டும். அத்துடன், ஐ.நா. வில் இலங்கையை ஆதரித்த நாடுகளை அரசாங்கம் நட்டாற்றில் விட்டுவிட்டதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

இது தொடர்பாக டாக்டர் வசந்த பண்டார மேலும் தெரிவிக்கையில்,

ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கலந்து கொண்டிருந்தார்.

இலங்கைக்கு எதிராக பிரேரணை முன்வைக்கப்பட்டிருக்கும் இவ்வாறானதோர் பிரேரணையூடாக யுத்தக் குற்றச்சாட்டு விசாரணைகளுக்கான கடும் அழுத்தத்தை பிரயோகிப்பதே மேற்கத்தைய நாடுகளின் திட்டமாகவிருந்தது.

ஆனால் இலங்கைக்கு அண்மையில் விஜயத்தை மேற்கொண்ட ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் தொழில்நுட்பக் குழுவான ஹெனி மெகாலி தல்லைமையிலான குழு எதிர்வரும் 2013 மார்ச் மாதம் நடைபெறவுள்ள மனித உரிமை மாநாட்டில் நிச்சயம் இலங்கைக்கு எதிராக கடும் தொனியிலான அறிக்கையைச் சமர்ப்பிக்கும்.

இதன் பின்னர் இலங்கை தொடர்பான யுத்தக் குற்றங்களுக்கான சர்வதேச புலன் விசாரணைக் குழு நியமிக்கப்பட்டு அக்குழு இங்கு வரும் சாத்தியங்களும் உள்ளன.

அத்தோடு அவ்வாறான புலன் விசாரணைக்குழு இலங்கைக்கு விஜயத்தை மேற்கொள்ளாது விசாரணைகளை நடத்தக் கூடிய அதிகாரமும் உள்ளது.

இதுவே நாம் எதிர்நோக்கியிருக்கும் பயங்கரமான நிலைமை இதுவாகும்.

ஐ.நா.மனித உரிமை ஆணைக்குழுவில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா பிரேரணையை கொண்டு வந்தபோது எமக்கு ஆதரவு வழங்குமாறு கேட்டோம்.

அப்போது 13 நாடுகள் அமெரிக்காவின் பிரேரணையை எதிர்த்து எமக்கு ஆதரவு வழங்கியது. அமெரிக்காவின் பிரேரணையை எதிர்த்தே ஆதரவு கேட்டோம். ஆனால் இன்று என்ன நடந்துள்ளது என்று கேள்வி எழுப்பினார்.


# வத்திராயன் கிராமத்தில் பொதுநோக்கு மண்டபம் அமைப்பு

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கு வத்திராயன் கிராமத்தில் துரித மீள் எழுச்சித்திட்டத்தின் கீழ் 12 இலட்சத்து 40 ஆயிரம் ரூபா பெறுமதியில் பொது நோக்கு மண்டபம் ஒன்று அமைக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இம் மண்டபம் அரசடி வீதிக்கு மேற்குப்புறமாக 300 மீற்றர் தொலைவில் அதற்கென ஒதுக்கப்பட்ட பொதுக்காணியில் அமைக்கப்பட்டுவருகிறது.

இம்மண்டபம் அமைக்கும் வேலைகள் யாவும் அடுத்தமாதம் 28 ஆம் திகதியுடன் முடிவடைய வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது. கடந்த வருடம் இந்தப் பொது நோக்கு மண்டபத்தை அமைக்கவென நிதி ஒதுக்கப்பட்ட போதிலும் நிர்வாகச் சீர்கேடு காரணமாக இக் கட்டடம் அமைக்கும் வேலைகள் யாவும் ஆரம்பிக்கப்படாமல் கிடப்பில் போடப்பட்டன. இதற்கான புதிய நிர்வாகம் கடந்த ஆகஸ்ட் மாதம் 2 ஆம் திகதி தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் புதிய நிர்வாகத்தின் முதற் கட்ட வேலையாக பொது நோக்கு மண்டபத்தை அமைக்க முடிவெடுத்து அதற்கான வேலைகளை ஆரம்பித்துள்ளது.

மேலும் இம்மண்டபம் அமைப்பதற்காக கிராம மக்கள் சார்பில் ஒரு இலட்சத்து முப்பத்தொன்பதாயிரத்து நானூற்று எண்பத்து மூன்று ரூபாவும் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (38)



**நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் பேசாமல் இருந்துவிட்டு வரமுடியாது. தீர்வு தொடர்பாக ஏதாவதொரு கருத்தை முன்வைத்தாக வேண்டும். தீர்வு எப்படி இருக்கவேண்டும் என்பது பற்றி எதுவும் கூறாதிருக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருக்கும் கூட்டமைப்புக்கு ஏதாவதொரு கருத்தைக் கூறுவது தர்மசங்கடமானது. அதனால் தான் ஏதாவது சாட்டுச் சொல்லி நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் பங்குபற்றுவதைத் தவிர்க்க முயற்சிக்கின்றது... தமிழ் மக்களின் தலைவர்கள் என்று உரிமை கோரும் கூட்டமைப்பு இக்குழுவில் பங்கு பற்றாமலிருப்பதற்கு எந்த நியாயமும் இல்லை. தெரிவுக் குழுவில் பங்குபற்ற மறுப்பதானால் மாற்றுத் திட்டம் ஏதாவது இருக்கவேண்டும். கூட்டமைப்பிடம் மாற்றுத் திட்டம் எதுவும் இல்லாமல், கிடைக்கும் சந்தர்ப்பங்களை நிராகரிப்பது இனப்பிரச்சினை தீராதிருக்க வேண்டும் என்ற நிலைப்பாடேயொழிய அரசியல் தீர்வுக்கான நிலைப்பாடல்ல.**

# அரசியல் தீர்வைத் தட்டிக் கழிப்பதே கூட்டமைப்பின் தந்திரோபாயம்

**சங்கர சிவன்**

கிழக்கு மாகாண சபையின் ஆட்சியைக் கைப்பற்றும் முயற்சி தோல்வியடைந்த அதிர்ச்சியிலிருந்து கூட்டமைப்புத் தலைமை இன்னும் விடுபடவில்லை. சம்பந்தனுக்கு அது தனிப்பட்ட ரீதியில் பின்னடைவு. அவர் போட்ட தமிழரசுக் கட்சி வேட்பாளர்கள் பலர் சோபிக்கவில்லை. இந்தத் தேர்தல் முடிவு கூட்டமைப்பில் தமிழரசுக் கட்சிக்கு எதிரான சுரேஷ் போன்றவர்களை ஓரளவு பலப்படுத்தியிருக்கின்றது. மாகாண சபையின் ஆட்சியைக் கைப்பற்றியிருந்தால் இந்தப் பின்னடைவைப் பின்னுக்குத் தள்ளியிருக்கலாம். என்னுடைய இராஜதந்திரம்தான் ஆட்சியைக் கைப்பற்றியது எனக் கூறி எதிர்க்குரல்களை அடக்கியிருக்கலாம். முஸ்லிம் காங்கிரஸின் ஆதரவைப் பெறுவதற்குத் 'தலையால் உழுதும்' சாத்தியமாகவில்லை. ரவூப் ஹக்கீம் மீது இப்போது பொல்லாத கோபம். முஸ்லிம் மக்களைச் சீண்டிவிடும் பாணியில் பேசுகின்றார். தமிழ் மக்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நோக்கத்தில் முஸ்லிம் காங்கிரஸுக்கு முதலமைச்சர் பதவியை விட்டுக்கொடுக்கத் தீர்மானித்தார்களாம். வடக்கு, கிழக்கு மாகாண அரசியலைத் தமிழ் பேசும் மக்களின் அரசியலாக வளர்க்க முடிவு செய்தார்களாம்.எல்லாவற்றையும் ரவூப் ஹக்கீம் கெடுத்துவிட்டாராம்.

நல்லிணக்கத்துக்காகவே முஸ்லிம் காங்கிரஸுக்கு முதலமைச்சர் பதவியை விட்டுக்கொடுக்கத் தீர்மானித்ததாகச் சம்பந்தன் பூச்சுற்றுகிறார். முஸ்லிம் காங்கிரஸ் அரசாங்கத்துக்கு ஆதரவளிக்கப்போகின்றது என்ற சந்தேகம் ஏற்பட்ட பின்னர்தான் முதலமைச்சர் பதவி வழங்கப் போவதாகக் கூட்டமைப்பு அறிவித்தது. முதலமைச்சர் பதவியை இலஞ்சமாகக் கொடுத்து மாகாண ஆட்சியைக் கைப்பற்றும் சந்தர்ப்பவாத முயற்சிக்கு இப்போது நல்லிணக்க முலாம் பூசுகின்றார்கள். இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தில் அக்கறை இருந்திருந்தால் தேர்தல் பிரசாரத்தின் ஆரம்ப கட்டத்தில் முஸ்லிம் காங்கிரஸுக்குத்தான் முதலமைச்சர் பதவி என்று சொல்லியிருக்க வேண்டும். முஸ்லிம்களுடனான நல்லிணக்கத்தை வெளிப்படுத்துவதற்கு எத்தனையோ சந்தர்ப்பங்கள் கடந்த காலங்களில் கிடைத்தன. பிரதானமாக, வடமாகாண முஸ்லிம்கள் துப்பாக்கி முனையில் வெளியேற்றப்பட்டு அபாண்டமாக அவர்களுக்குத் துரோகிப் பட்டம் சூட்டியபோது நல்லிணக்க உணர்வு வெளிப்பட்டிருக்க வேண்டும். அப்போதெல்லாம் மௌனமாக இருந்துவிட்டுக் கிழக்கு மாகாண சபைத் தேர்தல் வந்தவுடன் தான் நல்லிணக்கம் பற்றிய சிந்தனை தோன்றியதா? நாடாளுமன்றத் தேர்தல் காலத்தில் கூட நல்லிணக்கம் பற்றிப் பேசவில்லையே.

தமிழ்பேசும் மக்களின் அரசியல் என்று கூட்டமைப்புத் தலைவர்கள் கூறுவதெல்லாம் வெறும் புலுடாப்பேச்சு. தமிழ் பேசும் மக்கள் என்ற பதப்பிரயோகத்தை அரசியலுக்குக் கொண்டு வந்தது தமிழரசுக் கட்சி. தமிழரசுக் கட்சித் தலைவர்கள் தமிழ் பேசுபவர்களேயொழியத் தமிழர்களல்ல என்று நையாண்டி செய்தார் ஜீ.ஜீ. பொன்னம்பலம். அப்போதும் தமிழ் பேசும் மக்கள் என்ற பதத்தைத் தமிழரசுக் கட்சி கைவிடவில்லை. தமிழர் விடுதலைக் கூட்டணி உருவாகியதும் தமிழ் பேசும் மக்கள் என்ற பதம் தமிழ் மக்கள் எனச் சுருங்கியது. அன்று முதல் முப்பத்தைந்து வருடங்களுக்கு மேலாகத் தமிழ் பேசும் மக்கள் என்ற பதத்தை மறந்திருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர்கள் கிழக்கு மாகாண சபையைக் கைப்பற்றுவதற்கு முஸ்லிம்களின் ஆதரவு தேவை என்பதற்காக மீண்டும் தமிழ் பேசும் மக்கள் என்று பேசத் தொடங்கியது அப்பட்டமான சந்தர்ப்பவாதம்.

முஸ்லிம் காங்கிரஸ் முஸ்லிம்களுக்குத் துரோகமிழைத்தாலும் நாங்கள்முஸ்லிம்களின் உரிமைகளுக்காகவும் பேசுவோம் என்று சம்பந்தன் சில தினங்களுக்கு முன் கூறினார். அவர் சொன்னதைச் செயலில் காட்டுவதற்கு நல்ல சந்தர்ப்பம் இப்போது கிடைத்திருக்கின்றது. நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் பங்கு பற்றித் தமிழ் மக்களின் உரிமைகளுக்காகவும் முஸ்லிம்களின் உரிமைகளுக்காகவும் பேசலாமே.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவை எப்படியாவது தவிர்ப்பதற்குக் கூட்டமைப்பு முயற்சிக்கின்றது. கூட்டமைப்பின் தனிநாட்டு நிகழ்ச்சிநிரல் முள்ளிவாய்க்காலில் தோல்வியைத் தழுவிய பின் இனப்பிரச்சினையின் தீர்வுக்கான கொள்கை பற்றி எதுவும் பேசுவதில்லை என்ற நிலைப்பாட்டில் கூட்டமைப்புத் தலைவர்கள் இருப்பது போல் தெரிகின்றது. இனப்பிரச்சினைக்குத் தாங்கள் சிபார்சு செய்யும் தீர்வு எது என்பதைக் கூட்டமைப்புத் தலைவர்கள் இன்று வரை வெளிப்படுத்தவில்லை. இவர்களிடம் தீர்வுக்கான கொள்கை இல்லை. தீர்வுக்கான எந்தக் கொள்கையையும் முன்வைக்காமல் அரசாங்கத்தின் தலையிலும் சர்வதேச சமூகத்தின் தலையிலும் பொறுப்பைப் போட்டுவிட்டுத் தப்பித்துக்கொள்ளவே கூட்டமைப்புத் தலைவர்கள் முயற்சிக்கின்றார்கள். சர்வதேச சமூகம் தீர்வைப் பெற்றுத்தரும் என்று கூறுவதும் 'தீர்வொன்றை நடைமுறைப்படுத்தவில்லை என்று அரசாங்கத்தைக் குற்றஞ்சாட்டுவதும் இந்த அணுகுமுறையின் வெளிப்பாடுகள். நாடாளுமன்றத் தெரிவுக் குழு விடயத்திலும் கூட்டமைப்பு இதையே பின்பற்றுகின்றது.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் பேசாமல் இருந்துவிட்டு வரமுடியாது. தீர்வு தொடர்பாக ஏதாவதொரு கருத்தை முன்வைத்தாக வேண்டும். தீர்வு எப்படி இருக்கவேண்டும் என்பது பற்றி எதுவும் கூறாதிருக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருக்கும் கூட்டமைப்புக்கு ஏதாவதொரு கருத்தைக் கூறுவது தர்மசங்கடமானது. அதனால் தான் ஏதாவது சாட்டுச் சொல்லி நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் பங்குபற்றுவதைத் தவிர்க்க முயற்சிக்கின்றது. ஏற்கனவே நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் எடுத்த முடிவுகளை நடைமுறைப்படுத்தினால் தெரிவுக் குழுவில் பங்குபற்றுவோம் என்று கூட்டமைப்பு கூறுகின்றது. இது தெரிவுக் குழுவில் பங்குபற்றாமல் இருப்பதற்கான தந்திரம்.

ஏற்கனவே, எடுத்த முடிவுகளை அரசாங்கம் நடைமுறைப்படுத்தவில்லையென்றால் இனப்பிரச்சினைக்குத் தீர்வு தேவையில்லை என்று கைகழுவி விடுவதா? கூட்டமைப்பின் நிலைப்பாட்டை இப்படித் தானே விளங்கிக்கொள்ள முடியும். தாங்களே தமிழ் மக்களின் தலைவர்கள் என்றும், தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதே தங்கள்பிரதான பணி என்றும் கூறிக்கொண்டு இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான சந்தர்ப்பத்தைச் சாட்டுகள் சொல்லித் தட்டிக் கழிப்பது எந்த வகையில் அடங்கும்?

நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கின்ற எல்லாக் கட்சிகளுக்கும் தெரிவுக்குழுவில் பிரதிநிதித்துவம் உண்டு. மேலும் இக்குழு அதன் முடிவை ஆறு மாதங்களுக்குள் அறிவிக்க வேண்டும் என்ற ஏற்பாடும் உண்டு. இனப்பிரச்சினைக்கான தீர்வைப் பிரதான கட்சிகளுக்கு முன்னால் முன்வைப்பதற்கும் அதன் நியாயத் தன்மையை எடுத்துக் கூறுவதற்கும் கிடைக்கும் சந்தர்ப்பத்தை தமிழ் மக்களின் நலனில் உண்மையான அக்கறை உள்ளவர்கள் தவறவிடக் கூடாது. தெரிவுக் குழுவின் மூலம் எந்த நன்மையும் கிடைக்காவிட்டாலும் தமிழ் மக்களுக்கு அதனால் இழப்பு எதுவும் இல்லை. சிறிதளவாவது பலன் கிடைத்தாலும் அது தமிழ் மக்களுக்குக் கிடைக்கும் நன்மை.

முன்னர் எடுத்த முடிவுகளை அரசாங்கம் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று கூட்டமைப்புத் தெரிவுக் குழுவிலேயே கூறலாமே. அரசியல் கட்சிகள் மாத்திரமின்றி முழு நாடும் அப்போது அந்தமுடிவுகளைப் பற்றி அறிந்துகொள்ள முடியும். அந்த முடிவுகள் இனப்பிரச்சினைக்கான தீர்வோடு நேரடியாகச் சம்பந்தப்பட்டவையென்றால் தெரிவுக் குழுவில் தாராளமாக அவற்றை முன்வைக்கலாம். அம்முடிவுகள் இனப்பிரச்சினைக்கான தீர்வாக அல்லாமல் தமிழ் மக்களின் ஏனைய பிரச்சினைகள் தொடர்பானவை என்றால் தெரிவுக் குழுவில் பங்குபற்றுவதற்கான நிபந்தனையாக அவற்றைப் பயன்படுத்துவது நியாயமானதல்ல.

பிரதான அரசியல் கட்சிகள் ஒன்றாகக் கூடி இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு பற்றிப் பேசி முடிவெடுப்பதற்கான சந்தர்ப்பம் நீண்ட காலத்துக்குப் பின் கிடைத்திருக்கின்றது. ஆறு மாத காலத்துக்குள் இந்தக் குழு அதன் முடிவை அறிவிக்க வேண்டும் என்ற நிபந்தனையும் இருக்கின்றது. தமிழ் மக்களின் தலைவர்கள் என்று உரிமை கோரும் கூட்டமைப்பு இக்குழுவில் பங்கு பற்றாமலிருப்பதற்கு எந்த நியாயமும் இல்லை.

தெரிவுக்குழுவில் பங்குபற்ற மறுப்பதானால் மாற்றுத் திட்டம் ஏதாவது இருக்க வேண்டும். கூட்டமைப்பிடம் மாற்றுத் திட்டம் எதுவும் இல்லாமல், கிடைக்கும் சந்தர்ப்பங்களை நிராகரிப்பது இனப்பிரச்சினை தீராதிருக்க வேண்டும் என்ற நிலைப்பாடேயொழிய அரசியல் தீர்வுக்கான நிலைப்பாடல்ல.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இந்த முடிவிலிருந்து ஒரு விடயம் தெளிவாகத் தெரிகின்றது. இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வைப் பெற்றுக் கொடுப்பதற்கான கொள்கையோ வேலைத்திட்டமோ கூட்டமைப்பிடம் இல்லையென்பதால் தமிழ் மக்களுக்குத் தலைமை தாங்கும் தார்மீக உரிமையை அது இழந்துவிட்டது.

# விரிவுரையாளர்களின் போராட்டம் படு தோல்வியைத் தழுவியது

## மத்தியஸ்தம் வகிக்க மகாநாயக்கர்கள் தயார்



(கொழும்பு)

சம்பள உயர்வுகோரி போராட்டம் நடத்திவரும் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மேற்கொண்ட ஆர்ப்பாட்டப் பேரணி கொழும்பில் படு தோல்வியில் முடிந்தது.

இந்தப் பேரணியில் விரிவுரையாளர்களை விட மாணவர்களே அதிகமாக இருந்ததாக இலங்கையின் உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்தப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு தாம் மத்தியஸ்தம் வகிக்கத் தயார் என்று அஸ்கிரிய மற்றும் மல்வத்த மகாநாயக்கர்கள் தெரிவித்துள்ள நிலையிலேயே எஸ்.பி திஸநாயக்கவின் கருத்து வெளியாகியுள்ளது.

கொழும்பை வந்தடைந்த பேரணியில் 150 விரிவுரையாளர்களே இருந்ததாக அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். எனினும் அவர்களை சுற்றி அதிகளவான அரசியல்வாதிகள் இருந்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தப்பேரணியில் சுமார் 5000 பேரே பங்கேற்றிருந்தனர். எனவே இதனை வெற்றியான பேரணியெனக் கருதமுடியாது என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பல்கலைக்கழகப் பேராசிரியர் தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபட்டோரது புகைப்படங்கள் மற்றும் காணொளிகள் சேகரிக்கப்பட்டுள்ளதாகவும் உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸநாயக்க தெரிவித்துள்ளார்.


பல்கலைக்கழக பேராசிரியர்களின் பாதயாத்திரையில் கலந்து கொண்ட சகலரினதும் புகைப்படத் தகவல்கள் திரட்டப்பட்டுள்ளன. தேசிய பாதுகாப்பு நோக்கில் இவ்வாறு தகவல்கள் திரட்டப்பட்டன. எதிர்காலத்தில் இந்தத் தகவல்கள் பயன்படக்கூடும்.

தகவல்களைத் திரட்டுவதன் மூலம் எவருக்கும் அச்சுறுத்தல் விடுக்கும் நோக்கம் கிடையாது என எஸ்.பி திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

# போதைப்பொருள் கடத்தலில் அரசியல் செல்வாக்கு அதிகம்

## பிரபல வர்த்தகர்கள் சம்பந்தம்

(கொழும்பு)




12 கோடீஸ்வர வர்த்தகர்கள் போதைப் பொருள் கடத்தலில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. சர்வதேச ரீதியில் வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் சில வர்த்தகர்களே இவ்வாறு போதைப் பொருள் கடத்தலில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவர்களில் பலர் கொழும்பு மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களில் வாழ்ந்து வருவதாக புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இந்த 12 வர்த்தகர்களுக்கும் அரசியல்வாதிகளின் ஆதரவு இருக்கின்றது.

நாள் தோறும் இலங்கைக்குள் 5 முதல் 6 கிலோகிராம் ஹெரோயின் போதைப் பொருள் கடத்தப்படுகின்றது,

கொள்கலன்களில் வேறு பொருட்களை இறக்குமதி செய்யும் போர்வையில் போதைப் பொருட்கள் கடத்தப்பட்டு வருகின்றன.

இதேவேளை, ஹெரோயின் போதைப் பொருளின் விலை வீழ்ச்சியடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையில் ஒரு கிராம் ஹெரோயின் 3000 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுகின்றது.

# கல்வியைப் பாதுகாக்க இறுதிவரை போராடுவோம்

## பொன்சேகா முழக்கம்



பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளம் ஏற்பாடு செய்திருந்த "கல்வியை பாதுகாப்போம்" போராட்டத்தில் கலந்துகொண்ட முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா "எதிர்கால சந்ததியின் கல்வி நடவடிக்கை சீரடைய இறுதி வரை நாங்கள் போராடுவோம்" எனத் தெரிவித்தார்.

"கல்வித்துறை இன்று பாரிய சவாலை எதிர்நோக்கியிருக்கிறது. இன்று நாங்கள் அனைவரும் ஒரே பதாகையின் கீழ் கூடியிருப்பதன் நோக்கம், அரசு கூறியதுபோல் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 6 சதவீதத்தினை கல்வி நடவடிக்கைகளுக்குச் செலவிட வேண்டும் என்பதை வலியுறுத்துவதற்காகவே.

எமது நாட்டின் அரசியல்வாதிகள் தங்களது பிள்ளைகளின் எதிர்காலம் பற்றி மட்டுமே சிந்தித்து வருகிறார்கள். ஏனைய சிறுவர்களின் நிலைபற்றி சிந்திப்பதில்லை. கல்வி நடவடிக்கைகள் பாதிப்படையும்போது ஒரு பிரச்சினையிலிருந்து மற்றொரு பிரச்சினைக்கு செல்வதற்கே எமது அரசியல்வாதிகள் திட்டம் தீட்டி வருகிறார்கள். நிரந்தரமான தீர்வினைப் பெறுவதற்கு அவர்கள் முயற்சிப்பதில்லை. எமது நாட்டின் எதிர்கால சந்ததியினருக்காக எவ்வகையான தியாகத்தைச் செய்வதற்கும் நாங்கள் தயாராகவே இருக்கின்றோம்" என்று அவர் மேலும் கூறினார்.

# மாகாண சபைகளுக்கு அதிக அதிகாரங்கள்

## சர்வஜன வாக்கெடுப்பு வேண்டும்



மாகாணசபை சபைகளுக்கு சுயாட்சி அதிகாரங்களை வழங்குவது தொடர்பில் வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டுமெனத் தேசிய மொழிகள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

வடக்கு கிழக்கு உள்ளிட்ட நாட்டின் சகல மாகாணசபைகளுக்கும் சுயாட்சி அதிகாரங்களை வழங்குவது தொடர்பில் மக்களின் விருப்பத்தை அறியும் நோக்கில் இந்த சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும்.

இவ்வாறு சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட்டால் அதனை மக்கள் வரவேற்பார்கள். எனினும், பெரும்பான்மை சிங்கள மக்கள் இந்த யோசனைத் திட்டத்திற்கு ஆதரவளிப்பார்களா என்பதில் அரசாங்கம் சந்தேகம் கொண்டுள்ளது.

அரசாங்கத்தினால் தற்போது மேற்கொள்ளப்படும் சகல நிர்வாக நடவடிக்கைகளும் மாகாணசபைகளுக்கு வழங்கப்படும் வகையில் சுயாட்சி அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும்.

பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்கள் தொடர்பில் ஆணைக் குழுக்கள் நிறுவப்பட வேண்டும்.

இவ்வாறு சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படுவதனால் பாதக விளைவுகள் ஏற்படக் கூடுமென அரசாங்கம் அஞ்சிய போதிலும், பாதக விளைவுகள் ஏற்படாது என வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

# அவுஸ்ரேலியக் கனவு கலைகிறது; நாடு திரும்புவதில் பலர் ஆர்வம்

புகலிடம் கோரி அவுஸ்ரேலியாவில் தஞ்சமடைந்துள்ள இலங்கையர்களில், மீண்டும் நாடு திரும்ப விண்ணப்பித்துள்ளோர் தொகை மேலும் அதிகரித்துள்ளதாக அவுஸ்ரேலியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் திஸர சமரசிங்க அந்நாட்டு பத்திரிகையான நெஷனல் ரைம்ஸுக்கு தெரிவித்துள்ளார்.

கிறிஸ்மஸ் தீவில் தடுத்துவைக்கப்பட்டுள்ள 18 இலங்கையர்கள் கடந்த வாரம் நவுறுவுக்கு அனுப்பப்படுவதை விட இலங்கை திரும்புவதையே விரும்பினர்.

பசுபிக் தீவான நவுறுவுக்கு அனுப்பி விசாரிக்கும் முறையை அரசாங்கம் கொண்டுவந்த பின்னும், புகலிடக் கோரிக்கையாளர்களுடன் படகுகள் கிறிஸ்மஸ் தீவுக்கு அருகாமையில் வருவதாக சிட்டி மோர்னிங் ஹெரால்ட் செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தவகையில், அண்மைக்காலங்களில் வந்த படகுகளில் ஆகவும் கூடுதலான 195 பயணிகளை ஏற்றிய படகொன்றுக்கு உதவி வழங்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆகஸ்ட் 13இன் பின், 3200 இற்கு மேற்பட்ட புகலிடம் கோருவோர் வந்துள்ளதாகவும் இவர்கள், நவுறு மற்றும் பப்புவா நியூகினி மனெஸ் தீவுகளில் உள்ள முகாம்களின் கொள்ளளவிலும் கூடுதலாக இருந்தனர் எனவும் கூறப்பட்டுள்ளது.

இவ்வாறு முற்பகுதியில் 24 மணித்தியாலங்களுக்குள் மூன்று படகுகள் கொக்கொஸ் தீவு ஆள்புலத்தினுள் வழிமறிக்கப்பட்டுள்ளன. மனிதக் கடத்தலில் ஈடுபடுவோரின் தொழில் விரைவில் முடிவுக்கு வந்துவிடுமென அவுஸ்ரேலிய அரசாங்கம் கூறியுள்ளது.

# இளைஞர், யுவதிகளுக்கு தொழில் வாய்ப்பு ஐரோப்பாவில் முதியோர் பராமரிப்பு

## விசேட பயிற்சி வழங்க ஏற்பாடு

ஐரோப்பிய நாடுகளில் முதியோர் பராமரிப்பு வேலைகளுக்கு இலங்கை இளைஞர் யுவதிகளை அதிகளவில் அனுப்புவதற்கு ஏதுவாக இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் முதியோர் பராமரிப்புத் தொடர்பான விசேட பாடநெறி ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகமும் இலங்கைத் திறந்த பல்கலைக்கழகமும் இதற்கான ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டுள்ளன.

சர்வதேசத்தில் ஏற்றுக் கொள்ளக்கூடிய சான்றிதழை இவர்களுக்குப் பெற்றுக் கொடுக்கும் நோக்குடன் இந்தப் பாடத்திட்டம் அமையவுள்ளது.

வெளிநாடுகளில் குறிப்பாக ஐரோப்பிய நாடுகளில் முதியோரைப் பாதுகாப்பதற்கான வேலை வாய்ப்புகள் அதிகளவில் காணப்படுகின்றன.

எனினும் அவர்களை பராமரிப்பது குறித்து சரியான அறிவு இல்லாமையால் இலங்கையிலிருந்து இத்துறைக்கு சரியான ஆட்களை அனுப்ப முடியாதுள்ளது.

முதியோர் பராமரிப்பு வேலைகளுக்காக ஐரோப்பிய நாடுகளில் அதிகளவு கொடுப்பனவுகளும் வழங்கப்படுகின்றன.

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் கலாநிதி விஜித நாணயக்காரவும், இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் தலைவர் அமல் சேனாதிலங்கார இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத் திட்டனர்.

நாடளாவிய ரீதியில் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் 30 பிரதேச மத்திய நிலையங்களிலும் இப் பாடநெறி முன்னெடுக்கப்படவுள்ளது.



இந்தப் பயிற்சி வகுப்புக்கள் மூன்று மாத பயிற்சி வகுப்புக்களாக அமையும்.

# மாலக சில்வா சண்டித்தனம்; அதிகாரிகள் குமுறல்



அமைச்சர் மேர்வின் சில்வாவின் மகன் மாலக சில்வா சிறைச்சாலை அதிகாரிகளுக்கு அச்சுறுத்தல் விடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவப் புலனாய்வுப் பிரிவு மேஜர் ஒருவரைத் தாக்கிய குற்றச்சாட்டின் பேரில் மாலக வெலிக்கடை சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

இவர் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ள நிலையில், மீண்டும் வெலிக்கடை சிறைச்சாலைக்கு சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சில பொருட்களை வைத்துச் சென்றதாகத் தெரிவித்து சட்டவிரோதமான முறையில் சிறைச்சாலை வைத்திய சாலைக்குள் மாலக பிரவேசித்துள்ளார். இதன்போது, கடமையில் ஈடுபட்டிருந்த சில அதிகாரிகளுக்கு மாலக சில்வா அச்சுறுத்தல் விடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# யாழ். மாநகர சபை உறுப்பினர்கள் சீருடை தரிப்பது இனிக் கட்டாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபை ஊழியர்கள், உத்தியோகத்தர்கள் கடமை நேரத்தின்போது சீருடை தரித்திருப்பது, வரும் காலங்களில் கட்டாயமாக்கப்படவுள்ளதாக யாழ். மாநகர சபை ஆணையாளர் பிரணவநாதன் தெரிவித்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற யாழ். மாநகர சபையின் 9 ஆவது மாதாந்தக் கூட்டத்தின்போது யாழ். மாநகர சபை உறுப்பினர் ஒருவரினால் யாழ். மாநகரசபை ஊழியர்கள், உத்தியோகத்தர்கள் சீருடையைப் பயன்படுத்துவதில்லை என்று சுட்டிக்காட்டப்பட்டபோதே யாழ். மாநகர ஆணையாளர் இவ்வாறு பதிலளித்தார்.

எதிர்காலத்தில் யாழ். மாநகர சபை ஊழியர்கள், உததியோகத்தர்கள் சீருடையைப் பயன்படுத்தினால்தான் அவர்களுக்கான சீருடைக்குரிய கொடுப்பனவு வழங்கப்படவுளள தாகவும் அவர் தெரிவித்தார்.

அடுத்த மாதத்திலிருந்து பாதுகாப்பு உத்தியோகத்தர்களும் தொடர்ந்து ஏனையவர்களும் சீருடை தரித்துக் கடமைக்குச் சமுகமளிக்குமாறும் கேட்டுககொண்டார்.

அத்துடன் வரும் ஆண்டில் இந்த நடைமுறை முற்று முழுதாக இருக்கவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

பெருமளவு நிதியைச் செலவு செய்து சீருடைகளை மாநகர சபை அவர்களுக்கு வழங்கி அதனை அவர்கள் அணியாது வீடுகளில் கொண்டு சென்று வைப்பதனால் அதற்குச் செலவு செய்யும் நிதி வீணானது. அது ஒரு அநாவசியச் செலவு என்றும் இந்தக் கூட்டத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (பா)

# பேருந்து சேவையில் நேர இடைவெளி தேவை

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் - சாவகச்சேரி ஊடான போக்குவரத்தில் தனியார், அரச பேருந்து ஆகியன இணைந்து சேவையை வழங்க வேண்டும் என மக்கள் கோரிககை விடுத்துள்ளனர்.

சுன்னாகத்திலிருந்து சாவகச்சேரி வரை 775 ஆம் இலக்க பேருந்து சேவையில் அரச பேருந்து ஒன்றும், தனியார் பேருந்து ஒன்றுமே சேவையில் ஈடுபடுகினறன.

ஆனால் இவை இரண்டும் குறித்த ஒரே நேரத்தில் சுன்னாகத்தில் இருந்து பயணத்தை மேற்கொண்டு நிலாவரை, புத்தூர், மட்டுவில் ஊடாக சாவகச்சேரியை அடைந்து மீண்டும் சாவகச்சேரியிலும் குறித்த ஒரே நேரத்திலே பயணத்தை ஆரம்பிக்கின்றன.

இரண்டு பேருந்துகளும் ஒன்றுடன் ஒன்று போட்டி இடுகின்றனவே தவிர, மக்களுக்குச் சீரான முறையில் சேவை வழங்குவதாக இல்லை எனவே இவ் இரண்டு பேருந்துகளும் சீரான ஒரு கால இடைவெளியில சேவையினை மேற்கொள்ளவேண்டும் என பொது மக்கள் கோருகின்றனர். (148)

## வீதிகளுக்கு ஒளியூட்டல்; மாநகரசபை தீவிரம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரின் எல்லைப் பகுதி வீதிகள் மாநகர சபையினரால் ஒளியூட்டப்பட்டுள்ளன.

பொன்னம்பலம் வீதி, குகன் வீதி, சின்னாலன் கண்டு வீதி, ஆள்காட்டி வீதி, முள்ளி வீதி, அருளம்பலம் வீதி என்பனவே இவ்வாறு மாநகர சபையினரால் மின்விளக்குகள் பொருத்தப்பட்டு ஒளியூட்டப்பட்டுள்ளது.

அரியாலை கலைவாணி சனசமூக நிலையத்தினரும், மாநகர சபை உறுப்பினர் விந்தன் கனகரட்ணத்தின் முயற்சியினாலும் யாழ். மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசாவின் அறிவுறுத்தலின் பேரில் இபபகுதிகளுக்கான மின் விளககுகள் பொருத்தப்பட்டு ஒளியூட்டப பட்டிருக்கின்றது. (இ,பா)

# 5 வருட ஒத்திவைக்கப்பட்ட சிறை

(திருநெல்வேலி)

திருநெல்வேலி கொலை முயற்சி வழக்கில் எதிரிக்கு 5 வருடத்துக்கு ஒத்தி வைக்கப் பட்ட 2 வருட கடுழிய சிறைத் தண்டனை விதித்து யாழ். நீதிமன்ற நீதிபதி ஜெ.விஸ்வநாதன் தீர்ப்பளித்தார்.

அத்துடன் ரூபா 5000 குற்றப் பணமாகவும், ரூபா 30 ஆயிரம் காயமடைந்தவருக்கு நஷ்ட ஈடாகவும் வழங்குமாறும் உத்தரவிட்டார்.

இவ்வழக்கில் கடந்த 2010 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1 ஆம் திகதி, திருநெல்வேலிப் பாற்பண்ணை, 3 ஆம் ஒழுங்கையைச் சேர்ந்த ராஜதுரை ராஜகுலேந்திரன் என்பவர் அதே யிடத்தைச் சேர்ந்த சோமசுந்தரம் செல்வகுமார் என்பவரைக் கத்தியால் தாக்கிக் கொலை செய்ய முயற்சித்ததாக யாழ். மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

2.06.2012 இல் தான் சுற்றவாளி என மேல் நீதிமன்றத்தில் தெரிவித்த எதிரி கடந்த 6 ஆம் திகதி தான் குற்றவாளி எனத் தெரிவித்தார்.

இதனையடுத்து குற்றம் தணிக்கும் சூழ்நிலைகள் தொடர்பாக எதிரி தரப்பு சட்டத்தரணி ரி.கணதீபன் சமர்ப்பணம் நிகழ்த்துகையில், எதிரிக்கு 5 பிள்ளைகள் என்றும், எதிரியின் மனைவி வெளிநாட்டில் வசிப்பதாகவும், 5 பிள்ளைகளும் எதுவித பராமரிப்புமின்றி வாழ்ந்து வருவதாகவும் குறிப்பிட்டதோடு, எதிரி மதுவருந்தும் பழக்கம் உடையவர் என்றும், மதுவருந்திய நிலையிலேயே சம்பவதினம் அவர் இத்தவறைப் புரிந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

முற்குற்றம் எதுவும் எதிரிக்கு இல்லை என்பதால் அவர் திருந்தி வாழும் பொருட்டு அவரை சிறைக்கு அனுப்பாது சந்தர்ப்பம் வழங்குமாறும் சட்டத்தரணி மன்றுக்கு விண்ணப்பித்தார்.

இதனையடுத்து தீர்ப்பு வழங்கிய மேல் நீதிமன்ற நீதிபதி ஜெ.விஸ்வநாதன் எதிரியைத் தண்டனைச் சட்டக்கொலை 300 இன் கீழ் தண்டிக்கப்படவேண்டிய குற்றத்துக்குக் குற்றவாளியாகக் கண்டு மேற்குறிப்பிட்ட தீர்ப்பினை வழங்கினார்.

அத்துடன் வடமாகாண சிறுவர் நன்நடத்தைத் திணைக்கள ஆணையாளர், எதிரியின் பிள்ளைகள் தகுந்த முறையில் பராமரிக்கப்படுகின்றார்களா என்பதைக் கண்காணிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் நீதிபதி கட்டளையிட்டார்.

எதிரி தரப்பில் சட்டத்தரணி ரி.கணதீபனும், அரச தரப்பில் அரச சட்டவாதி நளினி கந்தசாமியும் ஆஜரானார்கள். (137)

# முரசின் இன்றைய பலன்

(30.09.2012 - ஞாயிற்றுக்கிழமை)

நந்தன வருஷம் ஆவணி மாதம் 14 ஆம் திகதி. நட்சத்திரம் உத்தரட்டாதி பிற்பகல் 4.27 வரை அமிர்தயோகம். திதி பூரணை முற்பகல் 09.16 வரை. பின் பிரதமை.

இராகுகாலம் 4.32 - 6.02 வரை. சுபநேரம் 9.02 - 10.32 வரை.

எமகண்டம் 12.02 - 1.32 வரை, குளிகன் காலம் 3.02 - 4.32 வரை.

**சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.**

| | |
|---|---|
| மேடம் | சவால்களை ஏற்று செயற்படுவீர்கள். புதிய யுக்திக ளால் தொழில் இடையூறு விலகும். கூடுதல் லாபம். கடன் தீரும். உறவினர்களால் குழப்பம். உடல்நலம் சீர்பெறும். |
| ரிஷபம் | புதிய செயல்களில் இறங்குவீர்கள். குடும்ப ஆதரவு கிடைக்கும். தொழில் பலம் பெறும். சராசரி பணவரவு. அறப்பணி செய்வீர்கள். தேடிய பொருள் கை வந்து சேரும். |
| மிதுனம் | தெய்வ சிந்தனை. அனுக்கிரகம் கிடைக்கும். செயல்களில் நேர்த்தி. தொழில் வளர்ச்சி. தாராள பணவரவு. உடல ஆரோக்கியம் பெறும். சொத்து சேர்க்கை உருவாகும். |
| கடகம் | செயலில் உற்சாகம். எல்லோரிடமும் அன்பு. நண்பரால் நன்மை. தொழில் இலக்கு நிறைவேறும். உபரி பணவருமானம். தெய்வ வழிபாடு. குடும்பத்தில் மகிழ்ச்சி. |
| சிம்மம் | இலலை என்னாமல் உதவுவீர்கள். பெண்களால் மகிழ்சசி. அக்கம் பக்கத்தவரிடம் நல்ல அபிப்பிராயம். தொழில் ரீதியாக ஒப்பந்தங்கள். உயர்ச்சிக்கான செய்திகள். நன்மை. |
| கன்னி | தொட்ட காரியம் வெற்றி. சிலரது எதிர்ப்பு இருக்கும். வேலைப் பளு அதிகரிக்கும். வரவை விட செலவு கூடும். மருத்துவச் செலவு. தியானம், வழிபாடு மன அமைதி தரும். |
| துலாம் | கூடுதல் வேலை. அனுபவசாலியின் ஆலோசனை நன்மை தரும். புதிய செலவுகள். ஆக்கபூர்வ திட்டம் உருவாகும். வாகன பயணத்தில் கவனம். புத்திரர் நற்செய்தி. |
| விருச்சிகம் | மன அமைதி. குடும்ப ஆதரவு கிடைக்கும். குறைந்த அளவு பணவரவு. வேலைச்சுமை குறைந்து ஒய்வு கிடைக்கும். வெளியூர் பயணம். நண்பர்களால் மகிழ்வு. |
| தனுசு | குழப்பங்கள் முடிவுக்கு வரும். தொழில் தடங்கலை இனங்கண்டு தீர்ப்பீர்கள். பணவரவு தாமதம். சுபகாரிய பேச்சு. பிணி தீர்ந்து மகிழ்ச்சி. வாழ்க்கைத் துணை ஆதரவு. |
| மகரம் | நல்ல செயல்களில் நாட்டம். நண்பர் ஆலோசனை நம்பிக்கை தரும். தொழில் இலக்கு நிறைவேறும். சுமாரான பணவரவு. அவசியமற்ற கடன் பெறக் கூடாது. உதவும் மனம். |
| கும்பம் | காலை முதல் மாலை வரை பரபரப்பு. உறவினர்கள் நலனில் அக்கறை. அலுவலகத்தில் எரிச்சல். பிறர் மதிக்கும் காரியங்கள் செய்வீர்கள். பணம் வரும். வெற்றி கிடைக்கும். |
| மீனம் | கடின முயற்சிக்குப் பலன் கிடைக்கும். விமர்சனங்கள் வரும். நடக்காத ஒன்றுக்கு ஆவல் கொள்வீர்கள். புதிய பொறுப்புகள் வரும். பிறர் பேச்சைக் கேட்பீர்கள். ஏற்றம் கிடைக்கும். |

# முள்ளி வாய்க்காலில் ஆயுதப் புதையல்

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு மாவட்டம் வெள்ள முள்ளிவாய்க்கால் பகுதியில் நிலத்தில் புதைத்து வைக்கப்பட்டிருந்த பெருமளவு ஆயுதங்கள் மற்றும் வெடி பொருட்கள் உட்பட யுத்த உபகரணங்கள் விசேட அதிரடிப் படையினரினால் கடந்த வாரம் மீட்கப்பட்டிருப்பதாக யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சிறிகுகநேசன் தெரிவித்துள்ளார்.

வெள்ளிக்கிழமை அவரது அலுவலகத்தில் நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

கடந்த 25 ஆம் திகதி அந்தப் பிரதேசத்தில் விசேட அதிரடிப் படையின் தேடுதல் நடத்திய போதே இந்த இராணுவப் பொருட்கள் மறைத்து வைக்கப் பட்டிருந்த குழி ஒன்று கண்டு பிடிக்கப்பட்டு அவை மீட்கப் பட்டுள்ளன.

• புலிகளால் புதைத்து வைக்கப்பட்ட இந்த இராணுவப் பொருட்களில் ரீ.56 ரக துப்பாக்கிகள் - 27, எம்.பி.எம். ஜி - துப்பாக்கிகள் - 02, பிஸ்ரல் - 01, ரி-56 ரவை - 03, மகசின் - 18, எம்.பி.எம்.ஜி. ரம் ரவை - 200, 12.7 ரவை - 170, கான் செற் -20, பற்றிச் சார்ஜ் - 38, ஆட்லறி செல் - 01, 81 எம்.எம். பேஸ் பிளேட், சீருடை -01, பலதரப்பட்ட வைகள் - 200 மற்றும் பெருமளவு ரவைக்கூடுகள் ரவை இணைப்புகள் என்பன மீட்கப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார். (பா)



இணக்கப்பாடாகப் பிரச்சினை தீர்த்தல் தொடர்பான செயலமர்வு கடந்த 26, 27, 28 ஆம் திகதிகளில் வடமாகாணக் கல்வித் திணைக்களக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றவேளை நிதியமைச்சின் அதிகாரிகள், சனாதனன், சவரிநாயகம் ஆகியோர் கருத்துரை வழங்குவதையும், செயலமர்வில் கலந்து கொண்ட வடமாகாணக் கல்விக் கோட்டப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் ஆகியோரையும் காணலாம். (06)

# தனபாலன் நினைவு வெற்றிக் கிண்ணம் கொக்குவில் இந்து ஹட்ரிக் சம்பியன்







(யாழ்ப்பாணம்)

அமரர் தனபாலன் நினைவு கிரிக்கெட் கிண்ணத்தை கொக்குவில் இந்துக் கல்லூரி அணி மூன்றாவது முறையாக வென்று சாதனை படைத்துள்ளது.

அழைக்கப்பட்ட பாடசாலை அணிகளுக்கிடையிலான சென். ஜோன்ஸ் கல்லூரியினால் நடத்தப்பட்ட அமரர் தனபாலன் நினைவு கிரிக்கெட் தொடர் நேற்று சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நிறைவடைந்தது.

அணிக்கு ஆறு பேர் கொண்ட ஐந்து ஓவர் ஆட்டமாக இப்போட்டித் தொடர் நடத்தப்பட்டது. இதில் 12 அணிகள் பங்குகொண்டன.

இதில் நேற்றுக்காலை சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற முதலாவது அரையிறுதிப் போட்டியில் யாழ். மத்திய கல்லூரி அணியும், கொக்குவில் இந்துக் கல்லூரி அணியும் மோதின. இதில் முதலில் ஆடிய யாழ். மத்திய கல்லூரி அணி ஐந்து ஓவர்கள் நிறைவில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து 49 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சௌமிதரன் 19, டர்வின் 11 ஓட்டங்களைப் பெற்றனர்.

பதிலுக்கு 50 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய கொக்குவில் இந்துக் கல்லூரி அணி நான்கு ஓவர்கள் நிறைவில் விக்கெட் இழப்பின்றி வெற்றியிலக்கை அடைந்தது. இதில் சிலோஜன் 43 ஓட்டங்களைப் பெற்றார். இவ்வெற்றியின் மூலம் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற மற்றுமொரு அரையிறுதிப் போட்டியில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணியும், யாழ். இந்துக் கல்லூரி அணியும் மோதின. இதில் முதலில் ஆடிய வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி 4.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 47 ஓட்டங்களைப் பெற்றது. இதில் மதுசன் 14 ஓட்டங்களைப் பெற்றார்.

பதிலுக்கு 48 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய யாழ். இந்துக் கல்லூரி அணி 4.5 ஓவர்கள் நிறைவில் இரண்டு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் மதுசன் 19, ஜஸ்மினன் 13 ஓட்டங்களைப் பெற்றனர். இவ்வெற்றியின் மூலம் யாழ். இந்துக் கல்லூரி இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

இப்போட்டித் தொடரின் இறுதிப் போட்டியும், மூன்றாமிடத்திற்கான போட்டியும் சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் பிற்பகல் 2.00 மணிக்கு ஆரம்பமானது.

இதில் இறுதிப் போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியும், யாழ். இந்துக் கல்லூரி அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற யாழ். இந்துக் கல்லூரி அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய கொக்குவில் இந்துக் கல்லூரி அணி ஐந்து ஓவர்கள் நிறைவில் இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 60 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஆதித்தன் 20, சிலோஜன் 19 ஓட்டங்களைப் பெற்றனர்.

பதிலுக்கு 61 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய யாழ். இந்துக் கல்லூரி அணி முதல் மூன்று ஓவர்களிலும் சராசரியாக 10 ஓட்டங்களைப் பெற்று ஆடி வந்தது. இருப்பினும் நான்காவது ஓவரை வீசிய கொக்குவில் இந்துக் கல்லூரி அணி வீரர் பவிதரனின் பந்து வீச்சு ஆட்டத்தின் திருப்புமுனையாக அமைந்தமை குறிப்பிடத்தக்கது. நான்காவது ஓவரில் மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தி கொக்குவில் இந்துவின் வெற்றியை பவிதரன் உறுதிப்படுத்தினார். இறுதியில் யாழ். இந்துக் கல்லூரி அணி 3.5 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 39 ஓட்டங்களைப் பெற்று 21 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. இப்போட்டியில் வெற்றிபெற்றதன் மூலம் தொடர்ச்சியாக மூன்றாவது முறையாக அமரர் தனபாலன் வெற்றிக் கிண்ணத்தை கொக்குவில் இந்துக் கல்லூரி அணி கைப்பற்றிக் கொண்டுள்ளது. இப்போட்டியின் ஆட்டநாயகனாக பவிதரன் தெரிவானார்.

சென். ஜோன்ஸ் கல்லூரி அதிபர் தலைமையில் நடைபெற்ற பரிசளிப்பு நிகழ்வின் பிரதம விருந்தினராக முன்னாள் யாழ். மாவட்ட பயிற்றுநர் சண்முகலிங்கம் கலந்து கொண்டு சிறப்பித்தார். மற்றும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் உட்பட கல்விச் சமூகத்தைச் சேர்ந்த உயர் அதிகாரிகள், மாணவர்கள், வீரர்கள், இரசிகர்கள் எனப பலர் கலந்து கொண்டு போட்டியைக் கண்டுகளித்தமை குறிப்பிடத்தக்கது.

(எஸ்.பி., 20)

## இன்றைய ஆட்டம்

ICC WORLD TWENTY20 SRI LANKA 2012

**அவுஸ்ரேலியா- தென்னாபிரிக்கா**
பல்லேகல மாலை 3.30 மணி

**பாகிஸ்தான் - இந்தியா**
பல்லேகல இரவு 7.30 மணி

## தோல்விக்கு மழை காரணம்

(கொழும்பு)

அவுஸ்ரேலிய அணியுடனான சூப்பர் -8 போட்டியில் நாம் அடைந்த தோல்விக்கு தவறான நேரத்தில் குறுக்கிட்ட மழையே முக்கிய காரணம் என இந்திய அணிக் கப்டன் டோனி தெரிவித்தார்.

நாங்கள் நல்ல தொடக்கம் பெற்றோம். ஆனால் நடுவரிசையில் விக்கெட்டுக்களை வேகமாக இழந்து விட்டோம். அதன் பின்னர் நாங்கள் நல்ல நிலையில் இல்லை. 20 ஓட்டங்கள் வரை குறைவாக எடுத்து விட்டோம்.

தவறான நேரத்தில் மழை வந்து விட்டது. மைதானம் ஈரப்பதம் ஆனதால் சுழற்பந்து வீச்சாளர்களால் பந்தைப் பிடித்து வீசுவதற்கு கிரீப் கிடைக்கவில்லை. அது தான் எங்களது தோல்விக்கு முக்கிய காரணமாகும். உண்மையிலேயே என்ன நடந்தது என்பதை நாங்கள் ஆராய்ந்து பார்க்க வேண்டும். அதே சமயம் அவுஸ்ரேலியாவின் அபாரமான துடுப்பாட்டத்தைப் பாராட்டியாக வேண்டும். அடுத்து வரும் இரு போட்டிகளிலும் வெற்றி அரையிறுதி வாய்ப்பைத் தக்கவைத்துக் கொள்வோம் என்ற நம்பிக்கை எமக்கு உள்ளது என்றார்.

## இறுதிப் போட்டிக்கு பெட்ரோவா தகுதி

ஜப்பானில் நடக்கும் பான் பசிபிக் ஓப்பன் ரென்னிஸ் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் விளையாட, ரஷ்ய வீராங்கனை நடியா பெட்ரோவா தகுதி பெற்றார்.

அரையிறுதியில் அவுஸ்ரேலியாவின் சமந்தா ஸ்டோசருடன் நேற்று முன்தினம் மோதிய பெட்ரோவா 6,4, 6,2 என்ற நேர் செட்களில் வென்றார். மற்றொரு அரையிறுதியில் போலந்து வீராங்கனை ரட்வன்ஸ்கா 6,1, 6,1 என்ற நேர் செட்களில் ஏஞ்சலிக் கெர்பரை (ஜேர்மனி) மிக எளிதாக வென்று இறுதிப் போட்டிக்கு முன்னேறினார். இறுதிப் போட்டியில் நடியா பெட்ரோவா, ரட்வன்ஸ்கா மோதுகின்றனர்.

## உலக மல்யுத்தம் கனடா தங்கம்



மகளிர் உலக மல்யுத்த சம்பியன்ஷிப் போட்டியில் கனடாவின் மேக்டொனால்ட் தங்கப்பதக்கத்தைக் கைப்பற்றியுள்ளார்.

கனடாவில் பெண்கள் உலக மல்யுத்த சம்பியன்ஷிப் போட்டி நடைபெற்று வருகிறது.

இதன் 51 கி.கி. எடைப் பிரிவின் அரையிறுதியில் கனடாவின் மேக்டொனால்ட் 6-0, 4-2 என்ற கணக்கில் இந்தியாவின் பபிதாவை வீழ்த்தி இறுதிச்சுற்றுக்கு முன்னேறினார். இறுதிச்சுற்றில் சீன வீராங்கனையான யனான் சன்னை வீழ்த்தி தங்கப்பதக்கத்தை வென்று சம்பியன்ஷிப் பட்டத்தைக் கைப்பற்றினார். இறுதிச்சுற்றில் தோல்வியுற்ற யனான் சன் வெள்ளிப்பதக்கத்தை வென்றார். அரையிறுதியில் தோல்வியுற்ற பின்பு கிடைத்த ரெப்பிசேஜ் வாய்ப்பில் அசத்திய பபிதா குமாரி வெண்கலப் பதக்கத்தைக் கைப்பற்றினார்.

# டொனால்ட் வெற்றிக் கிண்ண ஒரு நாள் கிரிக்கெட் இன்றைய இறுதிப் போட்டியில் அசத்தப்போவது யார்?

## யாழ். சென்றலைட்ஸ் Vs கொக்குவில் கே.சி.சி.சி





(யாழ்ப்பாணம்)

டொனால்ட் கணேசகுமார் வெற்றிக் கிண்ண ஒரு நாள் கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டி இன்றைய தினம் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளது. இப்போட்டியில் பலம் மிக்க அணி களான கொக்குவில் கே.சி.சி.சி. அணியும் யாழ். சென்றலைட்ஸ் அணியும் மோதவுள்ளன.

யாழ். சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்படும் டொனால்ட் கணேசகுமார் வெற்றிக் கிண்ணத்திற்கான ஒரு நாள் கிரிக்கெட் சுற்றுப் போட்டி கடந்த ஆறு வருடங்களுக்குப் பின்னர் மீண்டும் இவ்வருடம் ஆரம்பிக்கப்பட்டுள்ள து.

கிரிக்கெட்டில் சிறுவயதிலிருந்து முத்திரை பதித்த டொனால்ட் கணேசகுமார் 1965ஆம் ஆண்டு யாழ். மத்திய கல்லூரி கிரிக்கெட் அணிக்குத் தலைமை தாங்கினார். அதற்கு முதல் வருடமே இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் அணியில் இடம்பிடித்த துடன் அவுஸ்ரேலியாவுக்கு சென்றார். அங்கு தனது திறமையை வெளிப்படுத்தியிருந்தார்.

இவ்வாறானதொரு வீரரின் நினைவாக இச் சுற் றுப்போட்டியை நடத்திவரும் சென்றலைட்ஸ் விளை யாட்டுக்கழகம் உண்மையிலேயே பாராட்டப்பட வேண்டி ஒரு கழகமே.

ஆரம்பித்த காலத்திலிருந்தே 50 ஓவர்களைக் கொண்டு விளையாடப்படும் முதலாவது சுற்றுப் போட்டி என்ற தனித்துவத்தை இப்போட்டித் தொடர் பெற்று வருகின்றது.

கடந்த 1990ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டபோதிலும் சில இடையூறு காரணமாக அடுத்த (1991) வருடமே நடைபெற்றது. ஆரம்பப் போட்டித் தொடரில் மானிப் பாய் பரிஸ் அணி டொனால்ட் கிண்ணத்தைக் கைப் பற்றிக் கொண்டது. இறுதியாகக் கடந்த 2005ஆம் ஆண்டு நடைபெற்ற போட்டித் தொடரில் யாழ். பல்கலைக்கழக அணி கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

இந்த வருடம் இப்போட்டித் தொடரில் யாழ். மாவட்டத்தின் 19 அணிகள் பங்குபற்றியிருந்தன. இதன் இறுதிப் போட்டிக்கு யாழ். சென்றலைட்ஸ் அணியும், கொக்குவில் கே.சி.சி.சி. அணியும் தகுதி பெற்றுள்ளன.

யாழ்.மாவட்டத்திலேயே முன்னணி அணிகளாக வலம் வரும் இவ் அணிகள் நிச்சயமாகக் கிண்ணத் தைக் கைப்பற்றிக் கொள்ளும் முனைப்புடன் கள மிறங்கும் என்பதில் ஐயமில்லை. அந்த வகையில் கொக்குவில் கே.சி.சி.சி. அணியைப் பொறுத்த வரை யில் துடுப்பாட்டம், பந்துவீச்சு, களத்தடுப்பு என்ற சகலதுறைகளிலும் வலுவான வீரர்களைக் கொண்டுள் ளது. குறிப்பாக, பங்குஜன், உத்தமன் போன்ற வீரர்கள் யாழ். மாவட்டத்திலேயே சிறந்த வீரர்களாக வலம் வருகின்றனர். இது கொக்குவில் கே.சி.சி.சி. அணிக்கு மேலதிக பலமாகவே கருதப்படுகின்றது.

அதேவேளை, யாழ். மாவட்டத்தில் முதன் முறையாக இந்த வருடம் நடத்தப்பட்ட ஜே.பி. எல். ருவென்ரி-20 கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டியில் சென்றலைட்ஸ் அணியை வென்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்ட அனுபவம் அதற்கு உள்ளமையால் இன்றைய தினமும் சென்றலைட்ஸ் அணியை வீழ்த்தி கிண்ணத்தை வெல்ல கொக்குவில் கே.சி.சி.சி. அணி முயற்சிக்கும் என அதன் ஆதரவாளர்களால் பெரிதும் நம்பப்படு கின்றது.

இதேபோன்று நீண்ட இடைவெளிக்குப் பின்னர் மீண்டும் கிரிக்கெட் போட்டிகளில் பங்குகொள்ளும் சென்றலைட்ஸ் அணி இரண்டாவது இறுதிப் போட் டிக்குத் தகுதி பெற்று அதன் பலத்தை வெளிப் படுத்தியிருக்கிறது. சகலதுறை வீரர்கள் பலரை சென்றலைட்ஸ் அணி தன்னகத்தே கொண்டுள்ளது. இதில் கோகுலன், எரிக் துசாந், எட்வேட் எடின் போன்ற இளமைத் துடிப்பு மிக்க வீரர்களின் ஆட்டம் எப்பொழுதும் சென்றலைட்ஸ் ஆதரவாளர்களைப் பரவசப்படுத்தி வருகின்றமையை அவதானிக்க முடி கின்றது.

அத்துடன் ஜே.பி.எல். ருவென்ரி-20 கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டியில் தோல்வி யடைந்தமைக்குப் பழிதீர்க்கும் ஒரு சந்தர்ப்பமாகவும் இன்றைய இறுதிப் போட்டியை சென்றலைட்ஸ் அணி பயன்படுத்திக் கொள்ளும் என அதன் ஆதர வாளர்களால் நம்பப்படுகின்றது.

சமபலம் கொண்ட அணிகள் இன்றைய தினம் இடம்பெறும் டொனால்ட் வெற்றிக் கிண்ண இறுதிப் போட்டியில் மோதவுள்ளமையால் நிச்சயமாக இப் போட்டி பரபரப்புக்கும், விறுவிறுப்புக்கும் பஞ்ச மிருக்காத வகையில் அமையும் என்பதில் ஐயமில்லை. எந்த அணி அசத்தப்போகின்றதோ, இல்லையோ யாழ். மாவட்ட கிரிக்கெட் இரசிகர்களுக்குப் பெரு விருந்ததாக இப்போட்டி அமையும் என்று நம்பலாம்.

(எஸ்.பி.)

## பல்கலை அணி சம்பியன்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஹொக்கிச் சங்கம் யாழ்.மாவட்ட ஹொக்கி அணிகளுக்கு இடையே நடத்திய ஹொக்கிப் போட்டியில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக் ஹொக்கி அணி மாவட்ட சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஹொக்கி அணியும் வட்டுக் கோட்டை ஒல்ட் கோல்ட்ஸ் ஹொக்கி அணியும் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இறுதிப்போட்டியில் மோதின.

பல்கலைக்கழக அணி ஒரு கோலைப் பெற்று முன்னணியில் இருந்த நிலையில் முதல் பாதி ஆட்டம் முடிவடைந்தது.

இரண்டாவது பாதி ஆட்டம் ஆரம்பமாகி 5 நிமிடத்தில் ஒல்ட் கோல்ட்ஸ் அணி ஒரு பந்தை அடித்து கோல் பெற்ற போதிலும் அதனைக் கோல் இல்லையென மத்தியஸ்தர் அறிவித்ததைத் தொடர்ந்து போட்டியில் இருந்து ஒல்ட்கோல்ட்ஸ் அணி வெளி நடப்புச் செய்த நிலையில் ஆட்டம் முடிவடைந்தது.

யாழ். ஸ்டார் அணி இரண்டாம் இடத்தினையும் யாழ்ப்பாணம் சென்லைட்ஸ் சொக்ஸ் அணி மூன்றாம் இடத்தினையும் பெற்றுக்கொண்டன.

## கரவெட்டி கொத்தணி அணி சம்பியன்



(யாழ்ப்பாணம்)

90ஆவது சர்வதேச கூட்டுறவு தினவிழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட கயிறு இழுத்தல் போட்டியில் கரவெட்டி பனை, தென்னை வள அபிவிருத்திச் சங்க கொத்தணி அணி சம்பியன் பட்டத்தை வென்றது.

90ஆவது சர்வதேச கூட்டுறவு தினவிழாவை முன்னிட்டு வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினால் யாழ். மாவட்ட கூட்டுறவு அணிகளுக்கிடையில் கயிறு இழுத்தல் போட்டி ஒன்றை நடத்தியது. இதில்12 அணிகள் பங்குபற்றியபோதும்,சுன்னாகம் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட் டுறவுச் சங்க அணியும், கரவெட்டி பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு சங்க அணியும் இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றன. இதில் பலமான வீரர்களைக் கொண்டிருந்த கரவெட்டி பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு சங்க அணி கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது. (54)

# ஜனநாயக அரசாங்கம் ஒன்றை எந்த நாடும் வற்புறுத்த முடியாது

இந்தியாவோ அல்லது அமெரிக்காவோ எந்த நாடும், தமிழ் சிறுபான்மையினருடன் நல்லிணக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி இலங்கை அரசாங்கத்தை வற்புறுத்த முடியாது. அவர்கள் இலங்கை பிரஜைகள். மூலோபாய பின்னணியை நோக்கும்போது இப்போதைய காலம் 1987 ஐ விட வித்தியாசமானது. கடந்த காலத்தில் நல்லிணக்க நடவடிக்கையை துரிதப்படுத்தும்படி பிரயோகித்த அழுத்தங்களை இந்தியாவால் இப்போது பிரயோகிக்க முடியாது.

இந்தப் பிரச்சினையில் கடந்த காலத்தில் இந்தியா மேற்கொண்ட முயற்சியின் விளைவாக 1987இல் இந்திய - இலங்கை உடன்படிக்கை கைச்சாத்தானது. அது மாகாணசபைகளை உருவாக்குவதன் மூலம் குறிப்பிட்டளவு சுயாட்சியை வழங்குகிறது. இலங்கை அரசியலமைப்பிற்கு மேற்கொள்ளப்பட்ட 13ஆவது திருத்தம் மூலம் இது முறைப்படுத்தப்பட்டது. இருந்தபோதிலும் பல்வேறு அரசியல் காரணங்களினால் மாகாணசபைகளுக்கு அதிகாரங்களை பகிர்ந்தளிப்பது முழுமையாக விரிவுபடுத்தப்படவில்லை.

ஈழப்போரில் வெற்றி பெற்ற பிறகு ஜ்னாதிபதி ராஜபக்ஷ யாராலும் சவால்விட முடியாத தலைவராக உருவாகியுள்ளார் மற்றும் தமிழர்களிடம் மட்டுப்படுத்தப்பட்ட அரசியல் செல்வாக்கே உள்ளது. எல்.ரி.ரி.ஈ இப்போது அங்கு இல்லாதபடியால் ராஜபக்ஷ நல்லிணக்க நடவடிக்கைகளை தனது சொந்த வேகத்திலேயே கொண்டு செல்கிறார். இது தமிழர்களின் ஆதரவை மட்டும் விலக்கிவிடவில்லை, இந்தியா அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளிடமிருந்து இலங்கை அனுபவித்து வந்த சில நல்லெண்ணத்தையும் விலக்கியுள்ளது. எனினும் ஒரு தேசியத் தலைவர் என்கிற வகையில் ராஜபக்ஷ, இந்த விடயத்தில் வெளி அழுத்தங்களுக்கு தலை வணங்குவது தனக்கு அவமானகரமானது என நினைக்கிறார் போலத் தெரிகிறது. எனவே அவர் தனக்கு வேண்டியளவு காலம் தாழ்த்துகிறார். அவரை நடவடிக்கை மேற்கொள்ளும்படி தள்ளிவிடுவதற்கு இந்தியா தனது இராஜதந்திர மற்றும் பொருளாதார கருவிகளை மாத்திரமே பயன்படுத்த முடியும்.

பிரபாகரன் ஒரு சர்வாதிகார பாணி தலைமையையே கொண்டிருந்தார். மற்றும் வெளியேறிய அந்த தலைவரினால் ஏற்பட்ட வெற்றிடத்தை ஜனநாயக தலைவர்களால் நிரப்ப முடியாது. அது இந்தியாவிலுள்ள அல்லது வேறு எங்காவது உள்ள எந்த தமிழ் அரசியல்வாதியினாலோ நிரப்பப்பட முடியாதது. ஏனெனில் அவர்கள் இலங்கை மக்களாக கணிக்கப்படுவதில்லை.

இலங்கை தமிழ் தலைவர்கள் தமிழ் மக்களின் நம்பிக்கையை இன்னமும் பெறவில்லை, ஏனெனில் அந்த மக்கள் போரினால் ஏற்பட்ட அதிர்ச்சியால் பாதிக்கப்பட்டு இன்னமும் வழமை நிலைக்கு திரும்பாதவர்களாகவே உள்ளனர். மற்றும் அவர்கள் கண்ணியத்துடனும் நம்பிக்கையுடனும் வாழவேண்டும்.

இலங்கை நம்மைச் சூழ உள்ள மற்ற நாடுகளைப் போல அல்லாது, மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனநாயக அரசாங்கத்தைக் கொண்டது. தமிழ்மக்களும் அங்கு வாக்களித்துள்ளார்கள். எனவே அது இராணுவ ஆட்சி அல்லது முடியாட்சி வகையினை சேர்ந்தது அல்ல. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இரண்டுமுறை மிக அதிகப்படியான வாக்குகளால் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டவர். ஒரு ஜனாதிபதி என்கிற வகையில் ஏராளமான அதிகாரங்களைக் கொண்டிருக்கிறார். அவற்றை பயன்படுத்த அவர் தயங்குவதில்லை. ஏனெனில் அவர் பெரும்பான்மையான இலங்கையர்களின் நம்பிக்கையைப் பெற்றுள்ளார்.

அவர் இந்தியாவுடன் சகோதரத்துவமான உறவைக் கருதுவதோடு முக்கியமாக இலங்கையின் நலன்களுக்கும் முக்கியத்துவம் வழங்குகிறார். முக்கியமான பிரச்சினைகளின் போதெல்லாம் அவர் இந்தியாவுடன் கலந்தாலோசித்து வருவதுடன் இந்தியாவுடன் நெருங்கிய உறவை வளர்ப்பதற்காக கடுமையாக உழைக்கிறார். இலங்கையின் தேசிய நலன்கள் என அவர் கருதுவதற்கு ஏற்றபடிதான் அவர் நடப்பார் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். அவர் தன்னுடைய மக்களுக்கு பொறுப்புக்கூற வேண்டியவர் என்பதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். எனினும் அவரது ஆட்சி இன்னமும் அதிக மானிடத்தன்மையுள்ளதாக மாறுவதற்காக நாங்கள் துணிந்து எங்கள் செல்வாக்கினை இன்னும் சற்று அதிகமாக பிரயோகிக்க வேண்டும்.

பிந்தைய காலனித்துவ அரசாங்கங்களில் மாத்திரமன்றி, மேற்கத்தைய அரசாங்கங்களில்கூட இந்த பெரும்பான்மை - சிறுபான்மை பிரச்சினை உள்ளது. பெல்ஜியம் இதற்கு நல்லதொரு எடுத்துக்காட்டு. பெல்ஜியம் மிகச் சிறிய ஒரு நாடு. அங்கு பிரஞ்சு மொழி பேசுவோரும் மற்றும் பிளமிஷ் மொழி பேசுவோரும் மோதிக் கொள்கின்றனர்.

இந்தியாவிலும் போடோக்கள், நாகர்கள் மற்றும் மெய்த்தீஸ் போன்றவர்கள் ஆயுதமேந்தியது இந்த சிறுபான்மை பிரச்சினை காரணமாகத்தான். இந்தியா மற்றும் ஏனைய மேற்கத்தைய நாடுகளில் மட்டுமன்றி இலங்கையிலுள்ள ஏனைய அரசியற் கட்சிகளும் மீள் கட்டமைப்பை செய்யும் அதே வேளை, பக்கத்துக்குப் பக்கம் சிறுபான்மையருக்கு அதிகாரப் பகிர்வை வழங்கவேண்டிய தேவை பற்றி ஆலோசனைகளைத் தெரிவித்துள்ளன.


எனினும் இலங்கை தலைமை, போரினால் சீரழிந்த பகுதிகளில், வாழ்விடங்களைப் புனரமைப்பு செய்வது மற்றும் உட்கட்டமைப்பு என்பனவே மக்களின் வாழ்க்கைமுறையை முன்னேற்றத் தேவையானது. அதிகாரப்பகிர்வு ஒரு அரசியல் நடவடிக்கை. அதற்கான கட்டம் வரும்போது அதை முன்னேற்ற முடியும் என நம்புகிறது. எனவே போருக்கு பிந்தைய இலங்கையில், பிரமாண்டமான அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மீள நிறுவுதல் போன்ற ஒரு தோற்றமே காணப்படுகிறது. இவையாவும் சிங்கள பெரும்பான்மையினருக்கு இணையான சம உரிமைகளுக்காக போராடி வரும் மக்களை வெற்றி கொள்ளவில்லை.



- கேணல். ஹரிஹரன் நேர்காணலிலிருந்து.

# உறுத்தல்

- ஞாநி -




ஊழலுக்கெதிரான இந்திய அமைப்பைச் சேர்ந்த அசீம் திரிவேதி வரைந்த கார்ட்டூன்களுக்காக அவர் கைது செய்யப்பட்டது இந்தியா முழுவதும் ஊடகங்களில் பெரும் பரபரப்பாகப் பேசப்பட்டது. கைதைக் கண்டித்தவர்களில் கூட பலர், அசீம் நாடாளுமன்ற கட்டடத்தைக் கழிப்பறை போல வரைந்து இழிவுபடுத்தியிருக்க வேண்டாம் என்று சொன்னார்கள்.

எனக்கும் அதே கருத்துதான். ஆனால் காரணம் வேறு. கழிப்பறையை இழிவின் சின்னமாகக் கருதி பாராளுமன்றை அதைப் போல வரைந்தது தவறு என்பதுதான் என் கருத்து. கழிப்பறைகள் இழிவின் சின்னங்கள் அல்ல. அவை இல்லையென்றால் மனித வாழ்க்கையே இல்லை. மனிதன் மீதிநேரம் தூய்மையாக ஆரோக்கியமாக இருப்பதற்கு கழிப்பறை மிக மிக முக்கியமான காரணம். எனவே நாடாளுமன்றைக் கழிப்பறையாக வரைந்து கழிப்பறைகளை அசீம் இழிவுபடுத்தியிருக்க வேண்டாம்.

கழிப்பறைகளை இழிவின் அடையாளமாகப் பார்ப்பதற்குக் காரணம் நம் சாதியப் பார்வைதான். கழிப்பறையை சுத்தப்படுத்துவோரைக் கீழ் சாதியாக்கி தீண்டாமை மூலம் இழிவுபடுத்தி வைத்திருக்கிறோம். அந்த சாதிகளின் உழைப்புடன் தொடர்புள்ள கழிப்பறை, செருப்பு முதலியவை எல்லாம் இழிவின் சின்னங்களாக்கப் பட்டிருக்கின்றன. இது பற்றி நாம் உறுத்தல் இல்லாமல் இருப்பதுதான் ஆபத்தானது.

மற்றபடி கார்ட்டூன்களுக்காக அரசோ யாருமோ பயப்படுவது வேடிக்கையாக இருக்கிறது. அவை சிந்திப்பதற்கும் ரசிப்பதற்குமானவை. அநாகரிகமாக, கண்ணியமில்லாமல் போடும் கார்ட்டூன்களைக் கண்டிக்கலாம். சிங்கள இராணுவத்துக்கு பயிற்சி தரக் கூடாது என்று ஜெயலலிதா உத்தரவிட்டதால் எரிச்சலடைந்த ஒரு சிங்கள கார்ட்டூனிஸ்ட் ஜெயலலிதாவையும் மன்மோகன்சிங்கையும் ஆபாசமாக கார்ட்டூன் போட்டார். தமிழ்நாட்டில் எதற்கெடுத்தாலும் அவதூறு வழக்கு போடும் ஜெயலலிதா ஏனோ இந்த கார்ட்டூனைக் கண்டுகொள்ளவே இல்லை. நியாயப்படி இந்திய அரசு இலங்கை அரசிடம் இதற்கு கண்டனம் தெரிவித்திருக்க வேண்டும். அதை விட்டுவிட்டு அசீம்களைக் கைது செய்துகொண்டிருக்கிறது.

கார்ட்டூனிஸ்ட் கைது பற்றி பலரும் கண்டனம் தெரிவித்தபோதும் இதை கிண்டல் செய்து, டைம்ஸ் ஒ.்.ப் இந்தியாவில் அஜீத் நைனன் போட்ட கார்ட்டூன்தான் சூப்பர்.

இந்தக் கார்ட்டூன் விவகாரத்தில் எனக்கு இருக்கும் மிகப்பெரிய உறுத்தல் ஒன்று உண்டு. அசீம் கைது செய்யப்பட்ட அதே இ.பி.கோ 124 ஏ பிரிவுதான், கூடங்குளத்தில் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் மீதும் போடப்பட்டிருக்கிறது. அசீம் கைதையடுத்து அந்தப் பிரிவையே ரத்து செய்யவேண்டும் என்று கூவிய ஆங்கில ஊடகங்கள், கூடங்குளம் மக்கள் மீது அதைப் போட்டதை இதுவரை கண்டித்ததே இல்லை.

# அறிவு மகன்



சுவாமி விவேகானந்தர் உலக சமய மாநாட்டிற்குச் செல்வதற்கு முன்பிருந்தே 20 வயது மதிக்கத்தக்க ஓர் அழகான அமெரிக்க இளம் பெண் விவேகானந்தர் எங்கு சென்றாலும் அவரைப் பின் தொடர்ந்து சென்றாள். எப்படியாவது விவேகானந்தரைத் தனியே சந்தித்துப் பேசிவிட வேண்டும் என்று மிகக் கடுமையாக முயன்று அப்படியே சந்தித்தும் விட்டாள்!

“என்னிடம் தனியாகப் பேச வேண்டும் என்றீர்களே. என்ன விஷயம் தாயே!” என்றார் விவேகானந்தர்.

“உங்களைப் பல காலம் தொடர்ந்து தனியே சந்திக்க முயன்று இப்போதுதான் காலம் கனிந்திருக்கிறது. அமெரிக்க இளைஞர்கள் பலர் என் அழகில் மயங்கி என்னைத் தினமும் சுற்றிச் சுற்றி வருகிறார்கள். ஆனால் நானோ உங்கள் அறிவில் மயங்கி உங்களைச் சுற்றிச் சுற்றி வருகிறேன்...” என்று சொல்லி மேலே பேசத் தயங்கினாள்.


“அதற்கு நான் என்ன செய்ய வேண்டும் தாயே?”

“என்னுடைய அழகும் உங்களுடைய அறிவும் சேர்ந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்? நாம் திருமணம் செய்து கொண்டால் எனது அழகோடும் உங்கள் அறிவோடும் நமக்குக் குழந்தை பிறக்கும். அதற்காகத்தான் நான் உங்களிடம் தனியாகப் பேச எண்ணினேன்” என்றாள் அவள்.

அவளது இந்தப் பேச்சைக் கேட்டு எவ்வித அதிர்ச்சியும் அடையாமல் நிதானமாகவே அவளுக்குப் பதில் சொன்னார் விவேகானந்தர்.

“தாயே எனக்கு 31 வயது ஆகிறது. உங்களுக்கு 20 வயது இருக்கலாம். நாம் திருமணம் செய்து நமக்குக் குழந்தை பிறந்து, அந்தக் குழந்தை வளர்ந்து 20 வயதைத் தொடுகின்ற போதுதான் அந்தக் குழந்தை அறிவானதா, இல்லையா என்பது தெரியும். அதற்குப் பதிலாக நீங்கள் என்னையே தங்கள் மகனாக ஏற்றுக் கொள்ளலாமே?” என்றார் சுவாமி விவேகானந்தர்!

(“இந்தியாவின் விடிவெள்ளி சுவாமி விவேகானந்தர்” என்ற நூலில்)



# எலும்புகளால் கப்பல்!

நெப்போலியன் காலத்தில் நடந்த போர்களின் போது, பிரிட்டன் படைகளால், ஏராளமான பிரெஞ்ச் படையினர் கைது செய்யப்பட்டனர். இவர்கள், பிரிட்டனில் உள்ள சிறைகளில், பல ஆண்டுகளாக தண்டனை அனுபவித்து வந்தனர். இவர்களில் சிலர், பொழுது போகாத நேரங்களில், சிறிய அளவிலான கப்பல் மாதிரிகளை செய்தனர். இந்தக் கப்பல்களை செய்வதற்காக, இவர்கள் பயன்படுத்திய பொருட்கள், ஆடு மற்றும் பன்றிகளின் எலும்புகள். இவர்களுக்கு சிறைகளில் ஆட்டிறைச்சி மற்றும் பன்றி இறைச்சி வழங்கப்படுவது வழக்கம். அவற்றில் உள்ள எலும்புகளை சேகரித்து வைத்து, இந்த மாதிரிக் கப்பல்களை உருவாக்கினர்.

சிறை வளாகத்தில் உள்ள கல்லறைக்குச் சென்று, அங்கு கிடைக்கும் மனித எலும்புகளையும் சேகரித்து, இந்தக் கப்பல்களை தயாரிப்பதற்குப் பயன்படுத்தி உள்ளனர். எலும்புகள் தவிர, காகிதங்கள், முடி, நூல் ஆகியவற்றையும் பயன்படுத்தியுள்ளனர்.

இந்த அரிய மாதிரிக் கப்பல்கள், பல கைகள் மாறி தற்போது பிரிட்டனில் உள்ள ஏல நிறுவனத்தின் கைவசம் வந்துள்ளது. விரைவில் இவற்றை ஏலம் விட முடிவு செய்துள்ளனர். பல இலட்சம் ரூபாய்க்கு, இவை ஏலம் போகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# கடவுள் வசிக்குமிடம்...

மிகவும் கஷ்டப்பட்ட நிலையிலிருந்த ஒரு விவசாயி, கால்நடைப் பயணமாகப் பக்கத்து ஊருக்கு, ஒரு காட்டின் வழியே சென்றான்.

இருட்டி விடவே, இனிமேலும் பயணம் வேண்டாம் என்று முடிவு செய்து, அங்கிருந்த ஒரு மரத்தினடியில் படுத்து ஓய்வெடுக்கத் தொடங்கினான். அந்த மரம் நினைப்பதையெல்லாம் தரும் கற்பக மரம் என்பது அவனுக்குத் தெரியாது.

மிகவும் பசியாக இருக்கிறதே என்று நினைத்தான். உட்னே ஒரு தட்டு நிறைய உணவு வந்தது. ஆச்சரியமடைந்த அவன் அதைச் சாப்பிடத் தொடங்கினான்.

உணவு சாப்பிட்டதும் உறக்கம் வந்தது. ஒரு பஞ்சணை இருந்தால் நன்றாக இருக்குமே என்று நினைத்தவுடன் பஞ்சு மெத்தையும் வந்தது.

அதில் ஏறிப் படுத்தான். நடந்து வந்ததால் கால்கள் வலிக்கின்றதே, இரண்டு பேர் கால்களை அமுக்கிவிட்டால் சுகமாக இருக்குமே என்று எண்ணினான்.

உடனே இரண்டு பேர் அவனருகில் அமர்ந்து அவனது கால்களை அமுக்கி விடத் தொடங்கினார்கள்.

அவனுக்கு மிகவும் சந்தோஷமாகப் போய்விட்டது. இதெல்லாம் எப்படி நடக்கிறது என்பது புரியாமல் மேலும் கீழுமாய்ப் பார்த்தான். எதுவும் புரியவில்லை அவனுக்கு!



உடனே அவனுக்கு ஒரு எண்ணம் ஏற்பட்டது.

இது ஒரு பூதத்தின் வேலையாகத்தான் இருக்கும், அது வந்து நம்மை விழுங்கப் போகிறது என்று நினைத்தான்.

அதன்படியே பூதம் ஒன்று வந்து அவனை விழுங்கிற்று.

தூய்மையான உள்ளமாக இருந்தால் அங்கு கடவுள் வசிப்பார். அவநம்பிக்கையுடன் இருந்தால்...

# 100 வயதைத் தாண்ட...



அமெரிக்காவில் 100 வயதுக்கு மேலானவர்கள் 50,000 பேர்கள் உள்ளனராம்! ஜப்பானில் 25,000 பேர்களாம்! இப்படி சதம் போட்டவர்கள் அதிகமாகிக் கொண்டே போகிறார்கள்! 60 வ்யதுக்கு மேல் 80 வயதில்தான் கிழடு தட்டுகிறதாம்! 80 வயதுக்கு மேல் மனித உறுப்புகள், மூளை முதலியன சீர் கெட்டுப் போவதில்லையாம்! மறுபடி இளமை திரும்புகிறதாம்!

தற்போது விஞ்ஞானிகள் மனிதனின் ஆயுள்காலத்தை அதிகரிக்கத் தீவிர முயற்சியில் இறங்கியுள்ளார்கள். "மெலோட்டனின்" எனும் திரவம் உடலில் குறைவதால் முதுமை அடைவதாகக் கருதி அதற்காக மெலோட்டனை உடலில் செலுத்தி ஆராய்ச்சி நடைபெற்று வருகிறது.

மற்றும் Anti accident சிகிச்சை மூலமும் முதுமையில் வரும் பல நோய்களை வெல்ல முடியும் என பல ஆராய்ச்சிகள் செய்து கொண்டுள்ளனர்.

நல்வாழ்விற்கான ஆரோக்கியக் கோட்பாடுகளை அனுபவ ரீதியில் அனுசரிக்க மறுத்தும், ஆசை போன போக்கில் போய்க் கொண்டிருப்பவர்கள் அதை நிறுத்தி ஆரோக்கியக் கோட்பாடுகளை மறுத்து அனுசரிக்க ஆரம்பித்தாலே 100 வயது எல்லையைத் தொட்டு விட முடியும் என்பது நிச்சயம்.

**('100 வயதைத் தாண்ட நடைமுறைகள்' என்ற நூலில்)**


# ஒரு கிழக்கு முஸ்லிமின் குரல்!

அடுத்த சித்திரை புதுவருடம் தமிழீழத்தில்தான் நடக்கும், அன்று சிங்களவனின் தோலை செருப்பாக அணிவோம் என்று சொல்லிக் கொண்டுதான் 70களில் யாழ்ப்பாண லோயர் மாமாக்கள் வாக்குவேட்டையாடி மொத்த தமிழனையும் ஏலம் விட்டுவிட்டு, அவர்கள் தம் பிள்ளைகளை ஐரோப்பிய வாழ்க்கைக்கு தயாராக்கினார்கள். இப்போக் ரொம்பக் காலம் கழித்து அதே பாணி சூடேற்றல்களுடன் நம்ம..........? நாம் தமிழ் இளைஞர்கள் அல்ல. இவர்கள் சூடேற்றும் போதெல்லாம் சூடேறுவதற்கு. ஆனால் தொடர்ந்தும் இவர்களது பசப்பு வார்த்தைகளுக்கு ஆடுவதற்கு பொம்மலாட்டக்காரர்களும் அல்ல என்பதை நிரூபிக்க வேண்டிய காலம் வந்துவிட்டது.

நாம் இங்கு மகிந்த சகோதரர்களுடன் மல்லுக்கு நிற்கவோ, சம்பந்தன் தரப்புடன் தேன் நிலவு கழிக்கவோ சொல்லவில்லை. ஏனென்டில் சிங்கள பாமர மக்களையும், தமிழ் பாமர மக்களையும் முழுக்க முழுக்க நம்பலாம். ஆனால் சிங்கள அரசியல் வாதிகளை நம்பினாலும், தமிழ் அரசியல்வாதிகளை ஒரு வீதமும் நம்ப முடியாது. சம்பந்தன் ஐயாவை நம்பினாலும், வடக்கில் பிறந்து, வளர்ந்து இப்போது சம்பந்தன் ஐயாவின் திவசத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் அந்த கண்கொத்திப் பாம்புகளை நம்பவே முடியாது. ஆனால் நேற்றைய தலைப்பு செய்திகளில் கலாநிதி. ஹஸ்புல்லா அழகாக சொன்னதை (கிழக்கில் முஸ்லிம்கள் ஐந்து வீத நிலத்திலேயே இருக்கின்றனர்), முப்பது வருடத்துக்கு முதல் யாழ்.லோயர்கள் ரொம்ப ஆவேசமாகச் சொன்னார்கள்.

அந்த ஆவேசம் பல துன்பியல் சம்பவங்களுக்கு வழிவகுத்தது. அதே பாணியை இப்போது நீங்கள் கையில் எடுத்து குளிர்காய முற்படுகின்றீர்கள். அது கூடாது. அதற்கு இது தருணமுமல்ல. ஆம் சகோதரர்களே, முஸ்லிம் காங்கிரஸ் என்கின்ற ஒரு கட்சி முழு ஸ்ரீலங்கா முஸ்லிம்களுக்கும் தேவை. அந்த கட்சிக்கு முதுகெலும்புள்ள தலைவர்களும் தொண்டர்களும் தேவை.

நசீர் ஹாபீஸ் என்றொருவர், அஸ்ரப் தலைவராக இருக்கும் போது கட்சியில் இணைகின்றார். அஸ்ரப் இறந்ததும் அவர் கட்சியை விட்டு ஒதுங்குகின்றார். அல்லது ஒதுக்கப்படுகின்றார். திடீரென அவர் கோடீஸ்வரர்கள் லிஸ்ரில் இணைக்கப்படுகின்றார். முஸ்லிம் காங்கிரஸ் என்ற ஒரு கட்சியின் தலைமைக் காரியாலயம், அந்த நசீர் ஹாபீசின் பெயரில் இருக்கின்றது எனச் சொல்லி அனைவரும் ஒதுங்கி நிற்கின்றார்கள். முந்தாநாள், திடீரென அதே நசீர் அகமட் புதிய தலைவர் ரவுப் ஹக்கீமுடன் தோன்றுகின்றார்.



நிறைய கசமுசாக்கள் நடக்கின்றன. செய்திகள் றெக்கை கட்டிப் பறக்கின்றன. கட்சி தலைமைக் காரியாலயத்தை கட்சிக்கு எழுதிக் கொடுத்துட்டாராம் என போராளிகள் (நம்ம முஸ்லீம் காங்கிரஸ் போராளிகள்) கும்மாளம் அடிக்கின்றார்கள். கிழக்குத் தேர்தல் அறிவிக்கப்படுகின்றது. நம்ம சனங்கள் மேடையேறுகின்றார்கள். மேடையில் முக்கிய காட்சிப் பொருள் அந்த கோடீஸ்வரர். கிழக்கின் அடுத்த முதலமைச்சர் அவர்தானாம். இது இப்படி என்றால்.

இன்னொருவர், உணர்ச்சியின் உச்சக் கட்டத்துக்கே போய், 18 நாட்களுக்கு 18 உண்மைகளை சொல்லி வாக்கு கேட்கப் போய், ஈரோஸ் மூத்த போராளி கதைகள் எல்லாம் சொல்லி, மூக்குடைபட்டு (இவருக்கு முதலே ஈரோஸில் சேர்ந்து, மெட்ராஸ் கோரமண்டல் ஹோட்டலில் ஈரோஸ் தலைவர் ரட்ண சபாபதிக்கு விஸ்கியும், ஊறுகாயும் வாங்கிக் கொடுத்த சோனவனுகள் இன்னும் கிழக்கில உலாத்துற கதை தம்பிக்கு தெரியாது போல கெடக்கு) இருந்த பிரதி அமைச்சர் பதவியையும் பறிகொடுத்து... இதுதான் இன்றைய முஸ்லிம் காங்கிரசின் நிலை. வீ டோன்ட் வோன்ட் கொமடியன்ஸ். வீ ஆர் லுக்கிங் போர் ஒன் ஹேண்ட்சம் கைட் போர் அவர் கொம்மியுனிற்றி லீடர்சிப்.

யார் ஸ்ரீலங்கா முஸ்லிம் மக்களுக்கு தலைவர் என்பதைவிட, யார் அதிகூடிய பதவியைப் பெறலாம், யார் அதிகூடிய பணத்தை உழைக்கலாம், யார் அதிக காலம் ஆளும் அரசுகளுடன் ஒட்டி உறவாடலாம் என்பதாகவே இருக்கின்றதே தவிர, ஸ்ரீலங்கா வாழ் மொத்த முஸ்லிம் மக்களைப் பற்றியும் யாரும், கிஞ்சித்தும் சிந்திப்பதாகத் தெரியவில்லை.

இன்று ஸ்ரீலங்காவில் உள்ள மொத்த முஸ்லிம் மக்களில், மூன்றில் ஒரு பகுதியினர் வடகிழக்கிலும், மூன்றில் இரண்டு பகுதியினர் தெற்கு, மேற்கு பகுதிகளிலும் வாழ்கின்றனர். வடகிழக்கில் வாழ்பவர்கள். நெருக்கமாகச் செறிந்து வாழ்வதாலும், தென்மேற்கில் வாழ்பவர்கள். ஆங்காங்கே தொட்டம், தொட்டமாக வாழ்வதாலும், ஸ்ரீலங்கா முஸ்லிம்களுக்கு என்ன பிரச்சினை வந்தாலும், வடகிழக்கு முஸ்லிம்கள்தான் குரல்கொடுக்க வேண்டும், போராட வேண்டும் என்ற ஒரு எழுதப்படாத சடங்கை யாரோ பெயர் தெரியாத பலர் எழுதிவிட்டுச் சென்றுவிட்டனர்.

அன்றிலிருந்து, இன்றுவரை வடக்கு கிழக்கிற்கு வெளியே முஸ்லிம் சமூகத்துக்கு அல்லது முஸ்லிம்களின் முன்னேற்றத்துக்குப் பாதகமாக எது நடந்தாலும் காத்தான்குடியில் ஜும்ஆத் தொழுகையின் பின் ஒரு ஆர்ப்பாட்டம், ஓட்டமாவடியில் ஒரு கடையடைப்பு என்ற ஒரு பத்திரிகைச் சிறு செய்தியுடன் முடிந்து விடுகின்றதே தவிர இதுவரையும், எப்போதும் நடந்த பிரச்சினைகளுக்கு, அல்லது தொடங்கிய தடங்கல்களுக்கு எங்கும், எப்போதும் முடிவுகள் காணப்படவில்லை.

**- சஹாப்தீன் நாநா -**



# கணினி உலா

A.J.Nimalrajan

## Facebook இன் அடிமைகள்

Facebook பயன்படுத்தும் இங்கிலாந்து நாட்டவர்களில ஒன்பதில் ஒருவர் தினமும் எட்டு மணிநேரம் Facebook தளத்தை பயன்படுத்துவதாகவும். சுமார் 20 முறையாவது தமது கணக்கை திறந்து பார்க்கிறார்கள் என புதிய ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன. குறிப்பாக பெண்கள், தங்களின் சக தோழிகள் தம்மை ஏளனம் செய்யும் வகையில் உள்ள புகைப்படங்களை வெளியிடுவது தம் வாழ்வில் உள்ள கவலைகளில் மிக முக்கியமான கவலை எனத் தெரிவித்துள்ளனர்.

38 சதவீத இளம் பயனர்கள், தங்களை சம்பந்தம் இல்லாத புகைப்படங்களில் கோர்த்துவிடுவது (Photo Tagging) மிகவும் எரிச்சலடையச் செய்வதாகத் தெரிவித்துள்ளனர்.

ஐந்தில் ஒருவர், தமது நிலைத் தகவல்கள் தமது வாழ்க்கை மிகவும் சந்தோசமாகவும் வசதியாகவும் இருப்பதாக கொஞ்சம் மிகைப்படுத்தியே பதிவுகள் போடுவதாக ஒத்துக் கொண்டுள்ளனர்.

## Wi-Fi வலைப்பின்னலில் பிரச்சனையா?

Wireless Internet Network என அழைக்கப்படும் Wi-Fi இன்டர்நெட் இணைப்பின் மூலம் நாம் எந்த இடத்திலும் இருந்து இணையத்தை பயன்படுத்தலாம். கேபிளை இணைக்காமல் எளிதாக இணையத்தை பயன்படுத்தலாம்.

இருப்பினும் இதிலும் பல தொல்லைகளை சந்திக்க நேரிடலாம். இணைய இணைப்பை தரும் ரேடியோ அலைகளுக்கு பல தடைகள் உருவாகின்றன.

சிக்னல் வட்டம் சுருங்குதல், வன்தட்டு பிரச்சினைகள், நமக்கு இணைப்பு சேவையினைத் தரும் நிறுவனம் தரும் பிரச்சினைகள் எனப் பலவகைகளில் Wi-Fi இணைப்பிற்கு தடைகள் கிடைக்கின்றன. இவை கூடுமானவரை ஏற்படாமல் இருக்க சில குறிப்புகள் இங்கு தரப்படுகின்றன.

1. மடிக்கணினியில் உள்ள Wi-Fi பட்டன்:

கடைகள், வீடு அல்லது அலுவலகத்தில் Wi-Fi இணைப்பு பெறுவதில் பிரச்னை உள்ளதா? முதலில் உங்கள் கணனியில் பிரச்சினை உள்ளதா எனப் பார்க்கவும்.

உங்கள் மடிக்கணினியில் Wi-Fi பட்டன் அல்லது ஸ்விட்ச் உள்ளதா எனவும், அது எந்த நிலையில் உள்ளது எனவும் கண்டறியவும். இதனை நீங்கள் அறியாமலேயே அழுத்தி அதன் இயக்கத்தை நிறுத்தியிருப்பீர்கள். எனவே அதனை மீண்டும் அழுத்தி இயக்கவும்.

2. கணனி மற்றும் Router Re Boot:

Wi-Fi பட்டனை அழுத்திய பின்னரும், இணைய இணைப்பு கிடைக்கவில்லை எனில், உங்கள் கணனி அல்லது இணைய இணைப்பு கிடைக்கப் பயன்படுத்தும் சாதனத்தையும், Router Re Boot செய்திடவும்.



இதனால் இந்த சாதனங்களின் வன்தட்டு பாகங்கள் ஏதேனும் பிரச்சினை தருவதாக இருந்தால் அல்லது மென்பொருள் குறையுடன் இயக்கப்பட்டிருந்தால், அவை சரி செய்யப்படும்.

அப்படியும் கிடைக்கவில்லை எனில், ரௌட்டரை இணைக்கும் கேபிள்களை 5 முதல் 10 விநாடிகள் வரை கழற்றி வைத்து விட்டு பின்னர் இணைக்கவும்.

இதனை power cycling வழி என்பார்கள். மின் சக்தி மற்றும் இணைப்பு அகற்றப்பட்டு, மீண்டும் தரப்படுகையில் இவை சரியாக இயங்கத் தொடங்கும்.

## பெயரே இல்லாத Folder

Desktop இல் நியூ folder create செய்வது அனைவருக்கும் தெரிந்ததே.


ஆனால் நீங்கள் create செய்யும் folder க்கு பெயர் ஏதும் கொடுக்காமல் உருவாக்க முடியுமா?? ஒருவேளை அப்படி உருவாக்கினால் அது பார்ப்பதற்கு எப்படி இருக்கும்? ஒரு folder பெயரே இல்லாமல் காட்சி அளிக்கும்... இதோ இப்படித் தான் அதற்கான வழிமுறை.

முதலில் desktop இல் Newfolder ஒன்றை create செய்யுங்கள் அந்த folder க்கான பெயரை உடனே உங்களிடம் கேட்கும். அப்போது அந்த இடத்தில் உள்ள New Folder என்ற பெயரை அழித்து விட்டு, Alt கீயை அழுத்திக்கொண்டு 255 என்ற எண்ணை type செய்யுங்கள் (Alt + 255). உடனே ஒரு Empty Folder உங்களுக்கு காட்சி அளிக்கும்...

## உங்களின் கணினியை மேம்படுத்த Harddisk வாங்கப் போகிறீர்களா?

உங்களின் கணினியில் இடம் போதவில்லை என புதிதாக ஒரு Hard Disk வாங்கினால் நல்லது என நினைக்கிறீர்களா? புதிதாக ஒரு 500 GB அல்லது 1 TB வாங்கி வைக்கலாம் என ஒரு யோசனை வைத்திருந்தால் அதை சற்று தள்ளிப் போடுங்கள்.

அல்லது., கணினியின் செயலி (Processor) மெதுவாக உள்ளது என புதிய Core i7 / Core i5 Processor வாங்கி மேம்படுத்துதலை விட ஒரு 120 GB SSD வாங்கி அதில் உங்களின் Windows + SoftwaresI பதியும் போது உள்ள வேக மாற்றம் சமமாக இருக்கும்.





நாம் பொதுவாக வாங்கும் IDE, SATA, SATA2 Harddisk அல்லாமல் ஒரு SSD வாங்குவது பற்றி யோசியுங்கள்.

நீங்கள் ஒரு புதிய SSD வாங்கி அதில் உங்களின் OS மற்றும் அனைத்து மென்பொருள்களையும் (Photoshop, Coral, AutoCad, 3D Studio Max) போன்ற அதிக செயல் திறன் வேண்டிய அனைத்து மென்பொருளையும் அதிலேயே பதியுங்கள் (Install).

இப்போது உங்களின் கணினியில் இரண்டு Harddisk இருக்கும். SSD இல் OS & Software installations. ஏற்கனவே இருந்த Harddisk இல் பாடல்கள் மற்றும் படங்கள் போன்ற அதிகம் பயன்படுத்தாத (மென்பொருள்கள் மூலம் எடிட்டிங் வேலைகள் செய்யாமல்.. வெறுமனே கேட்பதற்கு / பார்ப்பதற்கு மட்டும் பயன்படும் Media கோப்புகள்)

பொதுவாக நமது கணினி மெதுவாக இருப்பதன் முக்கிய காரணம் அதன் Harddiskஇன் திறன். Kingston, Corsair, Intel, Samsung போன்ற பிரபல நிறுவனங்களின் தயாரிப்புகளை வாங்குங்கள். விலை சாதாரண Harddiskஐ விட அதிகமாகவே இருக்கும். ஆனால் வாங்கிய பின் அதன் வேகம் உண்மையிலேயே பிரமிக்கும் வகையில் இருக்கும்.




பொதுவாக நமது வன் தட்டுகள் உள்ளே சில தட்டுகள் இருக்கும்.. அதில் தரவுகளை (Data) எழுதுதல் மற்றும் படித்தல் வேலைகள் நடக்கும். ஆனால் SSD களில் அதன் உள்ளே RAM களில் இருப்பது போல Chipகளே இருக்கும். இதனால் இதில் செய்யப்படும் வேலைகளின் வேகம் மிக மிக அதிகமாக இருக்கும்.

## வாழ்வா? சாவா? நோக்கியா

இன்று அனைத்து கைபேசிக்கடைகளிலும் சாம்சங் விரும்பி வாங்கப்படுகிறது. ஆனால் சில வருடங்களுக்கு முன் நோக்கியா கைப்பேசியை தவிர வேறு எதையும் நாம் விரும்பி வாங்குவதில்லை.

கடந்த 10வருடங்களுக்கு மேலாக கைபேசிச் சந்தையின் ராஜாவாக இருந்த நோக்கியா இப்போது 3 பில்லியன் யூரோ நட்டத்தில் உள்ளது. மேலும் 10000 பணியாளர்களையும் நீக்கியுள்ளது. அதற்கு மிக முக்கியமான காரணம Android கைபேசிகளை அது வடிவமைக்காமல் தனது சொந்த கைபேசி இயக்கு தளம் Symbion கைபேசிகளை மட்டுமே அது விற்பனை செய்து வந்தது. ஆனால் சாம்சங் நிறுவனம் Android ஐ தனது பல கைபேசிகளிலும் வைத்து விற்று லாபம் சம்பாதித்தது.

2007இல் Apple iPhone வந்த பின்னர் நோக்கியா பல சவால்களை சந்திதது. இப்போது முழுக்க முழுக்க Windows Phone இயக்கு தளத்தை மட்டுமே தனது கைபேசிகளில் பயன்படுத்த முடிவு செய்து Lumia கைபேசிகளை விற்பனை செய்து வருகிறது.




iPhone மற்றும் Android இயக்குதளங்களுக்கு ஒரு சரியான மாற்றாக உள்ள இந்த Windows Mobile 7.5 இயக்கு தளம் மெதுவாக வளர்ந்து வருகிறது. இப்போது புதிதாக Windows 8 இயக்கு தளத்தை தமது கணினி மற்றும் கைபேசி சாதனங்களில் இந்த மாதம் மற்றும் அடுத்த மாதம் அறிமுகம் செய்கிறது Microsoft. உலகில் விற்கப்படும் ஒவ்வொரு Android கைப்பேசிக்கும் Microsoft நிறுவனம் royalty மூலமாக பெரும் தொகையை Samsung, HTC நிறுவனங்களிடம் இருந்து பெறுகிறது. ஆனாலும் தனது சொந்த இயக்கு தளம் Windows Phone 7.5 & Windows Phone 8 வெற்றியடைய வேண்டும் என Microsoft பல முயற்சிகளை செய்கிறது.

உலக அளவில் உள்ள கைபேசி சந்தையில் 3.7% மக்களால் மட்டுமே பயன்பாடில் உள்ள Windows Phone 7 (Android 68%, Apple 17%) 2013 இறுதிக்குள் 10 சதவீதமாக உயர வேண்டும் இல்லையென்றால் நோக்கியா தமது சொத்துக்களை விற்றுவிட வேண்டும் அல்லது தமது கம்பெனியையே விற்கும் சூழல் உருவாகி நோக்கியா அழிந்து விடும்.

Apple தொடுத்த பல வழக்குகளில் சிக்கி பல கோடி டொலர் அபராதம் செலுத்திய Samsung பெரும் சிக்கலில் உள்ளது. இந்த வாய்ப்பை பயன்படுத்தி Androனைக்கு மாற்றாக மக்கள் Windows Phone வாங்க விரும்பலாம். மற்றும் புதிதாக வரவுள்ள iPhone 5க்கு போட்டியாக விலை மற்றும் தரத்தில் உறுதியாக புதிய Lumia உருவாக்கப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

# யாழ். பொலிஸார் அதிரடி; டிமிக்கிவிட்ட 35பேர் கைது

(யாழ்ப்பாணம்)

கடந்த வாரத்தில் யாழ். மற்றும் காங்கேசன் துறைப்பொலிஸ் பிரிவுகளில் குற்றச்செயல்களைத்தடுக்கும் முகமாக நீதிமன்றத்தினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 35 பேரை பொலிஸார் கைது செய்துள்ளதாக யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சிறிகுகநேசன் நேற்றுத் தெரிவித்தார்.

கடந்தவெள்ளிக்கிழமை அவரது அலுவலகத்தில் நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டெ அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்தக்காலப்பகுதியில் குடிபோதையில் வாகனம் செலுத்தியவர்கள் மீது 29 வழக்குகளும், கஞ்சா குறித்த ஒரு வழக்கும்,அனுமதியற்று அரச சாராயம் வைத்திருந்த குற்றத்திற்காக 03 வழக்குகளும், சட்டவிரோத மண் அகழ்வு குறித்து ஒருவழக்கும் அனுமதியின்றி பனைமரம் வெட்டியது - 02, அடித்துக் காயம் விளைவித்தமை குறித்து 44 வழக்குகளும் சூழல் மாசடையும் விதத்தில் குப்பை கொட்டியது குறித்து 05 வழக்குகளும் நீதிமன்றத்தால் பதிவு செய்யப்பட்டதாகவும் தெரிவித்தார். இதேவேளை பிரதி புதன்கிழமை தோறும் நமது பணிமனையில் பொது மக்களது பிரச்சினைகள் குறித்து பொலிஸ் பொறுப்பதிகாரிகள் பொதுமக்களுடன் சந்திப்பை ஏற்படுத்தி தீர்வுகளைப் பெற்றுக் கொடுத்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த புதன்கிழமை நடைபெற்ற பொது மக்கள் சந்திப்பின் போது பொதுமக்களது எட்டுப் பிரச்சினைகள் தமது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதாகவும் அதில் ஐந்து வழக்குகள் நடைபெற்று முடிவடைந்த முறைப்பாடுகள் மூன்று எனவும் காணாமல் போனவர்கள் சம்பந்தமான முறைப்பாடுகள் குறித்து பொலிஸாரினால் நடவடிக்கை எடுக்க முடியாது என்றும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்தார்.

இதேவேளை நெல்லியடியில் புலிக்கொடி காட்டிய விவகாரம் குறித்து விசாரணையின் முன்னேற்றம் பற்றி யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்களிடம் கேட்கப்பட்டபோது அதற்குப் பதிலளித்த கே. கே. எஸ். பொலிஸ் பொறுப்பதிகாரி விசாரணைகளுக்கு கால அவகாசம் தேவைப்படுவதாகத் தெரிவித்தார். (பா)

## புண்ணிய கிராம எழுச்சி விழா

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களமும், திருநெல்வேலி பாரதிபுலம் ஸ்ரீ காளி அம்மன் தேவஸ்தானத்தினரும் இணைந்து நடத்தும் புண்ணிய கிராம எழுச்சி விழா நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விழாஇன்று திருநெல்வேலி கலாசாலை வீதியிலுள்ள ஒலிம்பிக் விளையாட்டு அரங்கில் காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்து சமய அபிவிருத்தி உதவி உத்தியோகத்தர் திருமதி மாணிக்கராசா சர்மா அனந்தலட்சுமி தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவிற்கு பிரதம அதிதியாக நல்லூர்ப் பிரதேச செயலர் பி. செந்தில் நந்தனன் கலந்து கொள்ளவுள்ளார். சிறப்பு அதிதியாக கிராம சேவகர் த. டினேஸ் கலந்து கொள்ளவுள்ளார். அறநெறிப்பாடசாலை மாணவர்களின்நிகழ்ச்சிகளும், சிறப்புச் சொற்பொழிவுகளும் நடைபெறவுள்ளன. (06)

## ஆதனங்கள் தொடர்பான விபரங்கள் திரட்டல்

வேலணை பிரதேசசபை முப்பத்தைந்து வருடங்களின் பின்னர் வட்டார ரீதியாக பொதுமக்களின் ஆதனங்கள் தொடர்பான விபரங்களைத் திரட்டும் பணியில் ஈடுபட்டுள்ளது.

இதனடிப்படையில் புங்குடுதீவு உப அலுவலக வட்டாரங்களைச் சேர்ந்த மக்கள் தங்கள் ஆதனத்துக்குரிய காணி உறுதியின் மூலப்பிரதி அதன் போட்டோ பிரதி, குடும்ப அட்டை மூலப்பிரதி அதன் போட்டோ பிரதி மற்றும் காணி நில அளவைப் படத்தின் மூலப்பிரதி அதன் போட்டோ பிரதி என்பவற்றை காண்பித்து ஒவ்வொரு ஆதனத்துக்குரிய தகவல் திரட்டும் படிவத்தை பூரணப்படுத்த ஒத்துழைப்பை வழங்குவது டன் இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தங்களின் ஆதன உரிமத்தை பேணும் படியும் தவிசாளர் சி.சிவராசா கேட்டுக் கொண்டுள்ளார்.

இதேவேளை புங்குடு தீவு 1ஆம் 2ஆம் 3ஆம் வட்டாரங்களைச் சேர்ந்த ஆதன உரித்தாளர்கள் நாளை முதல் 5அம் திகதிவரை புங்குடுதீவு உப அலுவலகத்தில் மேற்படி படிவத்தை பூரணப்படுத்துவதுடன் 4ஆம் 5ஆம் 6ஆம் வட்டாரங்களைச் சேர்ந்த மக்கள் எதிர்வரும் 8ஆம் திகதி முதல் 12ஆம் திகதி வரையும் 7ஆம், 8ஆம், 9ஆம் வட்டாரங்களைச் சேர்ந்தவர்கள் 15ஆம் திகதி முதல் 19ஆம் திகதிவரையும் மேற்படி படிவத்தை பூரணப்படுத்துவதுடன் 10ஆம், 11ஆம் 12ஆம் வட்டாரங்களைச் சேர்ந்தவர்கள் 22ஆம் திகதி முதல் 25ஆம் திகதிவரையும் மேற் குறிப்பிட்ட அலுவலகத்தில் தங்களின் ஆதனத்துக்கான தகவல் திரட்டும் படிவத்தை பூரணப்படுத்த முடியுமென அறிவுறுத்தப்பட்டிருக்கிறது.

## விஞ்ஞானபாட கற்பித்தல் செயலமர்வு

வடமாகாணப் பாடசாலைகளின் இடைநிலை வகுப்புக்களில் செயன்முறை விஞ்ஞானக் கல்வியை விருத்தி செய்யும் நோக்கில் விஞ்ஞான பாடக்கற்பித்தல் உபகரண விருத்திச் செயலமர்வு நடைபெறவுள்ளதாக வடமாகாணக் கல்வித் திணைக்களப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் த. கிருபாகரன் அறிவித்துள்ளார்.

நாளை முதலாம் திகதிமுதல் மூன்றாம் திகதிவரை மூன்று நாட்கள் வதிவிடச் செயலமர்வாக வவுனியா சைவப் பிரகாச மகளிர் கல்லூரியில் அமைந்துள்ள களுத்துறை கல்வி மத்திய நிலையத்தில் காலை 8 மணிமுதல் நடைபெறவுள்ளது. இந்த விசேட செயலமர்வினை யுனஸ்கோ செயற்றிட்ட அனுசரணையுடன் தேசிய கல்வி அமைச்சு இணைந்து நடத்துகிறது.

இச்செயலமர்விற்கு மாகாண மட்ட வளவாளர்களான விஞ்ஞான பாட உதவிக்கல்விப்பணிப்பாளர்கள், சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள், ஆசிரிய வள நிலையப் பொறுப்பாளர்கள், உட்பட ஐந்து பேரை அனுப்பி வைக்கும்படி வலயக்கல்விப் பணிப்பாளர்கள் கேட்கப்பட்டுள்ளார்.(06)



அண்மையில் TOEIC ஆங்கில தகைமைகள் பரீட்சை யாழ்நகரில் அறிமுகப்படுத்தப்பட்டது. இந் நிகழ்வுக்கு வருகை தந்த யாழ். பாதுகாப்பு படைகளின் கட்டளைத் தளபதி மகிந்த ஹத்துருசிங்க மற்றும் பிரமுகர்களை TOEIC நிறுவன பிராந்திய முகாமையாளர் ஜெ.விவேகானந்தன், TOEIC நிறுவன இலங்கைக்கான பிரதம நிறைவேற்று அதிகாரி ஹக்கீக் அபுல் ஆகியோர் வரவேற்ப தனையும்

மற்றும் யாழ். தொழில் நுட்பக் கல்லூரி அதிபர் யோகராஜன், DFFC வங்கியின் வடபிராந்திய முகாமையாளர் ரவீந்திரா, Union assurance வடபிராந்திய முகாமையாளர் சுகுணன் மற்றும் இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வருகை தந்த யாழ். பாதுகாப்பு படைகளின் கட்டளைத் தள பதி மகிந்த ஹத்துருசிங்க மற்றும் கல்வியல் நிறுவன அதிகாரிகள், பிரமுகர்கள் ஆகியோர் இந் நிகழ் வில் கலந்து சிறப்பித்தனர்.

## பதிவிருக்கப் பெட்டகம்

தமிழில் சிறந்த குறுநாவல் எது? என்று கேட்டால் யோசிக்க வேண்டி வரும். இந்தத் 'தலை சிறந்த நாவல், குறுநாவல்' என்று வரையறுத்து முழங்குவது காலை ஏகத்துக்கு வீசிப் போட்டு நடக்கிற விஷயம். இதுக்கு முதலில் செய்ய வேண்டியது யாதெனில், தமிழில் நேற்று ராத்திரி எட்டே முக்கால் மணி வரை வெளியான அத்தனை நாவல், குறுநாவல்களையும் ஒரு குறுநாவல் விடாமல் சேகரிக்க வேண்டும். அப்புறம் அலுவலக வேலை, ராத்தூக்கம் எல்லாவற்றையும் துறந்து சேகரித்ததையெல்லாம் ஒன்று விடாமல் படிக்க வேண்டும். நாலு பனடோல் மாத்திரை, பத்து கிளாஸ் சாயா, பழக்கமிருந்தால் சிகரெட் அல்லது பீடி இவற்றின் துணையோடு தலை சிறந்த ஆயிரம், தலை சிறந்த நூறு, தலை சிறந்த பத்து என்று பட்டியல்கள் போட்டுக்கொண்டே போக வேண்டும்.

ஆச்சா, ஒண்ணே ஒண்ணு, கண்ணே கண்ணு ரெடியா? மேடையில் ஏறித் தொண்டையைக் கனைத்துக் கொண்டு 'மிகச் சிறந்த தமிழ்க் குறுநாவல்' என்று அறிவிக்கத் தயாராகிறீர்கள். கொஞ்சம் திரும்பிப் பாருங்கள். உங்களைப் போலவே நண்பர்கள், எதிரிகள், அல்லது யாரோ இன்னொருத்தர் – பக்கத்தில் மேடை போட்டு, 'தமிழில் மிகச் சிறந்த குறுநாவல்' என்று ஆரம்பித்திருப்பார். அவர் தேர்ந்தெடுத்ததை நீங்கள் வாசனை பிடிக்கக்கூடப் பிரியப்பட மாட்டீர்கள். ஆக,

சிறந்த, மிகச் சிறந்த போன்ற ரிலேட்டிவிடி சார்ந்த பிரயோகங்கள் நம்மை எங்கேயும் கொண்டு நிறுத்தப் போவதில்லை. எனக்குப் பிடித்த, எனக்கு மிகவும் பிடித்த – அவ்வளவே வேண்டியது.

சார்வாகனின் 'அமர பண்டிதன்' படித்திருக்கிறீர்களா? விஷ்ணு நாகராஜனின் 'கொடுகொட்டியாட்டம்' படித்திருக்கிறீர்களா? பொ.கருணாகரமூர்த்தியின் 'அகதி உருவாகும் நேரம்' படித்திருக்கிறீர்களா? ராஜநாராயணனின் 'கிடை' படித்திருக்கிறீர்களா? ஸ்ரீதரனின் 'ராமாயணக் கலகம்' படித்திருக்கிறீர்களா? நாகூர் ரூமியின் 'குட்டியாப்பா' படித்திருக்கிறீர்களா? ஜி.நாகராஜனின் 'குறத்தி முடுக்கு'? ஜெயமோகன் பாலசங்கராக அவதாரம் எடுத்துக் கணையாழியில் எழுதிய 'அம்மன் மரம்'?

எனக்குப் பிடித்த குறுநாவல்களில் இவையெல்லாம் [இன்னும் குறிப்பிட அவகாசம் இல்லாத பலவும்] அடங்கும். ஆமாம், 'பிடித்த' தான். தலைசிறந்த என்றெல்லாம் ஒரு சுக்கும் இல்லை.

– இரா.முருகன்


எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது. மேதாவி, சிரஞ்சீவி என்று இருவர் துப்பறியும் நாவல்கள் எழுதிக்கொண்டிருந்தார்கள். மேதாவி எழுதிய நாவல்கள் வெகு பிரபலம். மிகவும் சுலபமாக அவை படிக்கவும் கிடைக்கும். எனக்குப் பலப்பல கற்பனைகளை அள்ளி வீசின, அந்தப் புத்தகங்கள். சிரமம் என்ன என்றால், இவைகளைப் பள்ளிக்கூடத்துக்குப் பகிரங்கமாக எடுத்துச்செல்ல முடியாது. வீட்டிலும் யார் கண்ணிலும் பட்டுவிடக்கூடாது. ஒரு பள்ளிக்கூடச் சிறுவன் இதுபோன்ற 'ஆபாசமான' புத்தகங்களை வைத்திருப்பதாவது?

எனக்குத் துப்பறியும் நிபுணர்கள் செய்யும் சாகசங்கள் மிகவும் பிடித்திருந்தது. எல்லாச் சந்தர்ப்பங்களிலும் காக்கை உட்காரப் பனம்பழம் விழும். ரோட்டில், கசக்கிப்போட்ட காகிதங்களில் இருந்துகூட, அந்தத் துப்பறியும் சிங்கங்களுக்குக் குற்றவாளிகளின் தடயம் கிடைக்கும். மட்டும் அல்ல. குற்றவாளிகள் தானாகவே, துப்பறியும் நிபுணர்களிடம் வந்து தட்டுப்படுவார்கள். விதவிதமான ரிவால்வர்கள், கார்கள் வரும். முதல் வாக்கியமே, "இருட்டைக் கிழித்துக்கொண்டு சீறிப் பாய்ந்து சென்றது ஒரு கெடிலாக் கார்" என்றுதான் தொடங்கும். அதில் தான் குற்றவாளிகள் பயணம் செய்வார்கள். சி.ஐ.டி. இன்ஸ்பெக்டர், "டின்னில்" இருந்து சிகரட்டை எடுத்துப் பற்றவைத்துக் கொண்டு யோசிப்பார்கள். என் மாமன் ஒருத்தன், அந்த வகைகளின் ரசிகனாக இருந்தான். 'இந்த மாதிரி எழுதணும், எழுதினா' என்று சொல்லிக்கொண்டிருந்தான்.

உள்ளூர எனக்கும் எழுத வேண்டும் போலத் தோன்றியது. முதல் வரியிலேயே, 'இருளைக் கிழித்துக்கொண்டு ஒரு கார் பாய்ந்து சென்றது'. பிரச்சினை என்னவென்றால், காரின் பெயர் கெடிலாக் என்று வரக்கூடாது என்றான் அவன். கெடிலாக்கைத் தவிர வேறு காரை எனக்குத் தெரியாது. நான் படித்திருக்கவில்லை. வேறு காரின் பெயரைத் தெரிந்துகொள்வதில் நேர்ந்த காலவெளி, எழுதும் ஆர்வத்தைத் தள்ளிப்போட்டது. நல்ல வேளை!

– பிரபஞ்சன்

# மதுப் பாவனையைக் கட்டுப்படுத்த மக்களின் விழிப்புணர்வு அவசியம்



(யாழ்ப்பாணம்)

அதிகரித்து வரும் மதுப் பாவனை எமது சமூகத்தை அபாயகரமான எதிர்காலத்திற்கு இட்டுச் செல்லும். எனவே, மக்கள் விழிப்புடன் செயற்படுவதின் ஊடாகவே மதுப் பாவனையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியும் என ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

வலிகாமம் மேற்கு பிரதேச செயலக சமுர்த்தி செயற்திட்டத்தினரால் போதைப் பொருள் எதிர்ப்புக் கொடிவாரம் அனுஷ்டிக்கப்பட்டு அதன் மூலம் ஒரு தொகை நிதி சேகரிக்கப்பட்டது. இந்நிதி மூலம் சுமார் 25 சமுர்ததி உதவி பெறும் மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள் கொள்வனவு செய்யபட்டு வழங்கப்பட்டன. இவற்றை நேற்றுமுன்தினம் வலி.மேற்கு பிரதேச செயலகத்தில் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு சந்திரகுமார் மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகளை வழங்கி வைத்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், மதுபாவனையாளர்களின் தொகை இன்று நாளாந்தம் அதிகரித்துச் செல்கின்றது. இந் நிலைமை தொடருமானால் எமது சமூகம் அனைத்துத் துறைகளா லும் மேலும் பின் நிலைக்குச் செல்ல வேண்டி ஏற்படும். இந்த அபாயகரமான உண்மையை எமது இளம் சமூகத்தினர் கருத்தில் கொள்ள வேண்டும். ஏனெ னில், இன்று வறுமைக்கோட் டிற்கு உட்பட்டவர்களும் இளம் தலைமுறையினருமே அதிக மதுப்பிரியர்களாகக் காணப்படுகின்றனர் என்றார்.

மேலும், சுழிபுரம் மேற்கு, கிழக்குப் பகுதி கடற்றொழிலாளர்களின் பிரச்சினையும் கலந்துரையாடப்பட்டது. சுழிபுரம் மேற்கு கடற்றொழிலாளர்கள் றொழிலில் ஈடுபட்ட சில பிரதேசங்களில் தொழில் செய்ய முடியாத நிலை காணப்படுவதால் அவர்களை சுழிபுரம் கிழக்கு கடற்றொழிலாளர்கள் தங்களின் தொழில் செய்யும் பிரதேசத்திற்குள் அனுமதிப்பதன் ஊடாக பாதிக்கப்படாத வகையில் இரண்டு தரப்பினர்களும் கடற்றொழில் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனத் தெரிவித்தார்.

சுழிபுரம் கிழக்கு கடற்றொழிலாளர்கள் தங்களின் வழமையான தொழில் செய்யும் இடங்களில் தொழிலினை மேற்கொள்ள முடியாது உள்ளமை தொடர்பில் வெகு விரைவில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அமைச்சர் ராஜித சேனாரட்ன ஆகியோரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டு நிரந்தர தீர்வு பெற்றுக் கொடுக்கப்படும். எனவே அது வரைக்கும் இரண்டு தரப்பினர்களையும் முரண்பாடுகளின்றி தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டுமென்றும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் எதிர்கட்சித் தலைவரும் ஈ.பி.டி.பியின் வலிகாமம் பிரதேச அமைப்பாளருமான பாலகிருஷ்ணன் (ஜீவன்), வலி. மேற்கு பிரதேச செயலாளர் சோதிநாதன், வலிகாமம் மேற்கு பிரதேச செயலகப பிரதித் திட்டப்பணிப்பாளர் சிவகுமார், யாழ். மாவட்டக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளனத் தலைவர் எமிலியாம்பிள்ளை உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

## வவுனியாவில் முதலிடம்

(வவுனியா)

புலமைப்பரிசில் பரீட்சையின் பெறுபெறுகளின் அடிப்படையில் வவுனியா- இறைம்பைக் குளம் மகளிர் கல்லூரி மாணவிகளான டர்சிக் குகநேசன் 192 புள்ளிகளை பெற்று மாவட்டத்தில் முதலாமிடத்தினையும் சாம்பவி குகநேசன் 191 புள்ளிகளை பெற்று இரண்டாமிடத்தினையும் பெற்றுள்ளனர்.

வவுனியா- இறைம்பைக்குளம மகளிர் கல்லூரியில் 183 பேர் பரீட்சைக்கு தோற்றியிருந்த நிலையில் 73 பேர் சித்தியடைந்துள்ளதாகத் தெரிவித்த பாடசாலை நிர்வாகம், பபினயா சரேஸ் 182 புள்ளிகளை பெற்று மாவட்டத்தில் நான்காமிடத்தினையும் செல்வன் சேரலதன் சாருக்சன் 180 புள்ளிகளைப் பெற்று 8 ஆம் இடத்தினையும் சஜீவா ஜெயகாந்தன், ரிதுர்சா யோகேஸ்வரன் ஆகிய இரு மாணவிகளும் 179 புள்ளிகளைப் பெற்று மாவட்டத்தில் 10 ஆம் இடத்தினையும் பெற்றுள்ளனர் எனத் தெரிவித்துள்ளது. (160)

## எருவன் விநாயகப்பெருமான் ஆலயம் புனரமைப்பு

(வரணி)

பருத்தித்துறை- கொடிகாமம் பிரதான வீதியில் அமைந்திருக்கும் எருவன் இடைக்காடு விநாயகப்பெருமான் ஆலயம் முழுமையாக புனரமைக்கப்பட்டுவருகின்றது.

பல இலட்சம் ரூபா செலவில் தற்போது புனரமைப்பு வேலைகள் நடைபெற்றுவருகின்றன. முழுமையாக வேலைகள் முடிவுற்றதும் மகாகும்பாபிஷேகம் நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (150)

## இப்படியும் ஒரு சுவரொட்டி!

(வரணி)

கொடிகாமம் பொதுச்சந்தை உட்புறம் ஞாயிற்றுக்கிழமைகளில் வேலைநாளாக மாறுமா? என்று கேள்விக்குறியுடன் ஆங்காங்கே சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

இதனை யார் விளம்பரப்படுத்தினார்கள் யார் அச்சிட்டார்கள் என்று எதுவுமே குறிப்பிடவில்லை. அதைப்பற்றி சந்தை வியாபாரிகளிடம் வினாவியபோது தமக்கு எதுவும் தெரியாது என்று பதிலளித்தனர். (150)

## பாவம் பச்சிளம் பாலகர்கள்

(வரணி)

யா/வரணி சைவப்பிரகாச வித்தியாசாலையில் சிறுவர்களுக்கு குடிநீர் வழங்கவென அண்மையில் பொருத்தப்பட்ட நீரிறைக்கும் மோட்டர் திருட்டுப்போயுள்ளது.

இதனால் அந்தப் பச்சிளம் பாலகர்கள் கிணற்றிலே தண்ணீர் அள்ளி பாவிக்க வேண்டியுள்ளது. மனிதநேயமற்ற இந்தத் திருட்டுப் பேர்வழிகள் பச்சிளம் பாலகர்கள் மீதுகூட கருணை காட்டவில்லை எனவும். இது மிகவும் மனவேதனை தரும் விடயம் எனவும் பெற்றோர் தரப்பில் ஆத்திரமும் கவலையும் வெளியிடப்பட்டுள்ளது. (150)

## சட்டவிரோதமாக மணல் அகழ்ந்தோர் கைது

(மாங்குளம்)

கடந்தவாரம் மாங்குளம் பகுதியில் சட்டவிரோதமாக மணல் அகழ்வில் ஈடுபட்ட 11பேர் மாங்குளம் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் அனைவரும் பொலிஸாரினால் வவுனியா நீதிமன்றத்தில் முன்நிலைப்படுத்தப்பட்டதாகவும் மாங்குளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (பா)

## மின்சாரசபையின் துரித செயற்பாட்டுக்கு கொழும்புத்துறை மக்கள் பாராட்டு

(கொழும்புத்துறை)

மக்கள் நலன் உணர்ந்து தமது செயற்பாட்டை துரிதமாக்கி நடவடிக்கை மேற்கொண்ட நல்லூர் பிரதேச எதிர்க்கட்சித் தலைவருக்கும் மற்றும் மின்சார சபைக்கும் கொழும்புத்துறைவாழ் மக்கள் நன்றியும் பாராட்டும் தெரிவித்துள்ளனர்.


கொழும்புத்துறை ஐந்தாம் குறுக்குத் தெருப்பகுதியில் நேற்று முன்தினம் இளநீர் குலை விழுந்து வீட்டுக்குச் செல்லும் மின்சார வயர் அறிந்திருந்ததுடன் ஆபத்தை ஏற்படுத்தும் வகையிலும் காணப்பட்டது.

இந்நிலையில் ஆபத்தை உடனடியாகத் தவிர்க்கும் வகையில் நல்லூர் பிரதேச எதிர்க்கட்சித் தலைவர் ரவீந்திரதாசனுக்குத் அப்பகுதி மக்களால் தொலைபேசி ஊடாக மேற்படி தகவல் தெரிவிக்கப்பட்டது.

பொதுமக்களுக்கு ஆபத்தை விளைவிக்காதவாறு அறுந்த வயரை அவதானித்துக்கொள்ளுங்கள். மின்சார சபையுடன் தொடர்பு கொண்டு உரிய நடவடிக்கையை மேற்கொள்கின்றேன் என தொடர்பு கொண்ட மக்களுக்கு பிரதேச எதிர்க்கட்சித் தலைவரால் அறிவுரை வழங்கப்பட்டது.

சம்பவம் தொடர்பாக, தெரியப்படுத்திய ஒரு மணி நேரத்திற்குள் விரைந்து வந்த மின்சார சபையினர் குறித்த வயரை மீண்டும் இணைத்து ஆபத்தைத் தவிர்த்தனர்.

மின்சார சபை மற்றும் நல்லூர் பிரதேச எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோரின் இந்த விரைந்த செயற்பாடானது அவர்களின் சேவைக்கு அப்பால் மக்கள் நலனில் அவர்கள் கொண்டுள்ள அக்கறையை வெளிப்படுத்தி நின்றது என்றும், இந்த வேகமான நடவடிக்கைக்கு பாராட்டுக்களும், நன்றியும் தெரிவிக்கின்றோம் என அப்பகுதி வாழ் மக்கள் தெரிவித்துள்ளனர். (எஸ்.பி.)




மந்திகை 'சுகம் மெடிக்கல் கெயர்' மருத்துவநிலையத்தில் 'யாழ்.விவின் கெயர்' நிறுவனத்தால் நடத்தப்பட்ட இலவச நவீன தொழில்நுட்பத்துடனான கணினிக் கண் பரிசோதனைகளின் போது கண்பரிசோதனைகள் நடைபெறுவதையும், குறைந்தவிலையில் மூக்குக்கண்ணாடிகள் தேவைப்பட்டோர் கண்ணாடிகளைக் கொள்வனவு செய்வதையும் படங்களில் காணலாம். (01)

# க.பொ.த. (சாதாரணதர) மாதிரி வினாத்தாள்
## G.C.E. (O/L) Examination model Paper

**கணிதம்**

ஆசிரியர் : A. கிரிதரன்


**(25.09.2012) வெளியான கணிதபாட மாதிரி வினாக்களுக்கான விடைகள் தொடர்ச்சி...**

பகுதி II

பகுதி B


7)

i)
ii)
iii)




8) (i) (அ) (i) $\frac{3}{7}$

(ஆ)





i) $\frac{6}{42}$

ii) $\frac{2}{42}$

iii) $\frac{8}{42}$

09)




i) COB △ ல் OC = OB

இருசம பக்க △ ல்

2 கோ. சமனாகும்.

ஒரு ப.னை நீட்டுவதால் உண்டாகும்

$\overset{\triangle}{DOB}$ அச் சமனான கோ.கு சமனாகும்.

அ.போ $B\hat{O}D = 2x$

அதே.போ $A\hat{O}B = 2y$ ஆகும்.

அ.போ $A\hat{O}B = 2x + 2y$

$= 2(x+y)$ ஆகும்.

$A\hat{C}B = x + y$ ஆகும்.

அ.போ $A\hat{O}B = 2A\hat{C}B$ ஆகும்.

OB = AO என்பதால்

$O\hat{A}B = 50^0$ ஆகும்.

வட்ட நாற்பக்களின் எதிர்க்கோணச்சோடி மி.நி

$B\hat{D}C = \underline{130^0}$

$B\hat{D}C$ = இருசம பக்கம்

$x = \frac{180 = 130^0}{2} \quad = \frac{50^0}{2}$

$\hat{x} = \underline{25^0}$

$\hat{y} = 2x$ எனின்

$\hat{y} = \underline{50^0}$

AC அரைவட்டத் துண்டக் கோணம். எனவே

AOC = $180^0$ ஆகும். (மை.எ.கோ) அதே வில்லினால் பரிதியில் எதிரமைக்கும் அதில் கோணம் அரைமடங்காகும்.

ABC = $90^0$ ஆகும்.

10) i) $\frac{1}{3}\pi r^2h + \pi r^2h$

$\frac{1}{3} \times \frac{22}{7} \times 7 \times 7 \times 24 \quad \frac{22}{7} \times 7 \times 7 \times 20$

$154 \times 8 + 154 \times 20$

$1232 + 3080$

$\underline{\underline{4312\ cm^3}}$

ii) கனவளவு - நீ x அ x உ

$= 4312$

$= \frac{4312}{30 \times 21}$

$= \frac{616}{90}$

$= 6.9$ cm

11) i) $A = \frac{(3.08)^2 \times 19.77}{\sqrt{9.01}}$

$= \frac{9 \times 20}{3}$

$= \underline{60}$

ii) $\log = 2\lg 3.08 + \lg 19.77 + \frac{1}{2}\lg 9.01$

$= 2 \times 0.4886 + 1.3005 + \frac{1}{2} \times 0.9547$

$= 0.9772 + 1.3005 - 0.4773$

$= 2.2777 - 0.4773$

$= 1.8004$

$= 63.16$

12) அ) i) 5 x y 26

a = 5 a + 3d = 26

3d = 26 - 5

x = 12 3d = 21

y = 19 d = 7

கூட்டலிடை 12 உம் 19

ii) $T_{11} = a + 10d$

$= 5 + 10 \times 7 = \underline{75}$

$S_n = \frac{n}{2}(a + l)$

$= \frac{11}{2}(5+75)$

$= 11 \times 40$

$= \underline{\underline{440}}$

$T_n = 3 \times 2^{n-1}$

$T_1 = 3 \times 2^{1-1} = 3$

$T_2 = 3 \times 2 = 6$

$T_3 = 3 \times 2^2 = 12$

ஆ) i) முதல் மூன்று உறுப்பு 3, 6, 12 ....

ii) பெருக்கல் விருத்தி

iii) $S_n = \frac{a(r^n - 1)}{r - 1} = \frac{3(2^n - 1)}{1}$

$\frac{38}{3} = 2^n - 1$

$127 + 1 = 2^n$

$2^n = 128$

$2^n = 2^7$

$n = 7$

7 ஆவது உறுப்பு

இல :2

## பகுதி I

1) $\frac{8}{3}$ 2) 250 *ml* 3) 3 நிரை 2 நிரல்

4) C 5) 1 6) 4 நாள்

7) 3 8) $\frac{2}{3}$ 9) 20 10) 25

11) $\frac{1}{(-2)^3} = -\frac{1}{8}$

12) i) (0, -1) ii) 3

13) i) $550 \times \frac{10}{100} = 55$
ii) $550 \times 55 = 605$

14) i) 80
ii) $180^0 - 40^0 = 140^0$

15) $y = (x-1)^2$


16) (105 - 95) (105 + 95)
10 x 200
2000

17) $(2x-3) = 0$ உம் $x + 1 = 0$
சமன்பாடு $= (2x-3)(x-1) = 0$
$2x^2 - x - 3 = 0$

18) $x - 2y = 10$
$x - y = 22$

19) 24, 36 பொ.கா.பெ எனின் 12

20) $3\frac{1}{2} - 3$ இன் $\frac{1}{6}$
$3\frac{1}{2} - 3 \times \frac{1}{6}$
$3\frac{1}{2} - \frac{1}{2}$
3

21)



$x^2 + x^2 = (\sqrt{18})^2$
$2x^2 = 18$
பரப்பு $x^2 = \frac{18}{2} = 9\ cm^2$

22) வா.பங்குகள் $= \frac{48000}{12} = 4000$
பங்குகளின் பெ.மா.பெ = 4000 x 10 = 40000

23) ஒரு சுற்றில் சென்ற தூரம் $= 2\pi r$
$= 2 \times \frac{22}{7} \times 7$
$= 44$ cm
சென்ற மொத்தத் தூரம் = 11 m
= 1100 cm
சில்லு சுற்றும் சுற்றுக்களின் எண்ணிக்கை $= \frac{1100}{44} = 25$

24) $\bar{2}.9462 \times 4$
$\bar{5}.7848$

25) $\lg 27 = 3 \lg 3 = 3 \times 0.477$
$= 1.431$

26) $\frac{3\sqrt{50}}{18} = \frac{3 \times 5\sqrt{2}}{3 \times \sqrt{2}} = 5$

27) $4x - 12 + 3x + 3 = 7x - 9$

28) $2^{x+1} = 2^5$
$x + 1 = 5$
$x + 4$

29) $2\pi r + 14 = \frac{2}{4} \times \frac{22}{7} \times 7 + 14$
$= 25$

30) ADB △ உம் ACB △
DAC △ உம் DBC △
பொது அடி, ஒரே சமாந்தர கோடுகளுக்கிடைப்பட்டது

## பகுதி B

**01)** i) $\frac{2}{3} + \frac{1}{4} = \frac{11}{12}$

ii) வெளி ஏற் $\frac{11}{12}$ இன் $\frac{3}{11} = \frac{11}{12} \times \frac{3}{11} = \frac{1}{4}$

$\frac{1}{4} \rightarrow 40\ l$

iii) முழு. கொ.வு $40 \times 4 = 160\ l$

iv) $160 \times \frac{2}{3} = \frac{320\ l}{3} = 106\frac{2}{3}$

**02)** i) (T, J) உம் (S, J)
ii) 50
iii) 8
iv) 36
v) $\frac{22}{50}$

# தெரிந்துகொள்ளுங்கள்

### சர்வதேச கணித அளவுகள்

| அளவு | பெயர் | குறியீடு |
|---|---|---|
| பரப்பு | சதுர மீற்றர் | ச.மீ ($m^2$) |
| பருமன் | கனமீற்றர் | (க.மீ ($m^3$) |
| வேகம் | மீற்றர் / வினாடி | மீ/வி (m/s) |
| அடர்த்தி | கிலோகிராம் /கனமீற்றர் | கி.கி./க.மீ($kg/m^3$) |
| ஒப்புப்பருமன் | கனமீற்றர்/கிலோகிராம் | க.மீ/கி.கி($m^3/kg$) |
| பொலிவு | கேண்டலா/ சதுரமீற்றர் | கேன்./ச.மீ.(ச.மீ($cd/m^2$) |

**பெருக்குத் தொகைகள்**

| | | | |
|---|---|---|---|
| டெரா | (T) | $10^{12}$ | (1 ஐத் தொடர்ந்து 12 பூஜ்யங்கள்) |
| கிகா | (G) | $10^9$ | (1 ஐத் தொடர்ந்து 9 பூஜ்யங்கள்) |
| மெகா | (M) | $10^6$ | (1 ஐத் தொடர்ந்து 6 பூஜ்யங்கள்) |
| கிலோ | (K) | $10^3$ | (1 ஐத் தொடர்ந்து 3 பூஜ்யங்கள்) |
| கெக்டா | (h) | $10^2$ | (1 ஐத் தொடர்ந்து 2 பூஜ்யங்கள்) |
| டெக்கா | (da) | $10^1$ | (1 ஐத் தொடர்ந்து 1 பூஜ்யங்கள்) |

**பின்னங்கள்**

| | | | |
|---|---|---|---|
| டெசி | (d) | $10^{-1}$ | (0.1) |
| சென்டி | (C) | $10^{-2}$ | (1.01) |
| மில்லி | (m) | $10^{-3}$ | (0.001) |
| மைக்ரோ | (T) | $10^{-6}$ | தசமப்புள்ளியைத் தொடர்ந்து 5 பூஜ்யங்களும் (ஒன்று) |
| நானோ | (n) | $10^{-9}$ | (8 பூஜ்யங்களும் ஒன்று) |

*ஒரு கிலோ மீற்றர் என்றால் 1000 மீற்றர்கள். ஒரு மெகா மைக்ரோ மீற்றர் 0.000001 மீற்றர்.*

**பரப்பளவு**

| | |
|---|---|
| 1 ஏக்கர் | 4047 சதுர மீற்றர் |
| 1 சதுர அடி 22 | 929.0 சதுர சென்ரி மீற்றர் |
| 1 சதுர மைல் | 2.599 சதுர கிலோ மீற்றர் |
| 1 சதுர கஜம் | 0.8361 சதுர மீற்றர் |

**பருமன் அளவு**

| | |
|---|---|
| 1 கன அடி | 28.32 டெசி மீற்றர் |
| 1 கன அங்குலம் | 16.39 கன சென்ரி மீற்றர் |
| 1 திரவ அவுன்ஸ் | 28.41 கன சென்ரி மீற்றர் |
| 1 கான் (இம்பிரீயஸ்) | 4.546 கன டெசி மீற்றர் |
| 1 கான் (அமெரிக்கா) | 3.785 கன டெசி மீற்றர் |
| 1 பைண்ட் (இம்பீரியஸ்) | 0.5863 கன டெசி மீற்றர் |

**எடை**

| | |
|---|---|
| 1 தானியம் | 64.80 மில்லி கிராம் |
| 1 நூறு எடைக்கல் | 50.80 கிலோ கிராம் |
| 1 மணங் | 37.32 கிலோ கிராம் |
| 1 அவுன்சு | 28.35 கிராம் |
| 1 பவுண்டு | 0.4536 கிலோ கிராம் |
| 1 குவிண்டால் | 100 கிலோ கிராம் |
| 1 சேர் | 0.9331 கிலோ கிராம் |
| 1 தோலா | 11.66 கிராம் |
| 1 தொன் | 1.016 மெட்ரிக் தொன் |
| 1 தொன் (அமெரிக்கா) | 0.9072 மெட்ரிக் தொன் |

# நோய்வாய்ப்பட்ட மத்திய அரசு

# 2014 ஆம் ஆண்டுவரை நீடிக்காது



ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு வரும் 2014 ஆம் ஆண்டு வரை நீடிக்காது என்று பாரதிய ஜனதாவின் மூத்த தலைவர் எல்.கே. அத்வானி தெரிவித்தார்.

பாரதீய ஜனதா கட்சியின் தேசிய செயற்குழுக் கூட்டம் ஹரியானா மாநிலம் சூரஜ்குண்டில் கடந்த மூன்று நாட்களாக நடந்தது.

இதில் கலந்துகொண்ட பா.ஜ.க. மூத்த தலைவர் அத்வானி மேலும் கூறுகையில்,

மத்திய அரசில் உள்ள ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு பற்றி என்னிடம் கேட்டால், இந்த அரசு தனது ஆட்சிக் காலத்தை முழுமையாக 2014 ஆம் ஆண்டு வரை நிறைவு செய்யாது. அதற்குள் கவிழ்ந்துவிடும் என்று நம்பிக்கையுடன் தெரிவிப்பேன் என்றார்.

நோயாளியைப் போல் நோய்வாய்ப்பட்டுள்ள மத்திய அரசு, அவசர சிகிச்சைப் பிரிவில் ஒட்சிசன் (வென்டிலேட்டர்) பொருத்திய நிலையில் உள்ளது.

காங்கிரஸ் கூட்டணி அரசு சி.பி.ஐ. (மத்திய புலனாய்வு அமைப்பு) உடன் நிலையான கூட்டணி அமைத்துக் கொண்டுள்ளது. 2014 ஆம் ஆண்டு வரை ஆட்சியை தொடர சி.பி.ஐ. உதவும்.

பிரதமராக இருந்து கொண்டு செயற்படாத மனிதராக மன்மோகன் சிங் உள்ளார் என்பதை தெரிவிக்கும்போது நான் மிகவும் மனம் வருந்துகிறேன்.

பொதுத் தேர்தலுக்கான வேட்பாளர்களைத் தேர்வு செய்வது தொடர்பாக கட்சித் தலைவர் நிதின் கட்கரியுடன் ஏற்கெனவே ஆலோசனை செய்துவிட்டதாக அத்வானி தெரிவித்தார்.

## 46 பாகிஸ்தான் மீனவர்கள் இந்திய சிறைகளிலிருந்து விடுதலை



(புதுடில்லி)

இந்தியாவின் குஜராத், ராஜஸ்தான் மாநில சிறைகளில் அடைக்கப்பட்டிருந்த பாகஸ்தான் மீனவர்கள் 46 பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

எல்லை தாண்டி வந்து மீன்பிடித்தற்காக இவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டனர்.

இந்நிலையில் நல்லெண்ணத்தின் அடிப்படையில் பாகிஸதான் மீனவர்கள் 46 பேர் விடுதலை செய்யப்பட்டனர்.

விடுதலையான மீனவர்கள் வாகா எல்லை வழியாக பாகிஸ்தான் திரும்பினர்.


இந்த விடுதலை குறித்து மீனவர்கள் கூறுகையில், விடுதலையானது சந்தோஷமளிக்கிறது. சிறையில் இருந்த போது, உணவு, உடை, மருந்துப் பொருட்கள் மற்றும் அடிப்படை வசதிகளை சிறைத்துறை அதிகாரிகள் செய்து கொடுத்தனர் எனக் கூறினர். கடந்த சில தினங்களுக்கு முன்பு பாகிஸ்தான், இந்திய மீனவர்களை நல்லெண்ணத்தின் அடிப்படையில் விடுதலை செய்தமை குறிப்பிடத்தக்கது.

## ஊழல் போராட்டத்தை அரசியல் கெடுத்துவிடும்

(புதுடில்லி)

ஊழலுக்கு எதிரான போராட்டத்தை அரசியல் கெடுத்துவிடும் என்று கெஜ்ரிவாலை மறைமுகமாக ஹசாரே தாக்கியுள்ளார் . இவரது குழுவில் இருந்த கெஜரிவால் அரசியல் பிரவேசம் செய்யப் போவதாக அறிவித்ததால் அந்த முடிவை எதிர்த்தார் ஹசாரே. இந்நிலையில் ஹசாரே தனது வலைதளத்தில் கூறியிருப்பதாவது, லோக்சபா தேர்தலுக்கு முன்பாக லோக்பால் மசோதா நிச்சயம் தாக்கல் செய்யப்படும் ஆனால் தற்போது எங்களது போராட்டக் குழுவில் சிலர் விலகி அரசியலில் களம் இறங்க இருககின்றனர். சிலர் தொடர்ந்து போராட்டம் செய்ய உள்ளனர்.

அரசியல், ஊழலுக்கு எதிரான போராட்டத்தையே கெடுத்து விடும் என்று கூறியுள்ளார். சில அரசியல் கட்சிகளும், சமூக அமைப்புகளும் என்னை அவர்கள் பக்கம் இழுக்க பார்க்கின்றனர். ஆனால் நான் அதற்கு ஒருபோதும் இடம் கொடுக்க மாட்டேன. என்னுடைய கடைசி மூச்சு உள்ள வரை நான் இப்படியே தான் இருப்பேன் என்றார்.




## மீண்டும் டெசோ மாநாட்டிற்கு கருணாநிதி அழைப்பு



டெசோ அமைப்பின் ஆலோசனைக் கூட்டம் வரும் ஒக்ரோபர் 3 ஆம் திகதி சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெறும் என்று கருணாநிதி அறிவித்துள்ளார்.

தி.மு.க. தலைமை அலுவலகமான அண்ணா அறிவாலயத்தில் நடைபெற உள்ள இந்த கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு, அந்த அமைப்பின் உறுப்பினர்களுக்கு அவர் அழைப்பு விடுத்துள்ளதாக அறிவாலய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கடந்த ஓகஸ்ட் 12 ஆம் திகதியன்று டெசோ மாநாடு சென்னையில் நடைபெற்ற நிலையில், மீண்டும் அக்கூட்டத்தை கருணாநிதி கூட்டவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதில் டெசோவின் அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து விவாதிக்கப்படும் என்றும், அதன் செயற்பாடுகள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இந்தியாவின் அதிக எடை கொண்ட கிசாட் - 10 விண்ணில் பறந்தது




(பெங்களூர்)

இந்திய அறிவியில் வல்லுநர்கள் முயற்சியில் உருவாக்கப்பட்ட ஜி-சாட் 10 செயற்கை கோள் நேற்று விண்ணில் வெற்றிகரமாக செலுத்தப்பட்டது.

இந்தியாவின் அதிக எடை கொண்ட செயற்கோள் இது ஆகும். இது இந்தியாவின் 101 ஆவது திட்டமாகும். கடந்த சில நாட்களுக்கு முன்னர் பிரதமர் முன்னிலையில் 100 ஆவது பி.எஸ்.எல்.வி, சி-21 ரொக்கெட் வெற்றிகரமாக செலுத்தப்பட்டது.

ஜி-சாட் 10 செயற்கை கோள், ஏரியான்- 5 ரொக்கெட்டைச் சுமந்து சென்றது. அட்லாண்டிக் கடற்பகுதியில் உள்ள ஐரோப்பிய விண்வெளி ஆராய்ச்சித் தளத்திலிருந்து செலுத்தப்பட்டது.

இந்த செயற்கைக்கோள் 3 ஆயிரத்து 400 கிலோ எடை கொண்டது. இது 15 வருடம் செயற்படும் ஆயுள் கொண்டதாக உருவாக்கப்பட்டுள்ளது.

விண்ணில் வெற்றிகரமாக சென்றுள்ள இந்த ஜி-சாட் 10, எதிர்வரும் நவம்பர் மாதத்தில் தனது செயற்பாட்டை ஆரம்பிக்கும் தகவல் தொழில்நுட்பத்திற்கு பெரிதும் உதவுவதுடன் ரேடியா அலைவரிசை சக்தியையும் அதிகரிக்க முடியும்.

இவ் முயற்சிக்கு ஜனாதிபதி, பிரதமர் மற்றும் பல்வேறு விஞ்ஞானிகள் வாழ்த் துக்களை தெரிவித்துள்ளனர்.

இது குறித்து இஸ்ரோ தலைவர் ராதாகிருஷ்ணன் கூறுகையில் ரூ. 750 கோடி செலவில் உருவாக்கப்பட்டுள்ள இந்த செயற்கைகோள் தகவல் தொழிநுட்ப துறையில் ஒரு மைல்கல் என்றார்.

## நித்தியானந்தாவால் ஆபத்து



நித்தியானந்தாவால் தனக்கு ஆபத்து ஏற்பட வாய்ப்பு இருப்பதாக அவருடைய முன்னாள் பக்தர் ஆர்த்திராவ் சென்னை பொலிஸ் ஆணையாளரிடம் புகார் கொடுத்துள்ளார்.


சுவாமி நித்தியானந்தா-நடிகை ரஞ்சிதா தொடர்பான சர்ச்சைக்குரிய காட்சிகளை ரகசிய கமரா பொருத்தி எடுத்தவர் ஆர்த்தி ராவ்.

அமெரிக்காவில் வசித்த இவர், நித்தியானந்தாவின் பேச்சால் ஈர்க்கப்பட்டு அவர் ஆச்சிரமத்தில் சேர்ந்தார்.

அங்கு பல தடவை நித்தியானந்தாவால் பாலியல் கொடுமைகளுக்கு ஆளானதாக ஆர்த்தி ராவ் சில மாதங்களுக்கு முன்பு கன்னட தொலைக்காட்சிக்குப் பேட்டியளித்தார். எனவே இவர் மீது சுவாமி நித்தியானந்தா மான நஷட வழக்கு தொடர்ந்துள்ளார்.

இந்நிலையில் கடந்த 26 ஆம் திகதி தனது வீட்டை மர்ம நபர்கள் சிலர் இரண்டு மூன்று தடவை உளவு பார்த்ததாக சென்னை பொலிஸ் ஆணையாளரிடம் தெரிவித்துள்ளார்.

தன்னுடைய எதிரி நித்தியானந்தாவே தன்னை கொலை செய்வதற்கு இந்த உளவு முறைகளை மேற்கொண்டிருப்பதாகவும் தனக்கு பாதுகாப்பு வழங்குமாறும் ஆணையாளரிடம் அளித்த புகாரில் தெரிவித்துள்ளார்.




சர்வதேச இருதய தினம் நேற்று உத்தரப் பிரதேச மாநிலம் மொரடாபாத்தில் நடைபெற்றபோது நிகழ்ச்சியில் பங்கேற்ற குழந்தைகளைக் காணலாம்.

# ஒபாமா தொடர்ந்து முன்னிலை



அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் நவம்பர் 6ஆம் திகதி வாக்குப்பதிவு நடைபெறுகிறது. இந்தத் தேர்தல் களத்தில் தற்போதைய ஜனாதிபதி ஒபாமாவும், எதிர்க்கட்சி சார்பில் மிட் ரோம்னியும் இருககிறார்கள். இதுவரையில் நடைபெற்ற முந்தைய கருத்து கணிப்புகளில் ஒபாமாவுக்கு கூடுதல் ஆதரவு இருந்தது. வாக்குபதிவுக்கு இன்னும் 40 நாட்களே இருக்கின்றன.

இந்நிலையில் பிரபல செய்தி நிறுவனம் ஒன்று இணையத்தளம் மூலம் புதிய கருத்து கணிப்பை நடத்தி அதன் முடிவை நேற்றுமுன்தினம் வெளியிட்டது. மொத்தம் 1,194 பேர் கலந்து கொண்டு வாக்களித்தனர். அதில் ஒபாமாவுக்கு 49 சதவீதம் வாக்குகளும், மிட் ரோம்னிக்கு 42 சதவீத வாக்குகளும் கிடைத்துள்ளன.

# தீவிரவாதிகளின் பிடியில் இருந்த துறைமுக நகரம் மீட்பு

(நைரேபி)



சோமாலியா நாட்டின் தெற்குப் பகுதியில் அல் ஷபாப் என்ற தீவிரவாத அமைப்பு செயற்படுகிறது. இவர்கள் அங்குள்ள கிஸ்மாயு என்ற துறைமுக நகரைப் பிடித்து வைத்துள்ளனர்.

இந்த நகரை கென்யா மற்றும் சோமாலிய இராணுவத்தினர் அதிரடித் தாக்குதல் நடத்தி மீட்டார்கள். இதை கென்யா இராணுவ செய்தி தொடர்பாளர் கிரூஸ் ஒகுனா நேற்று முன்தினம் அதிகார பூர்வமாகத் தெரிவித்தார். இதுவே தீவிரவாதிகளின் கடைசிப் புகலிடமாக இருந்தது என்றும் அவர் கூறினார்.

# பாகிஸ்தானில் வெள்ளப்பெருக்கு; 400 பேர் உயிரிழப்பு





பாகிஸ்தானில் கடந்த ஒரு மாதமாகப் பெய்து வரும் பலத்த மழையால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் சிக்கி 400 பேர் உயிரிழந்துள்ளனர்.

அத்துடன் 45 இலட்சம் மக்கள் நேரடியாகப் பாதிக்கப்பட்டுள்ளதுடன், ஆயிரக்கணக்கானோர் தமது குடியிருப்புகளையும் இழந்துள்ளனர்.

குறிப்பாக பாகிஸ்தானின் பலோசிஸ்டன், சின்ட்த் நகரங்களே வெள்ளத்தால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளன.

இதே போன்று கடந்த 2010 ஆம் ஆண்டு பெய்த கனமழையால் 1800 பேர் உயிரிழந்ததுடன், 21 மில்லியன் மக்கள் பாதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் வெள்ளப் பெருக்கினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு, ஐரோப்பிய ஒன்றியம் 19 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கியுள்ளது.

# சிரியாவில் பாதிக்கப்பட்டோருக்கு அமெரிக்க அரசு நிதியுதவி



சிரியாவில் கடந்த சில மாதங்களாக இராணுவத்தினருக்கும், போராட்டக்காரர்களுக்கும் இடையேயான மோதல் தீவிரமடைந்து வருகின்றது.

இத் தாக்குதல்களில் மொத்தம் 20 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பலியாகி உள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளது.

இந்நிலையில் சிரியாவில் நிலவி வரும் தற்போதைய நிலையிலிருந்து மீண்டு அம்மக்கள் மறுவாழ்வு பெற, மனிதாபிமான அடிப்படையில் சிரியாவுக்கு அமெரிக்கா 45 மில்லியன் டொலர் நிதியுதவி அளிப்பதாக அமெரிக்காவின் வெளிவிவகாரத்துறை அமைச்சர் ஹிலாரி கிளிண்டன் அறிவித்துள்ளார்.

இந்தத் தொகையில் 30 மில்லியன் டொலர் மனிதாபிமான அடிப்படையில் நிவாரணங்களுக்காக செலவிடப்படும் என்றும், 15 மில்லியன் டொலர் அரசுக்கு எதிராகப் போராடும் மக்களின் வாழ்வை சீரமைக்கப் பயன்படுத்தப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

சிரியாவின் போராட்டக்குழு உறுப்பினர்கள் 9 பேருடன் நடந்த சந்திப்புக்குப் பின்னரே இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## உலகச் செய்திகள்

# ஜப்பான்மீது சீனா பகிரங்க குற்றச்சாட்டு

எங்களுக்கு சொந்தமான தீவுகளை ஜப்பான் அபகரித்து விட்டது என ஐ.நா சபையில் சீனா பகிரங்கமாக புகார் தெரிவித்துள்ளது.

கிழக்கு சீன கடல் பகுதியில் அமைந்துள்ள தீவுகள் யாருக்குச் சொந்தம் என்பதில் பல ஆண்டுகளாகவே சீனாவுக்கும், ஜப்பானுக்கும் பிரச்சினை நீடித்து வருகிறது. இதற்கிடையே தாய்வானும் அத்தீவுகளுக்கு சொந்தம் கொண்டாடி வருகின்றது.

இந்நிலையில் ஐ.நா சபையில் சீன வெளிவிவகாரத்துறை அமைச்சர் யாங் ஜிய்ச்சே, ஜப்பான் மீது பகிரங்கமாக பல குற்றச் சாட்டுகளைத் தெரிவித்துள்ளார்.

அவர் கூறுகையில், வழக்கத்துக்கு மிகவும் முரண்பட்ட வகையில் தனியார்கள் சிலரிடம் இருந்து சில தீவுகளை வாங்கிவிட்டதாக ஜப்பான் கூறிவருகிறது.

தீவு விஷயத்தில் சீனாவுக்கு எதிராக ஜப்பான் மிகத்தீவிரமாகச் செயற்பட்டு வருகிறது.

எங்களுக்கு சொந்தமான தீவுகளை உரிமை கொண்டாடுவது ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது. இதுவரை செய்த தவறுகளை ஜப்பான் திருத்திக் கொள்ள வேண்டும்.

எங்களிடம் இருந்து பல தீவுகளை ஜப்பான் அபகரித்துக் கொண்டு விட்டது. அதனை முழுமையாக திரும்ப ஒப்படைக்க வேண்டும். அப்போது முதல் இப்போது வரை தீவுகள் விஷயத்தில் ஜப்பான் எடுக்கும் நடவடிக்கைகள் அனைத்துமே சட்டவிரோதமானவை என்று தெரிவித்துள்ளார்.

இதற்கு பதிலளித்துள்ள ஜப்பான், சீனாவின் குற்றச்சாட்டுகள் எவ்வித அடிப்படை ஆதாரமும் இல்லாதவை என்று கூறியுள்ளது.

# ஈராக்கில் சிறையை உடைத்து தீவிரவாதிகள் தப்பி ஓட்டம்

(பாக்தாத்)



ஈராக்கில் சிறையை உடைத்து தீவிரவாதிகள் தப்பி ஓடியுள்ளனர். ஈராக் தலைநகர் பாக்தாத்தில் இருந்து 80 மைல் தொலைவில் உள்ள திக்ரித்தில் மத்திய சிறைச்சாலை உள்ளது. இங்கு பல்வேறு சமூக விரோத செயல்களில் ஈடுபட்டு கைதான தீவிரவாதிகள் உள்ளிட்ட ஏராளமான கைதிகள் அடைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், நேற்று முன்தினம் இரவு பல கைதிகள் ஒன்று சேர்ந்து சிறையில் உள்ள ஸ்டோர் ரூமை உடைத்து அங்கிருந்த ஏராளமான ஆயுதங்களைக் கைப்பற்றினர். பின்னர் சிறைக் காவலர்களையும் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

அப்போது பொலிஸாருக்கும், கைதிகளுக்குமிடையே மோதல் ஏற்பட்டது. இது அனைத்து பகுதிகளுக்கும் பரவி கலவரமாக வெடித்தது. உடனே பாதுகாப்பு படையினர் வரவழைக்கப்பட்டு உள்ளே சென்று கைதிகளைக் கட்டுப்படுத்த முயன்றனர். பலமணி நேரம் நடந்த இந்த சண்டையில் 10 பொலிஸார், 2 கைதிகள் கொல்லப்பட்டனர். இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தீவிரவாதிகள் உள்ளிட்ட ஏராளமான கைதிகள் தப்பி ஓடிவிட்டனர். காலையில் மீண்டும் சிறைச்சாலை பாதுகாப்புப் படையினரின் கட்டுப்பாட்டுக்குள் வந்தது.

ஈராக்கில் இதுபோன்று அடிக்கடி சிறைச்சாலைகளை உடைத்து கைதிகள் தப்பிச் செல்வது அரசுக்கு பெரும் தலைவலியை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நடுக்கடலில் தீப்பற்றி எரிந்தது கப்பல்; சீனர்களைக் காப்பாற்றியது ஜப்பான்

நடுக்கடலில் தீப்பற்றி எரிந்து கொண்டிருந்த கப்பலிலிருந்து, 12 சீனப் பணியாளர்களை ஜப்பான் கடலோரக் காவல் படையினர் காப்பாற்றி உள்ளனர்.

பனாமா நாட்டில் பதிவு செய்யப்பட்ட 1999 தொன் எடை கொண்ட சரக்கு கப்பலொன்று, தெற்கு ஜப்பானில் உள்ள ககோஷிமா நகரிலிருந்து புறப்பட்டது.

பின்னர் அந்தக் கப்பல் ஜப்பானில் உள்ள 2 துறைமுகங்களுக்கு சென்று விட்டு, சீனாவுக்குத் தனது பயணத்தை தொடங்கியது.

அந்தக் கப்பலில் மொத்தம் 1000 தொன் கழிவு இரும்பு ஏற்றப்பட்டிருந்தது. இந்நிலையில் மேற்கு ஜப்பானில் ஓசாகா கடற்பகுதியில் வந்து கொண்டிருந்த போது, திடீரென தீப்பற்றி எரியத் தொடங்கியது. உடனே தகவலறிந்து வந்த ஜப்பான் கடலோரக் காவல் படையினர், சரக்கு கப்பல் மீது தண்ணீர் பாய்ச்சி ஊழியர்களைக் காப்பாற்றினர்.

கடந்த சில மாதங்களாக சர்ச்சைக்குரிய தீவு விவகாரத்தில் இரு நாடுகளுக்கும் இடையே கசப்புணர்வு அதிகரித்து வரும் நிலையில், இச்சம்பவத்தால் இரு நாடுகளுக்கிடையிலான வேறுபாடுகள் ஓரளவுக்கு தணிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

# தூதர்கள் திரும்பினர்

லிபியாவில் அமெரிக்காவுக்கு எதிரான போராட்டத்தைத் தொடர்ந்து தூதர்களை அமெரிக்கா திரும்ப அழைத்துக் கொண்டது

முஸ்லிம்களை கேவலமாகச் சித்திரித்து அமெரிக்காவில் வெளியான திரைப்படத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து, லிபியாவில் நடந்த போராட்டத்தில் அமெரிக்கத் தூதர் உட்பட 4 பேர் பலியாகினர்.

இதனையடுத்து முக்கியமான நபர்களைத் தவிர, மற்றவர்களை பென்காசி தூதரகத்திலிருந்து அமெரிக்கா திரும்ப அழைத்து கொண்டது.

இந்நிலையில் மீண்டும் பென்காசியிலும், திரிபோலியிலும் பெரிய அளவில் போராட்டம் நடைபெறும் என்ற தகவல் வெளியானதையடுத்து, திரிபோலியில் உள்ள ஊழியர்களைத் திரும்ப அழைத்துக் கொள்ள அமெரிக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

இது குறித்து அமெரிக்க வெளிவிவகாரத்துறை அமைச்சக அதிகாரி ஒருவர் கூறுகையில், பாதுகாப்பு காரணமாக அவசியமானவர்களைத் தவிர மற்றவர்கள் தூதரகத்திலிருந்து வெளியேறுமாறு அறிவுறுத்தியுள்ளோம் என்றார்.

# தீ விபத்தில் சிக்கி இளம் கர்ப்பிணி மரணம்

(யாழ்ப்பாணம்)

கடந்த 15ஆம் திகதி தீக்காயங்களுக்குள்ளாகி யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த இளம் யுவதி இருவாரங்களின் பின்னர் சிகிச்சை பலனின்றி நேற்றுக் காலை மரணமடைந்துள்ளார்.

மன்னார் வெள்ளான்குளம் சேவாகிராமத்தைச் சேர்ந்த நிசாந்தன் மயூரி (வயது-18) என்ற யுவதி இவ்வாறு மரணமடைந்துள்ளார்.

திருமணம் முடித்திருந்த இவர் எட்டு மாதக் கர்ப்பிணியாக இருந்த சமயம் கடந்த

## சிசுவும் தப்பவில்லை

15ஆம் திகதி மன்னார் வெள்ளான்குளம் சேவா கிராமத்தில் உள்ள அவரது வீட்டில் சமையல் வேலையில் ஈடுபட்டிருந்த போது ஆடையில் தீப்பிடித்து எரிகாயங்களுக்கு இலக்காகிய நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாகவும். இந்நிலையில் அவரது இடுப்புப் பகுதி எரிகாயங்களுக்கு உட்பட்டதன் காரணமாக அவரது வயிற்றில் இருந்த சிசு வயிற்றினுள்ளேயே இறந்துள்ளது.

இந்நிலையில், வைத்தியர்கள் அவருக்கு அறுவைச் சிகிச்சை செய்து பிறந்த குழந்தையை வெளியே எடுத்தாகவும் தெரிய வருகின்றது.

இதனையடுத்து அவர் ஒரு நாள் மட்டும் நினைவுடன் இருந்ததாகவும், ஆறு நாட்கள் சுய நினைவற்ற நிலையில் இருந்த அவர் நேற்றுக்காலை மரணமடைந்ததாகவும் அவரது உறவினர்கள் தெரிவித்தனர். (பா, இ)

## அடிப்படை...

செய்யப்பட்டிருக்கின்றது.

இங்கு ஆரம்பத்தில் 55 குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டன. அவர்களின் எழுத்து மூலமான சம்மதத்துடனும், வேண்டுகோளின் பேரிலுமே மீள்குடியமர்த்தப்பட்டனர். இவர்களுக்கான குடிசை அமைக்கும் பணிகள் ஏற்கனவே நிறைவடைந்துவிட்டன.

இறுதியாக அப்பகுதிக்கு அழைத்து வரப்பட்ட 110 குடும்பங்களுக்கும் தற்காலிக குடிசைகள் அமைக்கும் பணிகள் தற்போது இடம் பெற்று வருகின்றன. இதற்காக மெனிக் பாம் முகாமில் இருந்து இவர்கள் தம் முடன் எடுத்து வந்த கூரைத் தகடுகளுக்கு மேலதிகமாக செயலகத்தின் ஊடாகவும் கூரைத்தகடுகள் வழங்கப்பட்டுள்ளது. அத்துடன், மூன்று பக்கெற் சிமெந்தும் விநியோகிக்கப்பட்டு வருகிறது. குடிசை அமைப்பதற்குப் படை வீரர்களும் உறுதுணை புரிந்து வருகின்றனர்.

யு.என்.எச்.சி.ஆர். நிறுவனத்தின் ஊடாக 55 குடும்பங்களுக்கு 20 ஆயரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்பட் டிருக்கிறது. மிகுதிக் குடும்பங்களுக்கு இக்கொடுப்பனவு வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. மேலும் மேற்படி குடும்பங்கள் அனைவருக்கும் நான்கு பரப்புக்காணி பகிர்ந்து வழங்கப்பட்டிருக்கிறது. இது இவர்களுக்கே சொந்தமாக மாற்றப்படவிருக்கிறது.

அத்துடன் இவர்களுக்கான தற்காலிக மலசலகூடங்கள் அமைக்கும பணிகள் நிறைவடைந்து விட்டன. குடிசை அமைக்கும் வேலைகள் அனைத்தும் இந்த வாரத்துடன் நிறைவடையும் என்று எதிர்பார்க்கிறோம்.

குடிநீர் விநியோகத்துகாக மூன்று பௌசர்கள் ஈடுபடுத்தப் பட்டிருக்கின்றன. கணுக்கேணி என்ற பகுதியில் இருந்து இப்பகுதிக்கு தொடர்ச்சியான குடிநீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இவற்றைவிட இப்பகுதியில் 5 குழாய்க்கிணறுகளையும், இரண்டு நிரந்தரக் கிணறுகளையும் அமைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

மேலும் இக்கிராமத்தில் மருத்துவ வசதிகள் இல்லை என்பது உண்மைதான். எனினும், இதற்காக நடமாடும் மருத்துவ சேவைகளை நடத்துவதற்கு நாம் திட்டமிட்டிருக்கிறோம். ஆரம்பத்தில் மூன்று தினங்கள் மட்டும் சமைத்த உணவு வழங்கினோம். இப்போது இக்குடும்பங்கள் சுயமாகச் சமைத்துச் சாப்பிடுகின்றனர்.

மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளைச் சீராக்குவதற்கு இப்போது முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது. ஏற்கனவே இப்பகுதியில் இருந்த பாடசாலையை மீண்டும் இயங்கவைக்க முயற்சி செய்து கொண்டிருக்கிறோம் என்றும், போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்துவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் அரச அதிபர் மேலும் தெரிவித்தார்.

## எதிர்ப்பு அரசியல்...

சிங்களப் பேரினவாதிகள் சத்தமிடத் தொடங்குவார்கள். கடைசியில் அது பெரும் ஆபத்தான முடிவினை ஏற்படுத்தும்.

த.தே.கூட்டமைப்பு கிழக்குத் தேர்தலை முன்வைத்தே முஸ்லிம்கள் குறித்துப் பேசியது. ஆனால், முஸ்லிம்களின் நம்பிக்கையை வென்றெடுக்கும் வகையிலான பேச்சுக்களை த.தே. கூட்டமைப்பு நேர காலத்துடன் ஆரம்பித்திருக்க வேண்டும்.

த.தே.கூட்டமைப்பு மேற்கொண்டு வரும் அரச் விரோத அரசியலுக்குப் பக்க பலமாக பல்வேறு தரப்புக்கள் உள்ளன. உலகெங்கும் வாழும் இடம் பெயர்ந்த தமிழ் மக்கள் மற்றும் சர்வதேச நாடுகளென நிறை உதவிகள் உள்ளன.

ஆனால், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு இவ்வாறான பக்க பலங்கள் கிடையாது. எனவே, அரசை ஒட்டு மொத்தமாகப் பகைத்துக் கொண்டு, அரச விரோத அரசியலை மு.காங்கிரஸினால் மேற் கொள்ள முடியாது.

தமிழ் சமூகத்தைச் சேர்ந்த ஒருவரை கிழக்கு மாகாணத்தின் முதலமைச்சராக நியமனம் செய்ய வேண்டுமென சர்வதேச நாடுகள் பெரும் முயற்சிகளை மேற்கொண்டன. தேர்தல் நிறைவடைந்த பின்னர் அமெரிக்காவின் தெற்காசியப் பிராந்தியத்துக்கான உதவிச் செயலாளர் றொபேட் ஓ பிளேக் இதற்காகவே இலங்கை வந்திருந்தார். இவைகளுக்கிடையில்தான், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பேரம் பேசும் சக்தியின் மூலமாக கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் ஒருவர் முதலமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார் என அவர் மேலும் தெரிவித்தார்.

## இந்திய...

வடிக்கைளை தொடர முனைப்பு காட்டி வருவதாகவும் உள்துறை அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

யுத்த ரீதியில் தோல்வியைத் தழுவிய போதிலும் சர்வதேச ரீதியில் பல்வேறு வழிகளில் விடுதலைப் புலிகள் பிரசார நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக அரசாங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. 1991 ஆம் ஆண்டு பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலை செய் யப்பட்டதனைத் தொடர்ந்து, 1992 ஆம் ஆண்டு முதல் விடுதலைப் புலிகளுக்கு எதிரான தடை இந்தியாவில் நீடிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# விறகு வெட்ட காட்டுக்குத் தீ

(வவுனியா)

வவுனியா ஓமந்தைக் காட்டுப் பகுதியில் விறகுக்காக காட்டு மரங்களுக்குத் தீ வைத்து வீர மரங்களை வெட்டிய ஐந்து பேரை வவுனியாப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கடந்த வாரம் நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் காட்டுக்குத் தீ வைத்து 20 வீர மரங்களை அவர்கள் வெட்டியெடுத்துக் கொண்ருந்த போது பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் அனைவரும் வவுனியாப் பொலிஸாரினால் வவுனியா நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் தகவல்கள் தெரிவித்தன. (பா)

## தமிழ்சேவை...

காரணத்தால் அவர் ஆலயத்திற்குச் செல்லவில்லை. இந்தநிலையில், நேற்றுக்காலை 10.00 மணியளவில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அவர் நேற்று மாலை 5.00 மணியளவில் உயிரிழந்தார்.

இவர் ஐந்து பிள்ளைகளின் தந்தையாவார். இவரது. சடலம் சுன்னாகம் அந்தோனியார் ஆலய வீதியிலுள்ள உறவினரின் வீட்டில் வைக்கப்பட்டுள்ளது.

(148)

# வைற்றின் அதிரடியில் இங்கிலாந்து வெற்றி



வைற்றின் அபாரமான துடுப் பாட்டத்தின் மூலம் சூப்பர்-8 சுற்றில் இங்கிலாந்து அணி அபார வெற்றிபெற்றது.

உலகக் கிண்ண ருவென்ரி-20 கிரிக்கெட் தொடரின் சூப்பர் -8 சுற்று 'பி' பிரிவு அணிக்கான ஆட்டமொன்றில் நியூசிலாந்து, இங்கிலாந்து அணிகள் மோதின.

இப்போட்டி பல்லேகல மைதானத்தில் நேற்று மாலை நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் ஆடிய நியூசிலாந்து அணி 20 ஓவர்கள் நிறைவில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து 148 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ப்ராங்கிலின் 50, அணித் தலைவர் டெய்லர் 22 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் பின் மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்கு 149 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய இங்கிலாந்து அணி வைற் மற்றும் மோர்கன் ஆகியோரின் அதிரடியான ஆட்டத்தின் மூலம் இலகுவாக பெற்றி பெற்றது. இறுதியில் இங்கிலாந்து அணி 18.5 ஓவர்கள் நிறைவில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் வைற் 76, மோர்கன் 30 ஓட்டங்களைப் பெற்றனர். போட்டியின் ஆட்டநாயகனாக வைற் தெரிவானார்.

# மேற்கிந்திய அணியை பந்தாடியது இலங்கை

(பல்லேகல)

இலங்கை - மேற்கிந்திய அணிகள் இடையே நேற்று நடைபெற்ற சுப்பர் 8 போட்டியில் இலங்கை அணி 9 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது. முன்னதாக நாணயச் சுழற்சியில் வென்ற மேற்கிந்திய அணியின் கப்டன் சமி துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார்.

சார்லஸ், கெய்ல் தொடக்க ஆட்டக்காரர்களாக களம் இறங்கினார்கள். தொடக்கமே மேற்கிந்திய அணிக்கு அதிர்ச்சி காத்திருந்தது. அணியின் ஸ்கோர் 16 இருக்கும்போது சாள்ஸ் 12 ரன் னில் ஆட்டம் இழந்தார். அடுத்து அதிரடி வீரர் கெய்ல் 2 ரன்னில் ஆட்டம் இழந்தார்.

அதன்பின் வந்த சாமு வேல்ஸ், பிராவோ ஜோடி விக்கெட் இழக்காமல் பார்த்துக் கொண்டது. என்றாலும் அவர்களால் அதிக ரன் குவிக்க இயலவில்லை. சாமுவேல்ஸ் 50 ரன் எடுத்தார். பிராவோ 40 ரன் எடுத்தார்.

அதன்பின் வந்த பெர்லார்ட் 1 ரன் எடுத்து ஏமாற்ற மேற்கிந்திய அணி 5 விக்கெட் இழப்பிற்கு 129 ரன் எடுத்தது.

பந்து வீச்சில் அஜந்த மெண்டிஸ் 2 குலசேகர, மத்தியுஸ், ஜீவன் மெண்டிஸ்ஆகியோர் தலா 1 விக்கெட்டினை கைப்பற்றினர்

அடுத்து 130 .ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இலங்கை துடுப்பெடுத்தாடியது. தொடக்க ஆட்டக்காரர் டில்சான் 13 ரன் எடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து ஜெயவர்த்தன 65 ஓட்டங்களையும், சங்கக்காராவும் 39 ஓட்டங்களையும் பெற்று அணியை வெற்றி நோக்கி அழைத்துச் சென்றனர். இலங்கை அணி 15.2 ஓவரில் ஒரு விக்கெட் இழப் பிற்கு 130 ரன் எடுத்து 9 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

இப்போட்டியில் ஆட்ட நாயகனாக ஜெயவர்த்தன தெரிவு செய்யப்பட்டார்.

## இராணுவத்திற்கு...

கேசன்கேணி மக்களில் சிலர் தாக்கல்செய்த மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட போதே உச்சநீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் தமது குடியிருப்புப் பகுதிக்கு வந்த இராணுவத்தினர் அந்தப் பிரதேசத்தில் இராணுவ முகாம் அமைக்க வேண்டியிருப்பதால் அங்கிருந்து தம்மை வெளியேறுமாறு உத்தரவிட்டதாக மனுதாரர்கள் சுட்டிக்காட்டியிருந்தனர்.

இந்த அறிவித்தலை அடுத்து பல குடும்பங்கள் அங்கிருந்து வெளியேறி விட்டதாகவும் இன்னும் 50 குடும்பங்கள் வரை தமது இருப்பிடங்களை இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் கேசன்கேணி மக்கள் வழக்கில் சுட்டிக்காட்டியிருந்தனர்.

இந்த மனுதொடர்பில் அரச தரப்பு விளக்கங்களை முன் வைத்த சட்டமா அதிபர், இரா ணுவமுகாம் அமைப்பதற்காக சுவீகரிக்கப்படும் காணிகளுக்கு பதிலாக மாற்றிடங்களை மக்களுக்கு வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக நீதிமன்றத்தில் கூறினார்.

குறித்த பிரதேசத்தில் வாழ்ந்த மக்கள் விவசாயத் தையே வாழ்வாதாரமாகக் கொண்டுள்ளதால் அவர்களுக்கு அந்தத் தொழிலை கொண்டு நடத்தக்கூடிய விதத்திலான மாற்றுக்காணிகளே வழங்கப்பட வேண்டும் என்று மனுதாரர்கள் சார்பான சட்டத்தரணி நீதிமன்றத்தில் சுட்டிக்காட்டினார்.

எதிர்வரும் ஒக்ரோபர் 17 ஆம் திகதிக்கு வழக்கு விசாரணையை ஒத்திவைத்த உச்சநீதிமன்றம், மாற்றுக் காணிகளை வழங்குவது தொடர்பான அரசாங்கத்தின் நிலைப்பாட்டை அன்றைய தினம் அறிவிக்க வேண்டும் என்று சட்டமா அதிபருக்கு உத்தரவிட்டது.

## பயங்கரவாத....

கீழ்க்கட்டுமான வசதிகளை ஏற்படுத்துவதில் அரசாங்கம் கூடுதல் கவனம் செலுத்தி வருகின்றது.

எந்தவொரு நாடும் தனித்து செயற்பட முடியாது. நாடுகளின் அபிவிருத்தியில் சர்வதேச சமூகத்திற்குப் பங்களிப்பு உள்ளது.

இது தொடர்பில் சர்வதேச சமூகம் கவனம் செலுத்த வேண்டுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## ஆசிரியருக்கு...

ஸ்டாலின் தெரிவித்தார்.

இது தொடர்பாக அதிகாரிகளை தெளிவுபடுத்தியுள்ள போதிலும் சாதகமான பதில் எதுவும் வழங்கப்படவில்லை எனவும் அவர் கூறியுள்ளார்.

குறிப்பாக கல்வி அமைச்சினால் உரிய நிதி ஒதுக்கப்படாமை காரணமாக ஆசிரியர்களுக்கான அவசர கால கடனை வழங்க முடியாதுள்ளதாக வலயக் கல்வி அலுவலகங்களில் தெரிவிக்கப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த விடயம் குறித்து கல்வி அமைச்சின் செயலாளர் கோட்டபாய ஜயரத்ன தெரிவிக் அவசர கலந்துரையாடலுக்கு விண்ணப்பித்துள்ள சகல ஆசிரி யர்களுக்கும் அதனை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்தார்.

ஆசிரியர்களுக்கான அவசர கால கடனை வழங்குவதற்காக ஏற்னவே 300 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# ஏற்றுமதி வரியிலிருந்து தப்பிக்க இலங்கையை பயன்படுத்திய சீனா

ஐரோப்பிய நாடுகளுக்கான ஏற்றுமதி வரியில் இருந்து தப்பிக்க இலங்கையைச் சீனா ஒரு தளமாகப் பயன்படுத்தி வந்துள்ளமையை ஐரோப்பிய ஒன்றியம் கண்டுபிடித்துள்ளது.

சீனாவின் மிதிவண்டி உற்பத்தியாளர்கள், ஐரோப்பிய நாடுகளுக்கான ஏற்றுமதி வரி, சுங்கத் தீர்வை ஆகியவற்றில் இருந்து தப்பிப்பதற்காக, இலங்கை உள்ளிட்ட மூன்றாவது நாடுகளின் ஊடாக மிதிவண்டி ஏற்றுமதிகளை மேற்கொண்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக விசாரணைகள் நடத்தப்படுவதாக ஐரோப்பிய ஒன்றிய நிறைவேற்றுச் சபை தெரிவித்துள்ளது. இலங்கை மற்றும் இந்தோனேசியா, மலேசியா, துனிசியா ஆகிய நாடுகளையே சீனா இந்த ஏற்றுமதிக்காகப் பயன்படுத்தியுள்ளது.

அதுமட்டுமன்றி, ஐரோப்பிய நாடுகளின் வரி மற்றும், தீர்வையில் இருந்து தப்பிப்பதற்காக சீனா தனது மிதிவண்டிகளை ஒருங்கிணைக்கும் பணிகளை இலங்கை, இந்தோனேசியா, துனிசியா, மலேசியா போன்ற நாடுகளுக்கு மாற்றியுள்ளமையும் கண்டறியப்பட்டுள்ளது.

சீனாவுடன் நீண்டகால வர்த்தகப் போட்டியைக் கொண்டுள்ள ஐரோப்பிய மிதிவண்டி உற்பத்தியாளர் சங்கத்தின் முறைப்பாட்டை அடுத்தே இதுதொடர்பான விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளன. ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் ஒரு ஆண்டுக்கு 5 பில்லியன் யூரோ அளவுக்கு மிதிவண்டி மற்றும் அதன் உதிரிப்பாக விற்பனை இடம்பெறுகிறது.

ஐரோப்பிய ஒன்றியம், சீனாவின் மிதிவண்டிகளை இறக்குமதிக்கு முதல்முறையாக 1993 ஆம் ஆண்டில் தீர்வை விதித்தது.

அதன்பின்னர் தொடர்ச்சியாக அதிகரிக்கப்பட்டு கடந்த ஆண்டில் 48.5 வீத தீர்வை அறிவிக்கப்பட்டது. இது 2014 ஆம் ஆண்டு வரை நடைமுறையில் இருக்கும். சீனாவின் இந்தச் செயற்பாட்டிற்குத் துணைபோனதால், கடந்த ஒக்ரோபர் மாதம், இலங்கையின் மிதிவண்டி ஏற்றுமதி திடீரென இரட்டிப்பாகியது கண்டறியப்பட்டுள்ளது.

...டுத்தனமாக மிதிவண்டி ஏற்றுமதி செய்ததால், ஐரோப்பிய ஒன்றிய சட்டங்களின் படி, சீனா மீதான தீர்வைக் கட்டுப்பாடுகள் மேலும் ஆறு மாதங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது. அதே வேளை இலங்கையின் மிதிவண்டி ஏற்றுமதியும் ஐரோப்பிய ஒன்றியத்தின் கடும் கண்காணிப்புக்கு உள்ளாகியுள்ளது.

## வவுனியா பேருந்தில் கஞ்சா கடத்தல் நடத்துநர் கைது

எம்பிலிபிட்டியவில் இருந்து வவுனியா நோக்கிச் சென்ற தனியார் பயணிகள் பேருந்தில் கஞ்சா கடத்திச் சென்ற குறித்த பேருந்தின் நடத்துனர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தம்புள்ளை - குருநாகல் வீதியின் கொக்கரெல்ல பகுதியில் வைத்து குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார். அதன்போது பேருந்து நடத்துநர் வசம் இருந்து 4 கிலோ கிராம் கஞ்சா மீட்கப்பட்டுள்ளது. சந்தேகநபர் குருநாகல் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு எதிர்வரும் 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

## நீதவான் மீது மலம் வீசிய... 5 வருட கடூழிய சிறைத்தன்...

(கொழும்பு)

நீதவான் மீது மனித மலத்தை வீசி எறிந்த நபருக்கு ஐந்தாண்டு கால கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. சிலாபம் நீதிமன்றத்தினால் இந்தத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

நீதவானின் ஆசனத்தின் மீது மனித மலத்தை நபர் ஒருவர் வீசி எறிந்துள்ளார்.

பாலியல் குற்றச் செயலில் ஈடுபட்டதாக குற்ற... நபர் ஒருவர் வ... ணைகளின் இடை... வாறு மலத்தை ... ளார். மலத்தை வீ... ருக்கு ஐந்து ஆண்... தண்டனையும், ... விதிக்கப்பட்டுள்ள...

உயர் நீதிமன்... மாலினி குணரட்ன... டனையை விதித்...

## வல்லிபுர கடல் தீர்த்தத்தி... சென்று வந்தவரின் சங்கிலி ...

(நெல்லியடி)

வல்லிபுர ஆழ்வார் கடல் தீர்த்தத்திற்கு சென்று விட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்த பெண் ஒருவரின் சங்கிலியை மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் அபகரித்துச் சென்றுள்ளனர்.

நேற்றிரவு 8.30 மணியளவில் நெல்லியடி மகாத்மா வீதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் நெல்லியடி ஐயனார் கோவிலடியைச் சேர்ந்த இரத்தினம் யோகம் (வயது - 65) என்பவரின் சங்கிலியே அபக... ளது.

சம்பவம் பற்றி ... வருவதாவது,

வல்லிபுர ஆழ்... தீர்த்தத்திற்கு சென்... றிரவு நெல்லியடி ... தில் இறங்கி ... வீதியூடாக அவர் ந... வேளை அவரைப்... ந்து மோட்டார் சை... இருவர் அவரின் ... அறுத்துச் சென்று...

# யாழில் 30 வருடங்களின் பின்... புத்ததர்ம பாடசாலை ஆரம்...

(யாழ்ப்பாணம்)

முப்பது வருடகால யுத்தத்திற்கு பின் மீண்டும் யாழ்ப்பாணத்தில் புத்ததர்ம அறநெறிப் பாடசாலையின் ஆரம்பநிகழ்வு இன்று மாலை 3.00 மணிக்கு யாழ்ப்பாணம் நாகவிகாரையில் தமிழ் பௌத்த சங்கத் தலைவர் ரவிக்குமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

கடந்த மூன்று தசாப்தகால யுத்தத்திற்கு முன்பு வடமாகாணத்தின் பல பாகங்களிலும் தமிழ் புத்த மதம் காணப்பட்டது எனினும் நாட்டில் நடைபெற்ற யுத்தத்தின் காரணமாக புத்ததர்ம பாடசாலையை இயக்க முடியாது காணப்பட்டது. எனினும் மீண்டும் தற்போது நாட்டில் காணப்படும் சாதாரண சூழல் மீண்டும் தமிழ் புத்ததர்ம அறநெறி பாடசாலையை மீண்டும் யாழில் இயக்கும் நிலை உருவாகியுள்ளது.

தமிழ், பௌத்த சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் இன்று ஆரம்பிக்கப்படும் தமிழ் பௌத்த சங்க அறநெறிப் பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்களின் சிறப்பான செயற்பாடு எதிர்காலத்தில் வடக்கு மாகாணத்தில் உள்ள இனக் குழுக்களிடையே நல்லிணக்கத்தை வளர்க்க அடித்தளம் இடும் என தமிழ் பௌத்த சங்க செயலாளர் சு.கிருசானந் தெரிவித்தார்.

கடந்த கால யுத்தத்திற்கு முன் யாழ்ப்பாணத்தில் 15,000 இற்கு மேற்பட்ட உறுப்பினர்களுடன் இயங்கிவந்த தமிழ் பௌத்த சங்கம் கடந்த காலத்தில் விடுதலைப் புலிகளின் ஆதிக்கம் காரணமாக இயங்க முடியாது காணப்பட்டது.

எனினும் தற்போது நாட்டின் அனைத்துப் பாகங்களிலும் நிலவும் சாதாரண நிலைமை மீண்டும் தமிழ் மக்கள் சிங்கள மக்களுடன் ஒன்றாக சகோதரத்துடன் வாழும் நிலை தோன்றியுள்ளது. இது தற்போதைய மக்களிடையே வரவேற்பை பெற்றுள்ளது.

தற்போது தமிழர், சிங்களவர் ஒருவரோடு ஒருவர் பேசிப் பழக ஆர்வம் காட்டுகின்ற... இவர்கள் பேசிப்... மொழி ஒரு இடையூ... படுகிறது.

இத்தகைய பிர... தீர்க்கும் நோக்குட... தர்ம கோட்பாடுகள் ... வர்கள் கடைப்பிடிக்... சமய அனுட்டானங்... கும் ஒரு நிலை... இருக்கும். மேலும் ... றுமைக்காகவும் ப... தமிழ் பௌத்த சங்... ளர் சு.கிருசானந் ... வித்துள்ளார்.

## அரசியல் மயப்படுத்தப்... பல்கலை பேராசிரியர் ச...

(கொழும்பு)

பல்கலைக்கழக பேராசிரியர் சங்கம் அரசியல் ம... பட்டுள்ளதாக பிரதி உயர்கல்வி அமைச்சர் நந்திமித்ர ... தெரிவித்துள்ளார்.

தனிப்பட்ட அரசியல் காரணங்களை முதனி... போராட்டங்கள் நடத்தப்பட்டு வருவதாக அவர் குறிப்...


மொத்த தேசிய உற்பத்தியில் 6 வீதம் கல்வித்து... கப்பட வேண்டும் என தொழிற்சங்கங்கள் கோர வேண்... யமில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமது உரிமைகளுக்காகவே தொழிற்சங்கங்கள் போரா... வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

கல்வித்துறைக்கு 6 வீதம் ஒதுக்கப்பட வேண்டும் ... வலியுறுத்த போதியளவு அரசியல்வாதிகள் நாட்டில் இரு... அவர்கள் அந்தக் கோரிக்கையை நாடாளுமன்றில் முன்... எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தொழிற்சங்கமொன்று இது பற்றி கவலைப்பட... அவசியமில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கல்வித்துறையை மேம்படுத்த பாரியளவிலான நிதி ... ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவி...



நேற்று இடம்பெற்ற வல்லிபுர ஆழ்வாரின் தீர்த்தத் திருவிழாவில் சுவாமி தீர்த்தமாட கட... எழுந்தருள்வதையும், தீர்த்தமாடிய ஆஞ்சநேயர் பக்தர்களுக்கு அருள்பாலிப்பதையும் காணல...

# நவுறு தீவிற்கு செல்ல மறுத்த 28 பேர் நாடு திரும்பினர்

(கொழும்பு)

அவுஸ்ரேலியாவில் அகதி அந்தஸ்து கோரிச் சென்ற இலங்கையர்களில் 28 பேர் விசேட விமானம் மூலம் நாடு திரும்பினர். சட்டவிரோதமாக அவுஸ்ரேலியா... சென்றிருந்த இவர்கள் கிறிஸ்மஸ் தீவில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று நாடு திரும்பினர்.

இவர்களை கிறிஸ்மஸ் தீவிலிருந்து தென் பசுபிக் கடற்பரப்பில் அமைந்துள்ள நவுறு தீவுக்கு அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கைகளை அவுஸ்ரேலிய அரசு மேற்கொண்டிருந்த நிலையில் அங்கு செல்ல விரும்பாத இவர்கள் மீண்டும் இலங்கை திரும்ப விரும்புவதாக அறிவித்ததை அடுத்தே விசேட விமானம் மூலம் அவர்களை அவுஸ்ரேலிய அரசு அனுப்பி வைத்துள்ளது.

23 சிங்களவர்கள், மூன்று தமிழர்கள், முஸ்லிம் மற்றும் பறங்கியர் ஒருவர் என 28 பேர் நேற்றைய தினம் நாடு திரும்பியுள்ளனர்.

# இலங்கையருடன் சென்ற அகதிகள் படகு பிடிபட்டது

அவுஸ்ரேலியாவை நோக்கிச் சென்றதாகக் கூறப்படும் புகலிடக் கோரிக்கையாளர்களைத் தாங்கிய படகொன்று நேற்று முன்தினம் மாலை அவுஸ்ரேலிய கடற்பரப்பில் வைத்து அவுஸ்ரேலியக் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொகோஸ் தீவுகளுக்கு அப்பால் உள்ள கடற்பரப்பில் வைத்து வழிமறிக்கப்பட்ட குறித்த படகில் 72 புகலிடக் கோரிக்கையாளர்கள் இருந்ததாகவும், அவர்கள் வழமையான சோதனைகளுக்காக கிறிஸ்மஸ் தீவுகளுக்கு அழைத்துச் செல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் படகில் இலங்கையர்களும் இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுவதாக அவுஸ்ரேலியக் கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

# 14 இலங்கையரை நாடு கடத்தியது இந்தியா

இந்தியாவின் கேரள மாநிலத்திலிருந்து சட்டவிரோதமான முறையில் படகு மூலம் அவுஸ்ரேலியா செல்ல முயன்ற இலங்கையர்கள் 14 பேர் நேற்றைய தினம் நாடு திரும்பினர்.

இந்தியப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டிருந்த மேற்படி 14 பேரும் அந்நாட்டிலிருந்து நாடு கடத்தப்பட்ட நிலையில் நேற்று இலங்கை திரும்பியதாக கட்டு நாயக்க சர்வதேச விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர், கேரளாவுக்கு சென்றிருந்த நிலையிலேயே அந்நாட்டு பொலிஸாரால் இவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

படகு மூலம் அவுஸ்ரேலியா செல்வதற்காக கேரளாவைச் சேர்ந்த ஒருவருக்கு இவர்கள் தலா ஒன்றரை இலட்சம் ரூபா வீதம் வழங்கியுள்ளனர் என்று விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது.

இவர்களிடமிருந்து பணம் பெற்றுக்கொண்டுள்ள இந்திய முகவர் தற்போது தலைமறைவாகியுள்ள நிலையில் அவரைத் தேடி கைது செய்யும் நடவடிக்கைகளில் இந்தியப் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர் என்று விமான நிலைய அதிகாரிகள் மேலும் கூறினர்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 செப்ரெம்பர் 30 ஆம் திகதி அச்சிட்டு வெளியி...